# அரையாண்டு

# நிதி நிலைமை அறிக்கை - 2021

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

**மஹிந்த ராஜபக்ஷ, பா.உ.**
**கௌரவ நிதி அமைச்சர்**

2021 ஜூன் 30 ஆம் திகதி

CM 34058-65 (07/2021)

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட**

# அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின் படி நிதி அமைச்சரானவர் வருடத்தின் ஜூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொது மக்களுக்கு சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையைப் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் கடன் பெறுகைகளின் செயலாற்றுகைகளைக் கொண்டுள்ளது.மேலும் இவ்வறிக்கை 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான தற்காலிக வரவுசெலவுத் திட்டத்தின் வெளிப்பாடு, பேரண்டப் பொருளாதார செயற்திறன்கள், விலை மேம்பாடுகள், வெளிநாட்டு நிதி, அரசாங்கத்தின் படுகடன், உத்தியோகபூர்வ இருப்புக்கள் மற்றும் அரசுடமை தொழில் முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகைகளை கிடைத்த தகவல்களுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு வழங்குகின்றது.

# பொருளடக்கத்தின் அட்டவணைகள்


**அத்தியாயம் 1**

**பொருளாதார முன்னோக்குகைகள்** ................................................ **01**
மேன்நோக்கு ................................................ 01
பணவீக்கம் ................................................ 02
பணம் மற்றும் கடன் ................................................ 03
பங்குச் சந்தை ................................................ 03
வெளித்துறை அபிவிருத்திகள் ................................................ 04
உலக பொருளாதார முன்னோக்குகைகள்................................................ 07

**அத்தியாயம் 2**

**அரசிறை அபிவிருத்திகள்** ................................................ **17**
மேன்நோக்கு ................................................ 17
அரசாங்க வருமானம் ................................................ 19
அரசாங்க செலவினம் ................................................ 35
பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை ................................................ 44

**அத்தியாயம் 3**

**அரசுடைமை தொழில்முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகை** ................................................ **49**
மேன்நோக்கு ................................................ 49
பிரதான பத்து அரசுடமை தொழில் முயற்சி நிறுவனங்கள்
பற்றிய மீளாய்வு ................................................ 49

**அத்தியாயம் 4**

**வெளிநாட்டு நிதியளிப்பு** ................................................ **57**
மேன்நோக்கு ................................................ 57
வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள்................................................ 57
வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் மற்றும் பயன்பாடு................................................ 59
உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி ................................................ 60
வெளிநாட்டுகடன் பங்கு மற்றும் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் ..... 60

## பிரதான பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி 2020 | 2021 (தற்காலிக) |
|---|---|---|---|---|
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதலாம் காலாண்டு | % | -1.8 | த.இ. |
| விவசாயம் | முதலாம் காலாண்டு | % | -6.5 | த.இ. |
| கைத்தொழில் | முதலாம் காலாண்டு | % | -7.9 | த.இ. |
| சேவைகள் | முதலாம் காலாண்டு | % | 2.9 | த.இ. |
| பணவீக்கம் (புள்ளிக்குப் புள்ளி) | மேமாத இறுதியில் | % | 5.2 | 6.1 |
| பணவீக்கம் (சராசரி) | மேமாத இறுதியில் | % | 5.2 | 5.4 |
| வேலையின்மைவீதம் | வருடாந்தம் | % | 5.5 | த.இ. |
| தொழிற்படைபங்கேற்பு | வருடாந்தம் | % | 50.6 | த.இ. |
| **அரசிறைதுறை** | | | | |
| வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை | ஜன - ஏப் | ரூபா. மில். | -452,175 | -520,543 |
| மொத்த வருமானம் | ஜன - ஏப் | ரூபா. மில். | 476,733 | 481,722 |
| வரி வருமானம் | ஜன - ஏப் | ரூபா. மில். | 408,484 | 427,261 |
| வரியல்லா வருமானம் | ஜன - ஏப் | ரூபா. மில். | 68,248 | 54,461 |
| மீண்டெழும் செலவினம் | ஜன - ஏப் | ரூபா. மில். | 823,844 | 890,085 |
| அரசாங்க முதலீடு | ஜன - ஏப் | ரூபா. மில். | 118,928 | 114,227 |
| அரசாங்க படுகடன் | டிச. மாத இறுதியில் | ரூபா. பில். | 15,117 | த.இ. |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 2,931.9 | 3,800.3 |
| அதில், விவசாய ஏற்றுமதிகள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 626.8 | 829.4 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 2,294.8 | 2,949.4 |
| புடவை மற்றும் ஆடைகள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,320.1 | 1,699.5 |
| ஏனையவை | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 974.7 | 1,249.9 |
| இறக்குமதிகள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 5,625.3 | 6,748.1 |
| நுகர்வுபொருட்கள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,268.6 | 1,276.5 |
| இடைநிலைப் பொருட்கள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 3,115.7 | 4,065.7 |
| அதில்,பெற்றோலிய உற்பத்திகள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,070.1 | 1,390.3 |
| முதலீட்டுப் பொருட்கள் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,233.4 | 1,403.1 |
| வர்த்தகமீதி | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | -2,693.4 | -2,947.8 |
| உல்லாசப் பயணிகளின் வருகை | ஜன - ஏப் | எண்ணிக்கை | 507,311 | 13,797 |
| சுற்றுலாத்துறை வருமானம் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 682 (அ) | 19 (ஆ) |
| தொழிலாளர்கள் பணவனுப்பல் | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,975 | 2,386 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | -28 | -107 |
| மொத்த சென்மதி நிலுவை | ஜன - ஏப் | ஐ.அ.டொ. மில். | -290 | -929 |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் | ஏப்.மாத இறுதியில் | ஐ.அ.டொ. மில். | 7,210 | 4,471 |
| நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்) | மேமாத இறுதியில் | ஐ.அ.டொ. இற்கானரூபா | 186.29 | 199.50 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | ஜன - மே | ஐ.அ.டொ. இற்கானரூபா | 187.87 | 199.58 |
| **நாணயத்துறை** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | மேமாத இறுதியில் | % | 5.5 | 4.5 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | மேமாத இறுதியில் | % | 6.5 | 5.5 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | மேமாத இறுதியில் | % | 4.0 | 2.0 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கி சராசரி(AWPLR) | மேமாத இறுதியில் | % | 9.3 | 5.7 |
| கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி(AWLR) | ஏப்.மாத இறுதியில் | % | 13.1 | 9.7 |
| இலங்கையின் வங்கிக்கிடையேயான வழங்கல் விகிதம் (SLIBOR ) (01 மாதம்) | மேமாத இறுதியில் | % | 6.4 | த.இ. (இ) |
| திறைசேரிஉண்டியல் விளைவு விகிதம் (91 நாட்கள்) | மேமாத இறுதியில் | % | 6.7 | 5.1 |
| திறைசேறி உண்டியல் விளைவு விகிதம் (364 நாட்கள்) | மேமாத இறுதியில் | % | 6.9 | 5.2 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_2b$) | ஏப் 2021/ஏப் 2020 | % | 13.2 | 20.4 |
| தனியார் துறைகடன் வளர்ச்சி | ஏப் 2021/ஏப் 2020 | % | 7.6 | 8.2 |

(அ) 2020 ஆம் ஆண்டிற்கான சராசரி தங்குமிடம் மற்றும் ஒருநாளுக்கு சராசரி செலவினம் மீதான SLTDA இன் முடிவுகளின் அடிப்படையில் கொண்டு திருத்தப்பட்டது.

(ஆ) SLTDA தனது 2021 இற்கான கணக்கெடுப்பு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் இந்த தற்காலிக மதீப்பீடு திருத்தப்படலாம்

(இ) 2020 ஜுலை 01 ஆம் திகதி முதல் SLIBOR இன் தொகுப்புக்கள் மற்றும் வெளியீடுகள் நிறுத்தப்பட்டுள்ளது.

## இலங்கை : தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோக மட்டம் | 2016 | % | 99.3 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பானகுடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2020 | சனத்தொகை % | 93.2 |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2020 | சனத்தொகை % | 53.1 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2020 | கி.மீ.[2] | 0.19 |
| வீதிகளின் மொத்தநீளம் | 2020 | கி.மீ. | 12,496 |
| **தொடர்பாடல்** | | | |
| செல்லிட தொலைபேசி உள்ளடங்கலாக தொலைப்பேசிக்கான அடர்த்தி | 2020 | ஒவ்வொரு 100 பேருக்கு | 143 |
| இணையத்தள வலைப்பின்னலுக்கான அடைவு | 2020 | ஒவ்வொரு 100 பேருக்கு | 79.9 |
| **கல்வி** | | | |
| **பொதுக் கல்வி** | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் விகிதம் | 2019 | % | 91.1 |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2020 | எண்ணிக்கை | 16 |
| எழுத்தறிவு வீதம் (சராசரி) | 2019 | % | 92.9 |
| கணிணி அறிவு வீதம் (முதல் 06 மாதங்கள்) | 2020 | % | 32 |
| **பல்கலைக்கழகக் கல்வி** | | | |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2020 | எண்ணிக்கை | 18.9 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகிதம் (வயது 19-23 வருடங்கள்) [அ] | 2020 | % | 8.2 |
| **சுகாதாரம்** | | | |
| வைத்தியசாலகள் (மேற்கத்தேய மருத்துவம்) (ஆ) | 2020 | எண்ணிக்கை | 609 |
| கட்டில்களின் எண்ணிக்கை (ஆ) | 2020 | எண்ணிக்கை | 77,121 |
| வைத்தியசாலை கட்டில்கள் | 2020 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 3.5 |
| வைத்தியர்/நோயாளர்களின் சராசரிவிகிதம் | 2020 | எண்ணிக்கை | 1,117 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2020 | சதுரமி.மீ. ஆட்கள் | 350 |
| சனத்தொகை வளர்ச்சி | 2020 | % | 0.5 |
| ஆயள் எதிர்பார்க்கை | 2017 | வருடங்கள் | 75.5 |
| சிசுமரணவீதம் | 2015 | 1000 பிறப்புகளுக்கு | 8.5 |
| தாய் மரணவீதம் | 2013 | 1001 பிறப்புகளுக்கு | 26.8 |
| பருமட்டான பிறப்பு வீதம் | 2020 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 13.8 |
| பருமட்டான இறப்பு வீதம் | 2020 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 6.0 |
| தங்கி வாழ்வோர் வீதம் | 2020 | % | 49.4 |
| **வறுமை** | | | |
| வறுமை ஆள் கணக்கெடுப்பு சுட்டெண் | 2016 | % | 4.1 |
| குடும்ப வருமானத்தின் கினிக் குணகம் | 2016 | குணகம் | 0.45 |
| வறுமை இடைவெளி | 2016 | % | 0.6 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பொறுமானம் | 2016 | கிலோகலோரிகள் | 2,095 |
| **சர்வதேச தரப்படுத்தல்** | | | **தரம்** |
| மனித அபிவிருத்தி சுட்டெண் | 2020 | 189 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 72 |
| வியாபாரம் புரிவோர் சுட்டெண் | 2019 | 190 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 99 |
| உலகளாவிய போட்டித் தன்மைசுட்டெண் | 2019 | 140 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 84 |
| பொருளாதார சுதந்திர சுட்டெண் | 2020 | 178 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 131 |
| உலகளாவிய சமாதான சுட்டெண் | 2020 | 163 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 77 |
| இலத்திரனியல் - ஆட்சிமுறை அபிவிருத்தி சுட்டெண் | 2020 | 193 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 80 |

(அ) மாணவர்களின் உள்நுழைவினை மாத்திரம் உள்ளடக்குகின்றது

(ஆ) அரசாங்கம்

# அத்தியாயம் 1

# பொருளாதார முன்னோக்குகைகள்

## மேன்நோக்கு

கொவிட்-19 தொற்றுநோய்த் தடுப்பிற்கான இலங்கையின் செயற்பாடுகள் தொற்று பரவுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் குறைத்தலை உள்ளடக்கிய பரந்த அடிப்படையிலானவையாக அமைந்துள்ளன. தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் அல்லாத தலையீடுகளான முகக்கவசங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துதல் போன்ற கலப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் வெற்றிகரமாகப் பயன்படுத்திய அதே சமயம், சமுர்த்தி போன்ற சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் மற்றும் மூத்தோர்களுக்கான மாதக் கொடுப்பனவு மற்றும் பண மானியங்கள் ஆகியவற்றின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவியளிக்கப்பட்டது.முடக்கப்பட்ட பகுதிகளில் நடமாடல் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக பெரும்பாலும் தற்காலிகமாக வேலையில்லாமல் உள்ளோர் மற்றும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இலங்கை நடமாடல் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளதுடன் பெரிய அளவிலான முடக்கல் நடவடிக்கைளுக்குப் பதிலாக உள்ளூர் ரீதியான முடக்குதல்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதனால், நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதை நெருங்குகிறது. 2021, பெப்ரவரியில் தொடங்கி இதுவரை, கிட்டத்தட்ட 3,506,000 தடுப்பூசி அளவைகள் நாடு முழுவதும் வழங்கப்பட்டுள்ளன. சனத்தொகையில் குறைந்தது 60 சதவீத மக்கள் தடுப்பூசி வழங்கப்படுவதைஉறுதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் முன்னேற உதவும் அதே வேளை துரித வேகத்தில் மீட்டெடுக்கப்படவும் துணை புரிவதோடு, இலங்கையில் தடுப்பூசிகள் தயாரிப்பு ஆரம்பிக்கப்படுவதனால் இது சாத்தியமாகவுள்ளது.

பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்வதற்காக தனியார் துறையை, முக்கியமாக தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் அதே வேளையில் நாட்டின் மொத்தக் கேள்வியை அதிகரிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் அரசிறை மற்றும் நிதிக் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இதற்காக ஏற்கனவே தாபிக்கப்பட்ட எளிமையானதும் வெளிப்படையானதுமான வரி முறைமையும் இடவசதி நாணயக் கொள்கை நிலைப்பாடும் உதவியளித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது நன்கொடைகள் உட்பட அரசாங்க வருமானம், 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டு வருமானமாகிய ரூபா.1,961 பில்லியனில் ஏறக்குறைய 25 சதவீதமாகிய ரூபா.482.3 பில்லியனினை அடையப்பெற்றது.

2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில்,பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்வதற்காக தனியார் துறைக்கான கடனை விரைவுபடுத்துவதன் ஊடாக பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக ஒரு இடவசதி நாணய நிலைப்பாடு தொடர்ந்தது. எனவே, சந்தை வட்டி விகிதங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கி அவற்றின் வரலாற்றில் குறைந்த மட்டங்களைக் காண்பித்துள்ளன. இதன்மூலம் கடன் வாங்கும் செலவுகள் குறைந்து,தனியார் துறைக் கடன் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் ரூபா.6,445.9 பில்லியன் வரை 8.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கிடையில், ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் 4-6 சதவீத சீரான போக்கில் பரவலாகக் காணப்பட்டது.

தொற்றுநோயால் ஏற்படும் சவால்களுக்கு மத்தியில் வெளித் துறை நெகிழ்வுடன் காணப்பட்டது. புடைவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், விவசாய ஏற்றுமதிகளான தேயிலை. வாசனைத் திரவியங்கள், தேங்காய் மற்றும் கனிமப்பொருட்கள் ஆகியவற்றின் வருமானம் அதிகரித்தன் விளைவாக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதியின் வருவாய் 29.6 சதவீதம் அதிகரித்து 3,800 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. மேலும், உணவு மற்றும் பானங்கள், மருத்துவ மற்றும் மருந்துப் பொருட்கள், எரிபொருள், புடைவைகள்,இரசாயன மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள், இயந்திரத்தொகுதியும் உபகரணங்களும் மற்றும் கட்டுமானப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்ததன் காரணமாக இறக்குமதிக்கான செலவு 20.0 சதவீதத்தினால் ஐ.அ.டொ.6,748 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொ.2,948 மில்லியன்களாக விரிவடைந்தது. தொழிலாளர்களின் பண அனுப்பல் 20.8 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ.2,386 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. பீப்பிள்ஸ் பாங்க் ஆப் சீனா வங்கியுடனான ஐ.அ.டொ.1.5 பில்லியனினைக் கொண்ட SWAP உடன்படிக்கையைத் தவிர்த்து நாட்டின் ஒதுக்கு நிலை ஐ.அ.டொ.4.5 பில்லியனாக இருந்தது.

தொற்றுநோய் காரணமாக கடுமையான அழுத்தங்கள் இருந்தபோதிலும், இலங்கை இதுவரை படுகடன் சேவையில் ஒரு களங்கமற்ற பதிவைப் பேணி வந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விகிதத்திற்கான வெளிநாட்டுப் படுகடன் 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழுவின் புதிய முதலீட்டு நடவடிக்கை மற்றும் மத்திய வங்கியால் சந்தையில் இருந்து ஏற்றுமதி வருமானம் மற்றும் தொழிலாளர் பணம் அனுப்புதல்

ஆகியவற்றின் கொள்வனவு, பல்தரப்பு மற்றும் இருதரப்பு மூலங்களிலிருந்து அரசாங்கத்திற்கான பிற வரவுகளுடன் படுகடன் அல்லாத வரவுகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கிடைக்கப்பெறவுள்ள SWAP உடன்படிக்கை வசதிகளானவை: 2021, ஜுலையில் பங்காளதேஷ் வங்கியிடமிருந்து ஐ.அ.டொ.250 மில்லியன்; 2021 ஆகஸ்ட்டில்இந்திய ரிஸர்வ் வங்கியிடமிருந்து சார்க் நிதி SWAP வசதியாக ஐ.அ.டொ.400 மில்லியன்; மற்றும் இந்திய அரசாங்கத்துடன் ஐ.அ.டொ.1,000 மில்லியன் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆகஸ்ட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் SDR ஒதுக்கீட்டின் கீழ் ஐ.அ.டொ. 800 மில்லியன் எதிர்பார்க்கப்படுகிறது.

### பணவீக்கம்

நன்கு தொகுக்கப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புகளையும், ஒடுங்கிய மொத்தக் கேள்வியையும் பிரதிபலிக்கும் வகையில், பணவீக்கம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் குறைந்திருந்தது. இருப்பினும், பாதகமான காலநிலை நிலைமைகளால் உந்தப்பட்ட விநியோக பக்கத்திலான இடையூறுகள் மற்றும் மீண்டும் தொடங்கிய கொவிட்-19 தொற்றுநோயின் மூன்றாவது அலையுடன் இணைந்து 2021 மார்ச் முதல் சில பணவீக்க அழுத்தங்கள் ஏற்பட்டிருந்தன. இதுபோன்று, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI, 2013 = 100) ஆண்டுக்கு ஆண்டு (YOY) மாற்றத்தின் தலைப்பு பணவீக்கம் 2021 ஜனவரியில் 3.7 சதவீதமாக இருந்து 2021 மே மாதத்தில் 6.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த காலகட்டத்தில் உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்கள் ஆகிய இரண்டிலும் விலைகள் அதிகரித்தன் பிரதிபலிப்பாக இது அமைந்திருந்தது. இதேபோல்,YOY மாற்றத்தின் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி(CCPI, 2013 = 100)2021 ஜனவரியில் 3.0 சதவீதத்திலிருந்து 2021 மே மாதத்தில் 4.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. முக்கிய பணவீக்கம், நாட்டின் அடிப்படை பணவீக்கத்தை பிரதிபலிக்கிறது. 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் NCPI மற்றும் CCPI ஆகியவை குறைந்திருந்தாலும், ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மற்றும் நடுத்தர காலப்பகுதியில் 4-6 சதவிகிதம் கொண்ட ஒரு சீரான போக்கில் பரவலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 1.1 : பணவீக்க அசைவுகள் (%)**

| வருடம் | மாதம் | கொ.நு.வி.சு. (2013=100) தலைக்குரிய பணவீக்கம் புள்ளிக்குப் புள்ளி | கொ.நு.வி.சு. தலைக்குரிய பணவீக்கம் ஆண்டுச் சராசரி | கொ.நு.வி.சு. அடிப்படை பணவீக்கம் * புள்ளிக்குப் புள்ளி | கொ.நு.வி.சு. அடிப்படை பணவீக்கம் * ஆண்டுச் சராசரி | தே.நு.வி.சு. (2013=100) தலைக்குரிய பணவீக்கம் புள்ளிக்குப் புள்ளி | தே.நு.வி.சு. தலைக்குரிய பணவீக்கம் ஆண்டுச் சராசரி | தே.நு.வி.சு. அடிப்படை பணவீக்கம் * புள்ளிக்குப் புள்ளி | தே.நு.வி.சு. அடிப்படை பணவீக்கம் * ஆண்டுச் சராசரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020 | ஜனவரி | 5.7 | 4.5 | 3.0 | 5.3 | 7.6 | 4.1 | 3.9 | 5.6 |
| | பெப்ரவரி | 6.2 | 4.6 | 3.2 | 5.1 | 8.1 | 4.5 | 3.4 | 5.5 |
| | மார்ச் | 5.4 | 4.7 | 2.9 | 4.9 | 7.0 | 4.9 | 3.2 | 5.2 |
| | ஏப்ரல் | 5.2 | 4.8 | 3.1 | 4.7 | 5.9 | 5.1 | 3.2 | 5.0 |
| | மே | 4.0 | 4.7 | 2.9 | 4.4 | 5.2 | 5.2 | 3.7 | 4.8 |
| | ஜுன் | 3.9 | 4.7 | 3.1 | 4.2 | 6.3 | 5.6 | 4.4 | 4.6 |
| | ஜுலை | 4.2 | 4.8 | 3.2 | 4.0 | 6.1 | 5.9 | 4.5 | 4.5 |
| | ஆகஸ்ட் | 4.1 | 4.8 | 3.2 | 3.8 | 6.2 | 6.1 | 4.6 | 4.4 |
| | செப்டெம்பர் | 4.0 | 4.7 | 2.9 | 3.6 | 6.4 | 6.2 | 4.8 | 4.3 |
| | ஒக்டோபர் | 4.0 | 4.6 | 3.0 | 3.4 | 5.5 | 6.2 | 4.5 | 4.2 |
| | நவம்பர் | 4.1 | 4.6 | 3.0 | 3.2 | 5.2 | 6.3 | 4.5 | 4.2 |
| | டிசெம்பர் | 4.2 | 4.6 | 3.5 | 3.1 | 4.6 | 6.2 | 4.7 | 4.1 |
| 2021 | ஜனவரி | 3.0 | 4.3 | 2.7 | 3.1 | 3.7 | 5.8 | 4.2 | 4.2 |
| | பெப்ரவரி | 3.3 | 4.1 | 2.6 | 3.0 | 4.2 | 5.5 | 4.1 | 4.2 |
| | மார்ச் | 4.1 | 4.0 | 3.1 | 3.0 | 5.1 | 5.3 | 4.3 | 4.3 |
| | ஏப்ரல் | 3.9 | 3.9 | 3.0 | 3.0 | 5.5 | 5.3 | 4.1 | 4.4 |
| | மே | 4.5 | 3.9 | 3.2 | 3.0 | 6.1 | 5.4 | 4.2 | 4.4 |

மூலம்: தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களம்

*கொ.நு.வி.சு. அடிப்படை பணவீக்கம் (2013=100) மாறுபடும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக

### பணம் மற்றும் கடன்

பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்வதற்காக தனியார் துறைக்கு கடன் விரைவுபடுத்துவதன் மூலம் பொருளாதார மறுமலர்ச்சிக்கு உதவுவதற்காக 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஒரு இடவசதி நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்ந்தது. இதனால், சந்தை வட்டி விகிதங்கள் குறையத் தொடங்கி அவற்றின் வரலாற்று குறைந்த மட்டங்களைப் பதிவு செய்தன. அதன்படி, ஒதுக்குப் பணம் YOY அடிப்படையில் 0.9 சதவீதமும் விரிந்த பணம் ($M_2b$) YOY அடிப்படையில் 20.4 சதவீதமும் அதிகரித்துள்ளன. தனியார் துறை கடன் 8.2 சதவீதம் அதிகரித்து 2021 ஏப்ரல் இறுதியில் ரூபா. 6,445.9 பில்லியனினைக் கொண்டிருந்தமை பொருளாதாரத்தின் மிகச் சிறிய(நுண்), சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்கலின் மேம்பாட்டினைப் பிரதிபலிக்கிறது. அரசாங்கத் துறைக்கான கடன் வழங்கலும் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 17.1 சதவீதத்தினால் ரூபா.1,093.4 பில்லியன் வரை அதிகரித்தது

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பேரண்டப் பொருளாதார மற்றும் நிதிச் சந்தை அபிவிருத்திகளுக்கு மத்தியில் பொருளாதார மறுமலர்ச்சிக்கு உதவியாக 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் நிலையான வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) ஆகியவற்றின் கொள்கை வட்டி விகிதங்கள் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதமாக தொடர்ந்தன. இதற்கிடையில், 2021 முதல் பாதியில் கொள்கை விகிதங்கள் மாறாமல் இருந்தன: வங்கி வீதம் 8.50 சதவீதமாகவும்: நியதிச் சட்ட ஒதுக்கு விகிதம் (SRR) 2.00 சதவீதமாகவும் இருந்தன.

**அட்டவணை 1.2 : நாணய மற்றும் தனியார்துறை கடன்**

ரூபா. பில்லியன்

| விடயம் | 2020 | | | | 2021 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | 2021 ஏப்ரல்/ 2020 ஏப்ரல் வளர்ச்சி வீதம் (%) |
| ஒதுக்கு நாணயம் | 935.6 | 963.3 | 1,013.8 | 1,021.6 | 975.9 | 978.1 | 1,028.6 | 1,031.1 | 0.9 |
| விரிந்த நாணயம் ($M_2b$) | 7,703.8 | 7,793.0 | 8,098.2 | 8,259.0 | 9,532.7 | 9,650.9 | 9,838.6 | 9,947.3 | 20.4 |
| தனியார் துறை கடன்கள் | 5,796.7 | 5,822.0 | 5,942.1 | 5,955.5 | 6,196.6 | 6,276.0 | 6,388.2 | 6,445.9 | 8.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### பங்குச் சந்தை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின்(CSE) நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது அதன் செயல்பாடுகள் தடையின்றி தொடர்ந்தமையால் 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. 2020 ஆம் ஆண்டில் தொற்றுநோயின் முதல் அலையுடன் ஒப்பிடும்போது, 2021 ஆம் ஆண்டில் தொற்றுநோயின் மூன்றாவது அலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நடமாடல் கட்டுப்பாடுகளுடன் காத்திரமான தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்டமை இதற்குக் காரணமாகும். பங்குச் சந்தை 2021 ஜனவரியில் அதிவேக வளர்ச்சியைக் கொண்டிருந்தது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 6,774.22 புள்ளிகளிலிருந்து 30.05 சதவீதத்தைப் பெற்று 2021 ஜனவரி 27 ஆம் தேதி வர்த்தகத்தின் முடிவில் 8,812.01 புள்ளிகளாக உயர்ந்தது. S&P SL 20 சுட்டி2020 ஆம் ஆண்டின் இறுதியில் 2,638.10 புள்ளிகளிலிருந்து 2021 ஜனவரி 29 அன்று வர்த்தகம் முடிவடையும் போது 3,514.18 புள்ளிகளாக33.21 சதவீதம் அதிகரித்துள்ளது. இருப்பினும்,ASPIமற்றும் S&P SL 20ஆகிய இரண்டும் பெப்ரவரி தொடக்கத்தில் இருந்து குறையத் தொடங்கின.தொற்றுநோயின் மூன்றாவது அலையின் ஆரம்பத்துடன் 2021 மார்ச்சு இரண்டாவது வாரத்தில் ASPIசுட்டி 6,854 புள்ளிகளாகவும், S&P SL 20 2,757.45 புள்ளிகளாகவும் சரிந்தது.ஜூன் 11 ம் தேதி வர்த்தகத்தின் முடிவில், ASPI சுட்டி 7,610.30 புள்ளிகளிலும், S&P SL 20 சுட்டி 3,067.03 புள்ளிகளிலும் இருந்தது. சந்தை மூலதனமாக்கல் 2020 மே மாதத்தில் ரூபா.2,266 பில்லியனில் இருந்து 2021 மே மாதத்தில் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு 44.21 சதவீதம் அதிகரித்து ரூபா.3,268 பில்லியனினைக் கொண்டிருந்தது. அதைப் போன்று தொற்றுநோய்க்கு முந்தைய அளவைத் தாண்டி தினசரி சராசரி புரள்வு 2021 மே மாத இறுதியில்ரூ.4,409 மில்லியனாக இருந்தது.இது 2020 ஆம் ஆண்டில்ரூ.1,899 மில்லியனாகவும் 2019 ஆம் ஆண்டில் ரூபா.711 மில்லியனாகவும் இருந்தது. இருப்பினும், 2021 முதல் ஐந்து மாதங்களில் நிகர வெளிநாட்டு விற்பனை துரிதப்படுத்தப்பட்டது. 2020 மே மாத இறுதியில்

ரூபா.12,260 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 மே மாத இறுதியில் நிகர வெளிநாட்டு விற்பனைரூபா.25,323 மில்லியன்களுக்கு அதிகரித்தது. வெளிநாட்டுக் கொள்வனவுகள் 2020 மே மாத இறுதியில் ரூபா.34,121 மில்லியனாக இருந்தாலும் 2021 மே மாத இறுதியில் ரூபா.19,527 மில்லியனைக் கொண்டிருந்தது.இது சதவீத 44.21 வீழ்ச்சியாகும்.

**அட்டவணை 1.3: மூலதன சந்தை அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | மே இறுதியில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2020 | 2021 |
| அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,228 | 6,369 | 6,052 | 6,129 | 6,774 | 4,847 | 7,403 |
| மிலங்கா விலைச் சுட்டெண்/S & P SL 20 சுட்டெண் | 3,496 | 3,672 | 3,135 | 2,937 | 2,638 | 2,016 | 2,979 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூபா. பில்.) | 2,745 | 2,899 | 2,839 | 2,851 | 2,961 | 2,266 | 3,268 |
| விற்பனை நிரைப்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 295 | 296 | 297 | 289 | 283 | 289 | 284 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூபா. மில்.) | 737 | 915 | 834 | 711 | 1,899 | 1,215 | 4,409 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூபா. மில்.) | 74,200 | 94,627 | 100,315 | 68,272 | 104,245 | 46,382 | 44,850 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூபா. மில்.) | 74,583 | 112,285 | 77,067 | 56,537 | 52,889 | 34,111 | 19,527 |
| தேறிய கொள்வனவுகள் | 384 | 17,658 | -23,248 | -11,735 | -51,356 | -12,271 | -25,323 |

மூலம்: கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

## வெளித்துறை அபிவிருத்திகள்

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வெளித் துறையானது ஒரு கலப்பு செயல்திறனை வெளிப்படுத்தியது: கைத்தொழில்துறை, விவசாய மற்றும் கனிம ஏற்றுமதி போன்ற அனைத்து வகை ஏற்றுமதிகளையும் அதிகரிப்பதன் மூலம் மொத்த ஏற்றுமதி 29.6 சதவீதம் அதிகரித்துள்ளது: மொத்த இறக்குமதிகள் 20 சதவீதம் வளர்ச்சியுற்றது. வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது: தொழிலாளர்களின் பணம் அனுப்பல் கணிசமாக உயர்ந்த அதேசமயம் சுற்றுலாத் துறையின் வருவாய் குறைவடைந்தது; மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் ஐ.அ.டொ.4.5 பில்லியனாக இருந்தது.

புடவை மற்றும் ஆடைகள், இறப்பர் பொருட்கள், விவசாய ஏற்றுமதிகளாகிய தேயிலை, வாசனைத் திரவியங்கள், தேங்காய் மற்றும் கனிமப் பொருட்கள் ஆகியவற்றின் வருவாய் அதிகரிப்பின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதியின் வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.2,932 மில்லியனுடன் ஒப்பிடும்போது 29.6 சதவீதத்தினால் அல்லது ஐ.அ.டொ.868 மில்லியனினால் ஐ.அ.டொ 3,800 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. அத்துடன், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ 5,625 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதிக்கான செலவு 20.0 சதவீதம் அல்லது ஐ.அ.டொ 1,123 மில்லியனினால் அதிகரித்து ஐ.அ.டொ 6,748 மில்லியனினைக் கொண்டிருந்தது. உணவு மற்றும் பானங்கள், சீனி மற்றும் மிட்டாய் மருத்துவ மற்றும் மருந்துப்பொருட்கள், எரிபொருள், புடவைகள், இரசாயன மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள், இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி செலவினங்கள் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். ஏற்றுமதிகளை மேவிய இறக்குமதிகளின் அதிகரிப்பு 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொ.2,948 மில்லியன் வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடையச் செய்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.2,693 மில்லியன்களாக இருந்தது.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தொழிலாளர்களின் பணம் அனுப்பல், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.1,975 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 20.8 சதவீதம் அல்லது ஐ.அ.டொ411 மில்லியன்களால் ஐ.அ.டொ.2,386 மில்லியன் வரை அதிகரித்துள்ளது, முறைசாரா வழிகளுக்குப் பதிலாக முறையான வழிகளுக்குப் பணத்தைத் திருப்புதல் மற்றும் இழப்பீடுகளினதும் முனைய சலுகைகளினதும் அதிகரிப்பு இதற்கு முக்கியமாக காரணமாக இருந்தது. இலங்கைக்கு வங்கிகள் மூலம் அனுப்பப்படும் அந்நிய செலாவணியின் சாதாரண பரிமாற்ற வீதத்திற்கு மேல் விட ஒரு டொலருக்கு 2 ரூபாய் விசேட ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டதன் மூலம் வெளிநாட்டு பணம் அனுப்பலுக்கு உதவியளிக்கப்பட்டது. மேலும், அதிக வட்டி விகிதத்துடன் சிறப்பு வைப்பு கணக்கு (SDA) அறிமுகப்படுத்தப்பட்டமை இலங்கைக்கான அதிக வெளிநாட்டு வருவாயின் உட்பாய்ச்சலை மேம்படுத்தியது.

'எயார் பப்ள்'எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியதன் மூலம், கொவிட்-19 இன் இரண்டாவது அலைக்குப் பிறகு சுற்றுலாத் துறை மீண்டும் வேகத்தை அடைந்தது. இருப்பினும், தொற்றுநோயின் மூன்றாவது அலை மீண்டும் எழுச்சியடைவதால் அதற்குஇடையூறு ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சுற்றுலாத்துறையின் வருவாய், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொ.19 மில்லியன் களாகக் குறைந்துள்ளது.

கொழும்பு பங்குச் சந்தை (CSE)2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொ.107 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 28 மில்லியன்களாக இருந்தது. அரசாங்கத்திற்கு மொத்த வருவாய் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொ. 799 மில்லியன் வரையில் குறைவடைந்தது. இதற்கிடையில், மொத்த உத்தியோகபூர்வ இருப்புக்கள் 2021 ஏப்ரல் மாத இறுதியில் ஐ.அ.டொ.4.5 பில்லியனாக இருந்த அதேவேளை, இது 3.1 மாத இறக்குமதிகளுக்கு சமமாகும். ஒட்டுமொத்த சென்மதி நிலுவை (BoP) 2021, ஏப்ரல் இறுதிக்குள் ஐ.அ.டொ.929 மில்லியன் பற்றாக்குறையைப் பதிவு செய்தது. இலங்கை ரூபாய் 2021 ஏப்ரல் இறுதிக்குள் அமெரிக்க டொலருக்கு எதிராக 0.3 சதவீத பெறுமானத் தேய்வை அடைந்தது.

**அட்டவணை 1.4 : வெளிநாட்டு வர்த்தகம் –ஜனவரி – ஏப்ரல் 2021**

ஐ.அ.டொ. மில்லியன்

| வகை | 2020 | 2021 (தற்காலிக.) | மூ மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **2,931.9** | **3,800.3** | **29.6** |
| விவசாய உற்பத்திகள் | 626.8 | 829.4 | 32.3 |
| தேயிலை | 348.4 | 417.4 | 19.8 |
| ஆரம்ப நிலை உற்பத்திகள் (இறப்பர், தெங்கு உற்பத்திகள்) | 93.5 | 139.0 | 48.7 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 184.9 | 273.0 | 47.6 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 2,294.8 | 2,949.4 | 28.5 |
| புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 1,320.1 | 1,699.5 | 28.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 192.2 | 122.1 | -36.5 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 782.6 | 1,127.8 | 44.1 |
| கனிப் பொருட்கள் | 5.9 | 16.0 | 171.2 |
| ஏனையவை | 4.4 | 5.6 | 27.3 |
| **இறக்குமதிகள்** | **5,625.3** | **6,748.1** | **20.0** |
| நுகர்வு பொருட்கள் | 1,268.6 | 1,276.5 | 0.6 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 563.2 | 628.8 | 11.6 |
| ஏனைய நுகர்வு பொருட்கள் | 705.4 | 647.7 | -8.2 |
| இடைநிலை பொருட்கள் | 3,115.7 | 4,065.7 | 30.5 |
| பெற்றோலியம் | 1,070.1 | 1,390.3 | 29.9 |
| உரம் | 55.0 | 82.2 | 49.5 |
| புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 768.9 | 938.6 | 22.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,221.7 | 1,654.6 | 35.4 |
| மூதலீட்டு பொருட்கள் | 1,233.4 | 1,403.1 | 13.8 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 685.5 | 913.0 | 33.2 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 187.4 | 107.7 | -42.5 |
| கட்டிட மூலப் பொருட்கள் | 359.4 | 381.8 | 6.2 |
| ஏனைய முதலீட்டு பொருட்கள் | 1.0 | 0.6 | -40.0 |
| ஏனையவை | 7.7 | 2.8 | -63.6 |
| **வர்த்தக மீதி** | **-2,693.4** | **-2,947.8** | **-9.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### ஏற்றுமதிகள்

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதியின் வருவாயைப் பொறுத்தளவில்2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 2,931.1 மில்லியனுடன் ஒப்பிடும்போது,29.6 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 3,800.3 மில்லியனாக உயர்ந்துள்ளமை தொற்றுநோயை நோக்கிய ஒரு பின்னடைவை பிரதிபலிக்கிறது. புடவை மற்றும் ஆடைகள், இறப்பர் பொருட்கள் மற்றும் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் ஆகியவற்றின் அதிகரித்த வருவாயின் பயனால் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் கைத்தொழில்துறை ஏற்றுமதியின் வருவாய் 28.5 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 2,949.4 மில்லியனினைக் கொண்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ் வருவாய் ஐ.அ.டொ. 2,294.8 மில்லியன் ஆகும். 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் புடவை மற்றும் ஆடைகளின் வருவாய் 28.7 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 1,699.5 மில்லியனாகக் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 1,320.1 மில்லியன் ஆகும். இறப்பர் பொருட்கள், உணவு, பானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களின் ஏற்றுமதி வருவாய் முறையே 44.3 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ.317.9 மில்லியன்களாகவும், 32.0 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ.167.4 மில்லியன்களாகவும், 63.5 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ.156.0 மில்லியன்களாகவும் காணப்பட்டது. பிற தொழில்துறை ஏற்றுமதிகளான இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள்,இரசாயன பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் 2021 முதல் நான்கு மாதங்களில் மொத்த ஏற்றுமதி வருவாய்க்கு கணிசமாக பங்களித்தன. இருப்பினும்,விமான மற்றும் சேமிப்புக்கல எரிபொருளின் வருவாய் வீழ்ச்சியின் காரணமாக பெற்றோலிய பொருட்களின் ஏற்றுமதி வருவாய் 36.5 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ.122.1 மில்லியனினைப் பதிவு செய்தது.

விவசாய ஏற்றுமதிகளிலிருந்து ஏற்றுமதி வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.626.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 32.3 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 829.4 மில்லியன் வரையான அதிகரிப்பிற்கு, முக்கியமாக தேயிலை வருவாய் 19.8 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 417.4 மில்லியனாகவும்வாசனைத் திரவியங்கள் 115.8 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 136.2 மில்லியனாகவும் தேங்காய் 45.9 சதவீதத்தினால் ஐ.அ.டொ.123.6 மில்லியனாகவும், கடல் உணவு 19.4 சதவீதத்தினால் ஐ.அ.டொ75.6 மில்லியனாகவும் அதிகரித்தமை பங்களித்துள்ளது. காய்கறிகள், இறப்பர் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை ஆகியவற்றின் வருவாய் முறையே 3.9 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 8.4 மில்லியனாகவும், 75.6 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 15.4 மில்லியனாகவும், 88.8 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 11.3 மில்லியனாகவும் காணப்பட்டது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சிறு விவசாய ஏற்றுமதிகளின் வருவாய் 6.6 சதவீதம் சரிந்து ஐ.அ.டொ.41.6 மில்லியனினைப் பதிவு செய்தது. இதற்கிடையில், கனிம ஏற்றுமதியின் வருவாய் குறிப்பிடத்தக்க வகையில் 172.6 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொ.16.0 மில்லியன்களை அடையப்பெற்றது.

### இறக்குமதிகள்

அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் மத்தியிலும்,இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதி செலவு அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதிகள் மீதான செலவு,2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.5,625.3 மில்லியனுடன் ஒப்பிடும்போது, ஐ.அ.டொ.6,748.1 மில்லியனாக20 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதிகளின் பட்டியலில்முக்கிய பண்டங்களாக எரிபொருள், புடவை வகைகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டுமானப் பொருட்கள்,இரசாயன பொருட்கள், பிளாஸ்டிக், சர்க்கரை மற்றும் மிட்டாய் மற்றும் மருத்துவ மற்றும் மருந்தாக்கப் பொருட்கள் விளங்கின.

நுகர்வுப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவைப் பொறுத்தவரை, உணவு அல்லாத நுகர்வுப் பொருட்களுக்கான செலவினம் குறைவடைந்தாலும், முக்கியமாக உணவு மற்றும் பானங்களுக்கான இறக்குமதி செலவு அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.1,268.6 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 0.6 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ1,267.5 மில்லியன்களைப் பதிவு செய்துள்ளது. காய்கறிகள், தானியங்கள், பால் பொருட்கள், கடல் உணவுகள் மற்றும் வாசனைப் பொருட்களுக்கான இறக்குமதி செலவு குறைந்த அதேசமயம் சர்க்கரை மற்றும் மிட்டாய் பொருட்களுக்கான செலவு அதிகரித்தது. முக்கியமாக தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் ஆடை அணிகலன்களுக்கான செலவு குறைந்து வருவதால். உணவு அல்லாத நுகர்வோர் பொருட்களுக்கான செலவு 8.2 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 647.7 மில்லியன்களாகச் சுருங்கியது. 2021 முதல் நான்கு மாதங்களில் தொலைதொடர்பு சாதனங்களுக்கான செலவு, தொற்றுநோயுடன் எழும் இத்தகைய தயாரிப்புகளுக்கான தேவை அதிகரித்ததன் காரணமாக, 117.4 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 137.0 மில்லியன்களைப் பதிவு செய்தது.

கனிமப் பொருட்கள் தவிர அனைத்து துணைத் துறைகளுக்கும் செலவினங்கள் அதிகரித்தமையால், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இடைநிலைப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொ. 4,065.7 மில்லியன் வரை, 30.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இச் செலவினம் ஐ.அ.டொ. 3,115.7 மில்லியன்களாகக் காணப்பட்டன.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நிலக்கரி உள்ளிட்ட எரிபொருள் இறக்குமதிக்கான செலவு 29.9 சதவீதத்தால் அதிகரித்து ஐ.அ.டொ. 1,390.3 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2020 ஆம் ஆண்டின் இதேகாலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொ. 1,070.1 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் மொத்த எண்ணெய் செலவினத்தில் மசகு எண்ணெய் கிட்டத்தட்ட 18 சதவீதத்தினையும், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள் மீதமுள்ள 82 சதவீதத்தினையும் கொண்டிருந்தன. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்புப் பணிகள் காரணமாக் 2021 மார்ச் இல் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படாத போதிலும், உள்ளூர் தேவையை சமாளிப்பதற்காக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தை அதிக விலைக்கு அதிக அளவுடன் இறக்குமதி செய்வதன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் எரிபொருள் இறக்குமதி மீதான செலவு அதிகரித்தது. புடவை வகை மீதான இறக்குமதிச் செலவு 22.1 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 938.6 மில்லியன்களாகவும், பிளாஸ்டிக் மற்றும் அதன் பிரிவுகள் 53.5 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ 257.8 மில்லியன்களாகவும், இரசாயன பொருட்கள் 42.7 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ.364.6 மில்லியன்களாகவும், அடிப்படை உலோகங்கள் 42.0 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 194.2 மில்லியன்களாகவும் காணப்பட்டன. ஏனைய இடைநிலைப் பொருட்களாகிய வைரக்கற்கள் (60 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 43.5 மில்லியன் வரை), காகிதம் மற்றும் காகித பலகைகள் (22.3 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 146.8 மில்லியன் வரை), இறப்பர் (65.6 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 133.4 மில்லியன் வரை) விவசாய உள்ளீடுகள் (24.9 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 86.6 மில்லியன் வரை), கோதுமை மற்றும் மக்காச்சோளம் (35.3 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 120.2 மில்லியன் வரை), உரம் (49.4 சதவீதம் அதிகரித்து 82.2 மில்லியன் வரை) அதிகரித்துள்ளன. இருப்பினும், கனிமப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவு 15.1 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொ. 44.5 மில்லியன்களாக இருந்தது.

போக்குவரத்து உபகரணங்களுக்கான செலவினம் ஐ.அ.டொ. 42.5 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 107.7 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தாலும், இயந்திராதிகளும் உபகரணங்களும் 33.2 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 913.0 மில்லியனாகவும் கட்டடப் பொருள் 6.2 சதவீதத்தினால் 381.8 மில்லியன் வரை அதிகரித்தமையால் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவு, 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐ.அ.டொ.1,233.4 மில்லியனிலிருந்து 13.8 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 1,403.1 மில்லியனினைக் கொண்டிருந்தது.

## உலக பொருளாதார முன்னோக்குகைகள்

### கொவிட் – 19 தொற்றுநோயும் உலக பொருளாதாரமும்

2021 ஆம் ஆண்டானது, தடுப்பூசி திட்டங்களின் விரைவுபடுத்தல் மற்றும் தொற்றுநோய்க்கான பிற தணிப்பு நடவடிக்கைகளுடன் உலகெங்கிலும் உயர்ந்த வளர்ச்சிப் பாதைக்கான புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன் தொடங்கியது.எனவே, உலகப் பொருளாதாரமானது 2021 ஆம் ஆண்டில் 6.0 சதவீதத்திலும் 2022 ஆம் ஆண்டில் 4.4 சதவீதத்திலும் மீட்சி பெறும் என சர்வதேச நாணய நிதியத்தினால் மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், உலகெங்கிலும் தொற்றுநோயின் புதிய மற்றும் அதிக பிறழ்வு வகைகள் தோன்றுவதாலும் மற்றும் உலகின் சில பகுதிகளில் கொவிட் நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரிப்பினாலும் தூண்டப்பட்ட ஏராளமான நிச்சயமற்ற தன்மைகளால் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் சூழப்பட்டுள்ளன.

2021, ஜூன் 27வரை, கொவிட்-19 தொற்றுநோய் ஒவ்வொரு சமூகத்தின் சமூக பொருளாதார பரிமாணங்களை அழிப்பதோடு மனித உயிர்களைக் காவியுள்ளது. உலகளாவிய இறப்பு எண்ணிக்கை 3.9 மில்லியனாக உயர்ந்துள்ள அதே நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை 180.7 மில்லியனாக உயர்ந்துள்ளது. உலகில் ஐக்கிய அமெரிக்காவுக்குப் பிறகு இரண்டாவது அதிக எண்ணிக்கையாகிய 30.18 மில்லியனுக்கும் அதிகமான ஒட்டுமொத்த உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளோடு இந்தியாவில் ஒரு புதிய அலை பரவியுள்ளது. பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பாவிலும், பிரேசில் போன்ற பிற நாடுகளிலும் 2021 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. ஒட்டுமொத்த நிகழ்வுகளில் பிரேசிலில் 18.38 மில்லியனும் பிரான்ஸில் 5.8 மில்லியனும், ஜெர்மனியில் 3.7 மில்லியனும் அதிகரித்துள்ளது.

தடுப்பூசி விநியோகம் மற்றும் அணுகல் குறித்து உலகம் முழுவதும் சிக்கல்கள் நீடிக்கின்றன. ஒவ்வொரு நாட்டினதும் தடுப்பூசிகள் தொடர்பான சமமான அணுகல் பொருளாதார மீட்சியின் வேகத்தைத் தீர்மானிக்கிறது. இருப்பினும், நாடுகளின் வருமான மட்டங்களைப் பொறுத்து பாரிய ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. "Our World in Data", அறிக்கையின்படி, உலக மக்கள் தொகையில் 22.6 சதவிகிதமானோர் குறைந்தபட்சம் ஒரு கொவிட் -19 தடுப்பூசி அளவையையாவது பெற்றுக்கொண்டுள்ளதுடன் 2021, ஜூன் வரையில் ஒவ்வொரு நாளும் 41.2 மில்லியன் அளவைகள் வீதம், குறைந்தது 212 நாடுகளில் 2.8 பில்லியன் தடுப்பூசி அளவைகள் வழங்கப்பட்டுள்ளன.

உலகில் வழங்கப்பட்ட 2.8 பில்லியன் அளவைகளில், 32.7 சதவிகிதம் உயர் வருமான நாடுகளிலிருந்தும், 52.6 சதவிகிதம் உயர் நடுத்தர வருமான நாடுகளிலிருந்தும், 14.4 சதவிகிதம் குறைந்த நடுத்தர வருமான நாடுகளிலிருந்தும்,0.3 சதவிகிதம் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளிலிருந்தும் 2021, ஜூன் 25 ஆம் தேதி வரை வழங்கப்பட்டுள்ளன. அனைவருக்குமான தடுப்பூசிகளின் அணுகலின் பொருட்டு குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்குப் பலமான நிதி உதவி தேவை என்பதை இது பரிந்துரைக்கின்றது.

உலகெங்கிலும் உள்ள தடுப்பூசிக்கான உந்துதலைத் தவிர, பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை

அடையும்வேளையில் நிலையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார மீட்சிக்கு நாடுகள் பாடுபடுவதால், தொற்றுநோயின் பாதகமான தாக்கங்களை ஈடுசெய்ய உலகளாவிய கொள்கை நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ளன. இதற்கு உயர் வளர்ச்சித் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவது, சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளைப் பாதுகாத்தல், வர்த்தகச் செலவுகளைக் குறைத்தல், கல்வி மற்றும் சுகாதாரம், இணைப்பாக்கம் மற்றும் பசுமையானதும் நெகிழக்கூடியதுமான உட்கட்டமைப்பு ஆகியவற்றிற்கான பொது முதலீடுகளுக்கு வசதியளிப்பது அவசியமாகும். இந்தச் சூழலில், மேம்பட்ட செலவுத் திறன், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் சிறந்த இலக்கு வைக்கப்பட்ட சமூக நலன் ஆகியவற்றைக் கொண்டு, வளர்ச்சி வாய்ப்புக்களில் எந்தவிதமான எதிர்விளைவுகளும் இல்லாமல் அரசிறை இடைவெளியை அதற்கேற்ப மீண்டும் உருவாக்குவது ஒரு சவாலாக உள்ளது. மேலும், வறிய நாடுகளில் பணப்புழக்கம் மற்றும் தீர்க்கமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதிலும், உலகளவில் ஒருங்கிணைந்த கடன் நிவாரண முயற்சிகளை நிறுவுவதிலும், அடையாளம் காணப்பட்ட முக்கிய துறைகளில் உருமாறும் முதலீடுகளை எளிதாக்குவதிலும் உலகளாவிய ஒத்துழைப்பு அவசியம். இத்தகைய பின்னணியில், விரைவான உலகளாவிய மீட்பு மற்றும் உலகளாவிய வளர்ச்சியை மீட்டெடுக்கும் திட்டங்கள் இருந்தபோதிலும், அதிகரித்துவரும் எண்ணெய் மற்றும் பொருட்களின் விலைகளுடன் கூடிய பணவீக்க அழுத்தங்கள், உலகளாவிய வேலையின்மைக்கு தொடர்ச்சியான பாதிப்புகள், அரசிறைப் பற்றாக்குறையை விரிவுபடுத்துதல் மற்றும் உலகளாவிய படுகடன் அளவுகள் மற்றும் உயர்ந்து செல்லும் அமெரிக்காவின் கொள்கை தாக்கங்கள் விகிதங்கள் பெரும்பாலான வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கு (EMDEs) கவலை அளிக்கும் விடயங்களாகவே இருக்கின்றன.

### உலகலாவிய வளர்ச்சி

2020 ஆம் ஆண்டில் 3.3 சதவிகிதம் கூர்மையான சுருக்கத்திற்குப் பிறகு 2021 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்திற்கு சாதகமான திருப்புமுனை எதிர்பார்க்கப்படுகிறது. 2021 ஜனவரியில், உலகப் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில் 5.5 சதவிகிதமும் 2022 ஆம் ஆண்டில் 4.2 சதவிகிதமும் வளர்ச்சியடையும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது. இருப்பினும், 2021 ஏப்ரல் மாதத்தில் உலகப் பொருளாதார கண்ணோட்டத்தின்படி இது 2021 ஆம் ஆண்டிற்கு 6 சதவீதமாகவும் 2022 ஆம் ஆண்டிற்கு 4.4 சதவீதமாகவும் திருத்தப்பட்டது. இதற்கிடையில், உலக வங்கி 2021 ஜூன் மாதம் வெளியிட்டுள்ள உலகளாவிய பொருளாதார முன்னோக்கு அறிக்கையில் உலகப் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில்,5.6 சதவிகிதம் விரிவடையும் என்று எதிர்பார்க்கிறது. உலகப் பொருளாதார வளர்ச்சிக்கான மதிப்பீடு, தொற்றுநோயின் எழுச்சியுடன் முன்பை விட மிக ஸ்திரதன்மையற்றது என்பதை இது அறிவுறுத்துகிறது.

தடுப்பூசி வழங்கலின் வேகம், நோயின் புதிய அலைகளின் தோற்றம், கொள்கை உதவியின் மட்டம், படுகடன்கடன் அளவுகள் மற்றும் நாட்டின் கட்டமைப்பு ரீதியான காரணிகளான சுற்றுலா மீதான நம்பகத்தன்மை மற்றும் நெருக்கடியிலிருந்து பொருளாதார சேதத்தின் நீடித்த விளைவு ஆகியவற்றைப் பொறுத்து பிராந்தியங்கள் மற்றும் நாடுகளில் உலகப் பொருளாதாரம் சீரற்றதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடுகளின்படி, 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 4.7 சதவிகிதத்தின் கூர்மையான சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, விருத்தியுற்ற பொருளாதாரங்கள் 2021 ஆம் ஆண்டில் 5.1 சதவிகிதத்தினால் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவின் 6.4 சதவிகித வளர்ச்சியுடன் யூரோ பிராந்தியத்தில் 4.4 சதவிகித வளர்ச்சி உத்தேசிக்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் ஜப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் கனடா முறையே 3.3 சதவீதம், 5.3 சதவீதம் மற்றும் 5 சதவீதம் வளர்ச்சியடையும் எனவும் 2020 ஆம் ஆண்டில் அனுபவித்த 2.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, சீனா மற்றும் இந்தியாவின் முறையே 8.4 சதவீதம் மற்றும் 12.5 சதவீத வலுவான வளர்ச்சி எதிர்பார்ப்புகளால் 2021 ஆம் ஆண்டில் வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள் 6.7 சதவீதம் வளர்ச்சியடையும். வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடையும் ஆசியா 8.6 சதவீத வளர்ச்சிக்கு தயாராக உள்ளது, அதே நேரத்தில் வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடையும் ஐரோப்பா 4.4 சதவீதம் வளர்ச்சியடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதி, மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா மற்றும் துணை-சஹாரா ஆபிரிக்கா ஆகியவை முறையே 4.6 சதவீதம், 3.7 சதவீதம் மற்றும் 3.4 சதவீதம் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தெற்காசியாவின் வளர்ச்சி முன்னோக்குகைகள்

2021 ஜூன் மாதத்தில் உலக வங்கி மதிப்பீடுகளின்படி, தெற்காசிய பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில் 6.8 சதவிகிதம் விரிவடையவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தால் மதிப்பிடப்பட்ட 12.5 சதவிகித இந்தியாவின் மீட்பானதுகொவிட்-19 பதிவுகளின் அதிகரிப்பு காரணமாக பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் கூட, 2021 ஆம் ஆண்டில் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் வளர்ச்சி பெரும்பாலும் சீரற்றதாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு செய்துள்ளது: மாலைதீவுகள் (சுற்றுலாத்துறையின் பின்னடைவு காரணமாக 2020 ஆம் ஆண்டில் 32.2 சதவிகிதம் சுருங்கிய பின்னர் 18.9 சதவிகிதம்), பங்களாதேஷ் (5.0 சதவிகிதம்), ஆப்கானிஸ்தான் (4.0 சதவிகிதம்), நேபாளம் (2.9 சதவீதம்), பாகிஸ்தான் (1.5 சதவீதம்) மற்றும் பூட்டான் (-1.9 சதவீதம்).

### வேலையின்மை

கொவிட்-19 தொற்றுநோய் 2020 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரங்களில் பேரழிவுமிக்க

பாதிப்பினை ஏற்படுத்தியது. இது 2021 ஆம் ஆண்டிற்கும் நீடித்த விளைவைக் கொடுத்துள்ளது.மொத்த வேலை நேரத்தில் 8.8 சதவீதம் இழக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு மதிப்பிடுகிறது. தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பது அல்லது பொருளாதார ரீதியாக செயலற்ற நிலையில் இருப்பதால் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் மொத்த வேலைவாய்ப்பு 114 மில்லியன் குறைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய வேலைவாய்ப்புப்பற்றாக்குறை 144 மில்லியன் வேலைகளினால் அதிகரித்துள்ளது.2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மொத்த வேலை நேரம் 4.8 சதவிகிதம் அல்லது 140 மில்லியன் முழுநேர வேலைகள் மற்றும் 2021 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 4.4 சதவிகிதம் அல்லது 127 மில்லியன் முழுநேர வேலைகள் பற்றாக்குறையுடன் மேற்கூறிய போக்குகள் 2021 இல் தொடர்ந்தன. வேலை நேர இழப்பு தொற்றுநோய்க்கு முந்தைய மதிப்பீட்டோடு ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டில் தொழிலாளர் வருமானம் 8.3 சதவீதத்தினால் ஐ.அ.டொ.3.7 டிரில்லியன் வரை குறைந்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் உலகளாவிய தொழிலாளர் வருமானத்தை 5.3 சதவிகிதம் அல்லது ஐ.அ.டொ.1.3 டிரில்லியன்களாகக் குறைத்துள்ளது. இது உலகளாவிய வறுமை நிலைகளின் அதிகரிப்புக்கு இட்டுச் சென்றுள்ளது.

உலகளாவிய பொருளாதார மீட்சி 2021 ஆம் ஆண்டில் 100 மில்லியன் வேலைகளையும், 2022 ஆம் ஆண்டில் மேலும் 80 மில்லியன் வேலைகளையும் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், தொற்றுநோயால் ஏற்பட்ட வேலைவாய்ப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட வேலைவாய்ப்பு வளர்ச்சி போதுமானதாக இருக்காது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் தொற்றுநோயால் தூண்டப்பட்ட உலகளாவிய தொழில்களின் பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டில் 75 மில்லியனாகவும், 2022 ஆம் ஆண்டில் 23 மில்லியனாகவும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வேலையின்மை விகிதம் 2021 ஆம் ஆண்டில் 6.3 சதவீதமாக அதிகரித்தாலும் 2022 ஆம் ஆண்டில் 5.7 சதவீதத்திற்கு குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### உலகளாவிய வர்த்தகம்

2020 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்திற்குப் பிறகு 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உலகளாவிய வர்த்தகம் ஆண்டுக்கு ஆண்டு (YoY) அடிப்படையில் 10 சதவீதம் வளர்ச்சியடைந்தமை கிழக்கு ஆசிய பொருளாதாரங்களிலிருந்து ஏற்றுமதி அதிகரிக்கப் பெரும்பாலும் காரணமாக இருந்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2021 முதல் காலாண்டில் இறக்குமதியில் 12 சதவீத வளர்ச்சியும், ஏற்றுமதியில் 7 சதவீத வளர்ச்சியும் கொண்டு, விருத்தியுற்ற பொருளாதாரங்களில் வர்த்தகம் மேம்பட்டது. வளரும் நாடுகளில் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்2021 முதல் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு (YoY) அடிப்படையில், முறையே 18.0 சதவீதம் மற்றும் 22.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. தாதுக்கள் (42 சதவீதம்), அலுவலக உபகரணங்கள் (38 சதவீதம்), மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் (37 சதவீதம்), பிற உற்பத்தி (33 சதவீதம்), புடவை (28 சதவீதம்) போன்ற துறைகள் 2021 ஆம் ஆண்டில் வர்த்தக விரிவாக்கத்திற்குப் பங்களித்தன. இருப்பினும், உலகளாவிய வர்த்தகம் பயண மற்றும் சுற்றுலா சேவைகளில் ஏற்பட்ட இடையூறுகள் இருந்தபோதிலும் 2021 முதல் காலாண்டில் சேவைகளின் உலக வர்த்தகம் மீட்சியடைந்தது.

**அட்டவணை 1.5 : உலக பொருளாதாரம் ஒரு பார்வை – 2020**

| நாடு | 2020 | | | | |
|---|---|---|---|---|---|
| | மொ.உ.உ. வளர்ச்சி | பணவீக்கம் (%) | வேலையின்மை (%) | அரசிறை மீதி (மொ.உ.உ. %) | மொத்த படுகடன் (மொ.உ.உ. %) |
| ஆஜன்டினா | -10.0 | 42.0 | 11.4 | -8.9 | 103 |
| அவுஸ்திரேலியா | -2.4 | 0.9 | 6.5 | -9.9 | 63.1 |
| பிரேசில் | -4.1 | 3.2 | 13.2 | -13.4 | 98.9 |
| கனடா | -5.4 | 0.7 | 9.6 | -10.7 | 117.8 |
| சிலி | -5.8 | 3.0 | 10.8 | -7.1 | 32.5 |
| சீனா | 2.3 | 2.4 | 3.8 | -11.4 | 66.8 |
| பிரான்ஸ் | -8.2 | 0.5 | 8.2 | -9.9 | 113.5 |
| ஜேர்மனி | -4.9 | 0.4 | 4.2 | -4.2 | 68.9 |
| கிரீஸ் | -8.2 | -1.3 | 16.4 | -9.9 | 213.1 |
| இந்தியா | -8.0 | 6.2 | … | -12.3 | 89.6 |
| இந்தோனேசியா | -2.1 | 2 | 7.1 | -5.9 | 36.6 |
| இத்தாலி | -8.9 | -0.1 | 9.1 | -9.5 | 155.6 |
| ஜப்பான் | -4.8 | 0 | 2.8 | -12.6 | 256.2 |
| கொரியா | -1.0 | 0.5 | 3.9 | -2.8 | 48.7 |

| நாடு | 2020 | | | | |
|---|---|---|---|---|---|
| | மொ.உ.உ. வளர்ச்சி | பணவீக்கம் (%) | வேலையின்மை (%) | அரசிறை மீதி (மொ.உ.உ. %) | மொத்த படுகடன் (மொ.உ.உ. %) |
| மலேசியா | -5.6 | -1.1 | 4.5 | -5.1 | 67.5 |
| மெக்சிகோ | -8.2 | 3.4 | 4.4 | -4.6 | 60.6 |
| ரஷ்யா | -3.1 | 3.4 | 5.8 | -4.1 | 19.3 |
| சிங்கப்பூர் | -5.4 | -0.2 | 3.1 | -8.9 | 128.4 |
| தென்னாபிரிக்கா | -7.0 | 3.3 | 29.2 | -12.2 | 77.1 |
| ஸ்பெயின் | -11.0 | -0.3 | 15.5 | -11.5 | 117.1 |
| இலங்கை | -36.0 | 4.6 | 5.5 | -11.1 | 101.0 |
| தாய்லாந்து | -6.1 | -0.8 | 2.0 | -4.7 | 49.6 |
| ஐக்கிய இராச்சியம் | -9.9 | 0.9 | 4.5 | -13.4 | 103.7 |
| ஐக்கிய அமெரிக்கா | -3.5 | 1.2 | 8.1 | -15.8 | 127.1 |
| வியட்நாம் | 2.9 | 3.2 | 3.3 | -5.4 | 46.6 |
| வெனிசுலா | -30.0 | 2,355 | 55.5 | -5.0 | 304.1 |

மூலம்: “உலக பொருளாதார பார்வை” சர்வதேச நாணய நிதியம், 2021 ஏப்ரல் அரசிறை கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம் 2021 ஏப்ரல் மற்றும் ஆண்டறிக்கை 2020 இலங்கை மத்திய வங்கி

... புறக்கணிக்கத்தக்கது

### பணவீக்கம்

உலக வங்கி மதிப்பீடுகளின்படி, ஆண்டு முழுவதும் எண்ணெய் விலைகள் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்களின் விலை உயர்வு மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலியின் இடையூறுகள் ஆகியவற்றுடன், உலகளாவிய பணவீக்கம் 2020 ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்தில் இருந்து2021 இல் 1.4 சதவீதப் புள்ளிகளால் 3.9 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.. வளர்ச்சி எதிர்பார்ப்புக்களையும் எண்ணெய் விலை கணிப்புக்களையும் கருத்தில் கொண்டு, வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் பணவீக்கம் 2020 ஆம் ஆண்டில் 0.5 சதவீதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டில் 1.8 சதவீதமாக உயரும், அதே நேரத்தில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் பணவீக்கம் 2020 ஆம் ஆண்டில் 3.1 சதவீதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டில் 4.6 சதவீதமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

### பொருட் சந்தைகள்

2020 ஆம் ஆண்டின் கூர்மையான வீழ்ச்சிக்குப் பின்னர் 2021 ஆம் ஆண்டில் பண்டங்களின் விலை அதிகரித்தது. எரிசக்தி விலைகள் அதிகரித்தன: 2020 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் பீப்பாய் ஒன்றுக்கு (bbl) 44.5 அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது, 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் Brent கச்சா எண்ணெய் 36.2 சதவீதம் அதிகரித்து பீப்பாய் ஒன்றுக்கு (bbl)60.6அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இதனுடன் இயற்கை வாயு விலைகளும் அதிகரித்துள்ளன. அவுஸ்திரேலிய நிலக்கரி மற்றும் தென்னாபிரிக்க நிலக்கரியின் விலை 2021 முதல் காலாண்டில் முறையே 30.5 சதவீதமும் மற்றும் 20.7 சதவீதமும் அதிகரித்துள்ளது. எரிசக்தி அல்லாதவை மற்றும் விவசாய விலைகள் 2021 ஆம் ஆண்டில் அதிகரித்து வரும் போக்கைக் காட்டின. 2020 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும் போதுமக்காச்சோளம் விலை 2021 முதல் காலாண்டில் 11.8 சதவீதம் அதிகரித்து மெட்ரிக் தொன்னுக்கு 214.6 அமெரிக்க டொலராகவும், அரிசி (தாய்லாந்து 5%) 9.9 சதவீதம் அதிகரித்து மெட்ரிக் தொன்னுக்கு 542.3 அமெரிக்க டொலராகவும், கோதுமை மெட்ரிக் தொன்னுக்கு 10.9 சதவீதத்தினால் அமெரிக்க டொலர் 2,752 ஆகவும் அதிகரித்துள்ளது. அலுமினியம் போன்ற உலோக விலைகள் 9 சதவிகிதம், தாமிரம் 18 சதவிகிதம், இரும்புத் தாது 25.5 சதவிகிதம்,ஈயம் 5.8 சதவிகிதம், நிக்கல் 10.4 சதவிகிதம்,தகரம் 33.4 சதவிகிதம் மற்றும் துத்தநாகம் 2021 முதல் காலாண்டில் 4.4 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அட்டவணை 1.6 : சர்வதேச பொருள் விலைகள்

| விடயம் | அலகு | உண்மை | | எதிர்பார்க்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| **சக்தி** | | | | | | | |
| நிலக்கரி, அவுஸ்திரேலியா | டொலர்/ மெ.தொன் | 77.9 | 60.8 | 78.0 | 76.1 | 74.2 | 72.4 |
| மசகு எண்ணெய், சராசரி | டொலர்/ பரலிற்கு | 61.4 | 41.3 | 56.0 | 60.0 | 61.0 | 61.9 |
| இயற்கை வாயு, ஐ.அ. | டொலர்/ எம். எம்.பி.டி.யு. | 2.6 | 2.0 | 2.8 | 2.9 | 2.9 | 3.0 |
| **சக்தி அல்லாதவை** | | | | | | | |
| **விவசாம்** | | | | | | | |
| **குடிபானங்கள்** | | | | | | | |
| கொக்கோ விதைகள் | டொலர்/ கி.கிராம் | 2.34 | 2.37 | 2.40 | 2.43 | 2.47 | 2.50 |
| கோப்பி ரோபஸ்டா | டொலர்/ கி.கிராம் | 1.62 | 1.52 | 1.60 | 1.63 | 1.66 | 1.70 |
| தேயிலை, சராசரி | டொலர்/ கி.கிராம் | 2.56 | 2.70 | 2.50 | 2.55 | 2.60 | 2.65 |
| **உணவு** | | | | | | | |
| **கொழுப்புக்கள், எண்ணெய்கள்** | | | | | | | |
| பாம் எண்ணெய் | டொலர்/ மெ.தொன் | 601 | 752 | 975 | 983 | 992 | 1,001 |
| சோயா அவரை உணவு | டொலர்/ மெ.தொன் | 347 | 394 | 500 | 503 | 507 | 510 |
| சோயா அவரை | டொலர்/ மெ.தொன் | 369 | 407 | 550 | 555 | 561 | 566 |
| **தானியங்கள்** | | | | | | | |
| சோளம் | டொலர்/ மெ.தொன் | 170 | 165 | 210 | 212 | 214 | 216 |
| அரிசி, தாய்லாந்து 5% | டொலர்/ மெ.தொன் | 418 | 497 | 510 | 512 | 514 | 516 |
| கோதுமை, ஐ.அ. ம.வ.மு. | டொலர்/ மெ.தொன் | 202 | 211 | 230 | 233 | 235 | 238 |
| **ஏனைய உணவுகள்** | | | | | | | |
| சீனி, உலகம் | டொலர்/ கி.கிராம் | 0.28 | 0.28 | 0.34 | 0.35 | 0.35 | 0.36 |
| **மூலப் பொருட்கள்** | | | | | | | |
| பருத்தி | டொலர்/ கி.கிராம் | 1.72 | 1.59 | 1.95 | 1.97 | 2.00 | 2.02 |
| இறப்பர் | டொலர்/ கி.கிராம் | 1.64 | 1.73 | 2.25 | 2.25 | 2.26 | 2.26 |
| சோர்ன்வூட் | டொலர்/ ஒன்றிணைத்த | 696 | 700 | 750 | 758 | 767 | 775 |
| **உலோகங்கள் மற்றும் கனியுப்புக்கள்** | | | | | | | |
| அலுமினியம் | டொலர்/ மெ.தொன் | 1,794 | 1,704 | 2,200 | 2,050 | 2,100 | 2,150 |
| செப்பு | டொலர்/ மெ.தொன் | 6,010 | 6,174 | 8,500 | 7,500 | 7,000 | 7,500 |
| நிக்கல் | டொலர்/ மெ.தொன் | 13,914 | 13,787 | 16,500 | 16,000 | 16,146 | 16,293 |

மூலம் : உலக பொருள் நோக்கு,ஏப்ரல் 2021

### அரசிறைத் துறை

2020 ஆம் ஆண்டில் பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சியை ஈடுகட்ட முன்னொருபோதுமில்லாத அளவிலான கொள்கை உதவி வழங்கப்பட்டமையால் உலகளாவிய அரசிறைப் பற்றாக்குறை 2019 ஆம் ஆண்டில் 3.6 சதவீதமாக இருந்து 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. உலகளாவிய அரசிறைப் பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டில் 9.2 சதவீதத்தினையும், 2022 ஆம் ஆண்டில் 5.4 சதவீதத்தினையும் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களின் அரசிறைப் பற்றாக்குறையை 2021 ஆம் ஆண்டில் 10.4 சதவீதமாகவும், 2022 ஆம் ஆண்டில் 4.6 சதவீதமாகவும் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் தமது அரசிறைப் பற்றாக்குறையை 2021 ஆண்டில் 7.7 சதவீதமாகவும், 2022 இல் 6.7 சதவீதமாகவும் மெதுவான விகிதத்தில் குறைத்துக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிப் பற்றாக்குறையின் அதிகரிப்புக்கு இணையாக, உலகளாவிய படுகடன் மட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் 83.7 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 97.3 சதவீதமாக உயர்ந்தன. உலகளாவிய படுகடன் மட்டம்2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 98.9 சதவீதமாகவும் மற்றும் 99.0 சதவீதமாகவும் அதிகரிக்கும்.வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் படுகடன் மீதான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் 2019 ஆம் ஆண்டில் 103.8 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டில் 120.1 சதவீதமாக கூர்மையான அதிகரிப்பினை அடைந்துள்ளதுடன், இது 2021 ஆம் ஆண்டில் 122.5 சதவீதமாக உயர்ந்து 2022 ஆம் ஆண்டில் 121.6 சதவீதமாக சற்றுக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களின் படுகடன் அளவுகளும் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதாசாரமாக கணிசமாக உயர்ந்து 64.4 சதவீதமாக உள்ளன.இது 2019 ஆம் ஆண்டில் 54.7 சதவீதமாக இருந்த அதேவேளை, 2021 ஆம் ஆண்டில் 65.1 சதவீதமாகவும் 2022 ஆம் ஆண்டில் 67.3 சதவீதமாகவும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது..

### நாணய மற்றும் நிதித்துறை

2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ஐக்கிய அமெரிக்காவில் நீண்டகால வட்டி விகிதங்கள் சுமார் 125 அடிப்படை புள்ளிகள் உயர்ந்துள்ளன. இது தொற்றுநோய்களின் போது ஏற்பட்ட கூர்மையான சரிவுகளிலிருந்து மீண்டு, அதிகரித்து வரும் வியாபாரப் பண்டங்களின் விலையைப் பிரதிபலிப்பதோடு பிரதானமாக அதிக பணவீக்க முறிவு இடைவெளிகளாலும் இயக்கப்படுகிறது.2021 ஏப்ரல் மாதத்திற்குள், நீண்டகால வட்டி விகிதங்கள் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை எட்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன் உண்மையான விகிதங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. சராசரி மேம்பட்ட பொருளாதாரம் 10 - ஆண்டு விகிதங்கள் 2021 ஏப்ரல்மாதத்திற்குள் 50 அடிப்படை புள்ளிகள் அதிகரித்துள்ளதால்,ஐக்கிய அமெரிக்காவில் உயர் நீண்ட கால விளைச்சல் ஏனைய வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் ஒப்பீட்டு முதிர்வு விளைச்சலில் சில மேல்நோக்கிய அழுத்தத்தினைக் கொடுத்துள்ளது. இருப்பினும், விகிதங்களில் தொடர்ச்சியான மற்றும் செங்குத்தான அதிகரிப்பானது அபாயத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் நிதி நிலைமைகளை திடீரென இறுக்குவதற்கும் வழிவகுக்கும். இதன் விளைவாக நிதி பாதிப்புக்களோடு பேரண்ட-நிதி ஸ்திரத்தன்மை மீதான பாதிப்புகளும் ஏற்படும். இது பெரிய நிதித் தேவைகளையும் அதிக கடன் சுமையையும் எதிர்கொள்ளும் நேரத்தில் வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்களைப் பெரிதும் பாதிக்கலாம். அவற்றின் பிணைமுறிச் சந்தைகளையும் நாணயங்களையும் பாதித்து பாரிய நாணய வெளிப்பாய்ச்சல்களுக்கும் வழிவகுக்கும்.

### இலங்கைச் சூழலுக்குள் எதிர்கால நோக்கு

உலக பொருளாதார நிலைமைகள்,பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மை,படுகடன் நிலைத்தன்மை, மனித வள மேம்பாடு, இலக்கிடப்பட்ட மற்றும் நன்கு குவிமையப்படுத்திய சமூக பாதுகாப்பு மற்றும் காலநிலை ஒத்திசைவு ஆகியவற்றைக் கொண்ட நிலையான மற்றும் நெகிழக்கூடிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் தேவையை மீண்டும் வலியுறுத்துகின்றன.உலகின் பிற பகுதிகளைப் போலவே, இலங்கையும் தொற்றுநோய் மற்றும் அடுத்தடுத்த உலகளாவிய பொருளாதார காரணிகளால் முன்வைக்கப்படும் இதேபோன்ற கடுமையான சவால்களை எதிர்கொண்டாலும் பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிர்ப்பு, சிறந்த வருமான நிருவாகம், கவனம் செலுத்தப்பட்ட பொது முதலீடுகள் மற்றும் கொள்கை உறுதியுடன் பலமான பொருளாதார மீட்சியை அடைந்துகொள்ள திட்டமிடப்பட்டுள

### கட்டம் 1.1 ; கொவிட்-19 இற்கான முக்கிய கொள்கைச் செயற்பாடுகள்

**நிதித்துறை**

- சனாதிபதி நிதியத்திலிருந்து ரூ 100 மில்லியன் ஒதுக்கீட்டுடன், கொவிட்-19 இற்கான சுகாதார சேவை மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தைத் தாபித்தல்.
- கொவிட்-19 பெருந்தொற்றைச் சமாளிப்பதற்காக சுகாதார சேவை வழங்கலுக்குத் தேவைப்படும் மருத்துவ, சத்திரசிகிச்சை, பல்வைத்திய உபகரணங்களையும், மருந்துகளையும், இரசாயனப் பொருட்களையும், அவை போன்ற மற்றைய பொருட்களையும் வழங்குவதற்கு அல்லது அன்பளிப்புச் செய்வதற்கு மற்றும் இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.
- சுகாதார அமைச்சிற்கும் மற்றைய அரச நிறுவனங்களுக்கும், ஏற்றுமதிக்கான BOI தொழில்முயற்சிகளால், சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களையும் அவை போன்ற மற்றைய பொருட்களையும் வழங்குவதற்கு அல்லது அன்பளிப்புச் செய்வதற்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.
- மருந்து தயாரிப்பிற்கான இயந்திரங்களையும் உபகரணங்களையும், அவற்றின் பாகங்களும் உதிரிப்பாகங்களும் உட்பட, இறக்குமதி செய்வதற்காக வரிச் சலுகைகளை வழங்குதல்.
- கொவிட்-19 ஆல் பீடிக்கப்பட்டோரைக் கண்டுபிடிப்பதற்கு உதவுவதற்காக, சுகாதார சேவையின் ஏற்பாடுகளுக்கு அவசியமான பரிசோதனை உபகரணங்கள் உள்ளிட்ட மருத்துவக் கருவிளையும் உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்காக வரிச் சலுகைகளை வழங்குதல்.
- ரூ 50 பில்லியனை ஆரம்ப முதலீடாகக் கொண்டு, எரிபொருள் விலையை நிலையானதாக்கும் நிதியமொன்றைத் (FPSF) தாபித்தல். இந்நிதியத்திற்கு எரிபொருள் இறக்குமதியில் சேகரிக்கப்படும் சுங்கவரிக்கான தண்டப்பணத்தைச் சேர்த்தல். ஆயினும், எண்ணெய் விலை உயர்வு காரணமாக தண்டப்பணம் நீக்கப்பட்டுள்ளது.
- வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள், கமக்காரர்கள், இடம்பெயர்ந்துள்ள நாளாந்த உழைப்பாளிகள் மற்றும் முடக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் ஆகியோருக்கு ரூ 5,000 கொடுப்பனவை வழங்குதல்.
- சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் குடித்தனங்களுக்கும் ஏப்ரல் 2020 புதுவருட காலகட்டத்தில் ரூ 5,000 கொடுப்பனவை வழங்குதல்.
- 2 வாரங்களுக்குத் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு (அவர்களது பொருளாதார நிலையைக் கவனத்திலெடுக்காது) ரூ 10,000 பெறுமதியான உலருணவுகளை வழங்குதல்.
- 2020 இல் ரூ 117.5 பில்லியன்களையும், 2021 ஜனவரி - மே மாத நடுப்பகுதி வரை ரூ53.0 பில்லியன்களையும் கொவிட்-19 தொடர்பான செலவீனங்களாக மேற்கொள்ளுதல்.
- சகல சமுர்த்தி வங்கிகளூடாகவும் குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு ரூ 10,000 வட்டியற்ற முற்பணத்தை வழங்குதல்.
- மத்திய வங்கியிலிருந்தான உத்தரவாதங்களால் மீள்நிரப்பப்படும், வங்கிகளூடாக வழங்கப்படும் கடனுக்கான தடையொன்றை அமுல்படுத்துதல்.
- அத்தியாவசிய நுகர்வுக் கட்டணங்களையும் ரூ 50,000 இற்குக் குறைந்த மாதாந்த கடன் அட்டைக் கொடுப்பனவையும் செலுத்துவதற்கு, பொதுமக்களுக்கு ஒரு மாத சலுகைக் காலத்தை அறிமுகஞ் செய்தல்.
- கொரோனா தடுப்புச் செயற்பாடுகளில் வேலை செய்யும் வேலையாட்கள், பொலிஸ், முப்படை அலுவலர்கள், மற்றும் ஏனைய அரச ஊழியர்களுக்கான காப்புறுதிக் கொடுப்பனவுகளை இரு மடங்காக்குதல்.
- முற்பணக் கணக்கிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான அரச துறை ஊழியர்களது சம்பளங்களிலிருந்தான கொடுப்பனவுக் கழிவுகளை இரு (02) மாதங்களுக்கு நிறுத்தி வைத்தல்.
- பெப்ருவரி, மார்ச்சு மாதங்களுக்கான பெறுமதி சேர் வரிக்கான கொடுப்பனவுக் கால அவகாசத்தை ஏப்ரல் 30, 2020 வரை நீடித்தல்.
- கொவிட்-19 முடக்கப்பட்ட காலப்பகுதியில் எல்லா வரிக் கொடுப்பனவுகளுக்குமான தண்டப்பணத்திற்கு விலக்களிப்பதற்கான பணிப்புரைகளை வழங்குதலும், பிந்திய கொடுப்பனவுகளுக்கான தண்டப்பண ஏற்பாடுகளை ஜூலை 2020 இலிருந்து மீள ஆரம்பித்தலும்.

- சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கான நிவாரணங்கள் - 2018/19 ஆம் மதிப்பீட்டு ஆண்டுக்கு வழங்கப்பட்ட மதிப்பீடுகள் மீதான வருமான வரி நிலுவைகளை இல்லாமலாக்குதல்,2019/20 ஆம் மதிப்பீட்டு ஆண்டுக்கு மேலதிக மதிப்பீடுகளை வழங்காதிருத்தல்,பறிமுதல் அறிவித்தல்களை நீடித்தல், வரி செலுத்துவதற்கும் வரி ஆவணங்களைப் பூர்த்தி செய்வதற்குமான திகதிகளை நீடித்தல்.

**வெளியகத் துறை**

- உள்ளூர் ஆட்களது ஏதேனும் முதலீடுகள், வெளிநாட்டுப் பண அனுப்பீடுகள் மற்றும் குடியேறியோரது நிதி வெளியேற்றம் ஆகியவற்றுக்கு மூன்று மாதங்களுக்கு வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சலுக்கான இடைநிறுத்தல்.
- தெரிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி மீதான நாணயக் கடித (LCs) வசதிகளையும் நாணயக் கடிதங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியையும் இடைநிறுத்துதல், மூன்று மாதங்களுக்கு ஆவணங்களையும் முற்பணக் கொடுப்பனவுகளை ஏற்பதையும் இடைநிறுத்துதல்.
- எல்லா அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகளுக்கும், குறித்த சில நிபந்தனைகளுடன் கட்டுப்பாடு விதித்தல்.
- ஏதேனும் காரணத்திற்காக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் இலங்கையில் வசிக்கும் ஆட்களுக்குரிய பிரயாணப் படியாக வெளிநாட்டு நாணயத்தாள்களின் வழங்கல், முன்பு 10,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்ததிலிருந்து, ஆகக்கூடியது 5,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக (அல்லது அதற்குச் சமமான வேறு நாட்டு நாணயத்தாள்களாக) மாத்திரம் வழங்கப்பட வேண்டும் என அதிகாரமளிக்கப்பட்ட நாணய விற்பனையாளர்களுக்கு பணிப்புரை வழங்குதல்.
- வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பைக் குறைக்காத வகையில் தவணை அடிப்படையில் வெளிநாட்டு நாணயத்தை வழங்குவதற்கு LCBs இற்கான அந்நியச் செலாவணி விற்றல்-வாங்குதல் SWAP ஏலவிற்பனைகள்.
- 400 மில்லியன் ஐ.அ.டொலருக்கான இந்திய ரிசர்வ் வங்கியுடன் இரு தரப்பு நாணய இடமாற்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல், இடமாற்று ஒப்பந்தத்தின் கைச்சாத்திடுவதற்கான அனைத்து முன் நிபந்தனைகளும் நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- இந்திய ரிசர்வ் வங்கியுடன் 400 ஐக்கிய மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இருதரப்பு மாற்று நாணய ஒப்பந்தத்திற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல். இந்த இருதரப்பு மாற்று நாணய ஒப்பந்தத்தைக் கையெழுத்திடுவதற்கு அவசியமான எல்லாத் தேவைகளும் நிதி அமைச்சினாலும் மத்திய வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அந்நியச் செலாவணிச் சந்தையில் ஊகத்தின் அடிப்படையிலான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு, தெரிவு செய்யப்பட்ட அடிப்படை மீதான LCBs இன் அன்னியச் செலாவணி தொடர்பான அபாயத்தைக் (NOP) குறைத்தல்.
- அரசாங்கத்தின் தொடர்ச்சியான திரவப் பணத்தேவையை நிறைவுசெய்வதற்காக, நியுயோர்க் பெடரல் ரிசர்வ் வங்கியிடமிருந்து 1,000 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குரிய பிணையங்களை விற்கும் வசதியை (Repo Facility) ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுதல்.
- பங்காளதேஷ் வங்கியுடன் 250 ஐ. அ. டொடலருக்கான இருதரப்பு நாணய இடமாற்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும் இந்திய ரிசர்வ் வங்கியுடன் 400 ஐ.அ.டொலருக்கான நாணய இடமாற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும் ஒப்புதல் பெறுதல்

**நாணயத் துறை**

- முச்சக்கர வண்டிகளின், பாரவூர்திகளின், பாடசாலை பஸ்களின், வான்களின் சொந்தக்காரர்கள், மற்றும் சுயதொழிலாக வாகனங்களை ஓட்டுபவர்கள் உள்ளிட்ட, சுயதொழிலில் ஈடுபட்டுள்ள 1.5 மில்லியன் ஆட்களுக்கு, தமது குத்தகைக் கடன்களை மீளச் செலுத்துதலுக்கான ஆறு மாத காலத்திற்கு நிறுத்தி வைத்தல்.
- பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக சட்டரீதியான ஒதுக்கீட்டு விகிதத்தை (SRR) 2.00 இற்குக் குறைப்பதன் மூலம்,ரூ 150 பில்லியன் தொகையான திரவப் பணத்தை வங்கி முறைமைக்குள் செலுத்துதல்.
- வர்த்தகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் ஆதரவளிப்பதற்காக ரூ 50 பில்லியன் மீள நிதியளிக்கும் வசதியை அறிமுகப்படுத்துதல்.
- கொவிட்-19 காரணமாக முகங்கொடுக்கும் சவால்களைச் சமாளிப்பதற்கான தேசிய முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு ஒரு “விசேட வைப்புக் கணக்கை” அறிமுகப்படுத்துதல்.

- 2020 ஜனவரியிலிருந்து ஜூலை வரை,சந்தைக் கடன் வீதங்களைக் குறைப்பதற்காக, நியம வைப்பு வசதி விகிதத்தையும் (SDFR) நியம கடன் வசதி விகிதத்தையும் (SLFR) 250 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 4.50 இற்கும் 5.50 இற்கும் குறைத்தல்.

- கடன் அட்டைகளின் ரூ 50,000 வரையிலான உள்ளகக் கொடுக்கல் வாங்கல்களுக்கான வட்டி வீதம்15சதவீதம்வரை குறைக்கப்படுதலும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு நாளாந்த ஆகக்குறைந்த ஒதுக்கீட்டுத் தேவையின் எல்லை 90 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்கப்படுதலும், ஆகக்குறைந்த மாதாந்தக் கட்டணத்தில் 50 சதவீதமாகக் குறைக்கப்படுதலும்.

- வாடிக்கையாளருக்கு ஆகக்கூடிய சேவையை வழங்குவதற்காக,ஊரடங்கு நேரங்களில் வங்கிகளின் எல்லாக் கிளைகளையும் திறந்து வைத்தல்.

- தற்துணிபான கொடுப்பனவுகளையும் மற்றைய அனாவசியச் செலவுகளையும் குறைப்பதன் மூலம் தடையற்ற கடன் பாய்ச்சலைப் பேணுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல்.

- கொவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட வர்த்தகப் பிரிவுகளுக்குத் (கட்டிட நிர்மாணமும் மற்றைய துறைகளும்) தேவையான கடன்களை சலுகை அடிப்படையில் 4.00 சதவீத வருடாந்த வட்டிக்கு வழங்குவதற்காக, பொருளாதாரச் செயற்பாட்டுப் புத்துயிர்ப்புக்கு உதவுவதற்காக புதிய மூன்று கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும், அதன் புதிய திரும்பச் செலுத்தும் காலத்தை 9 மாதங்களாக நீடித்தலும்.

- கொவிட் - 19 இன் 3வது அலைகளால் பாதிக்கப்பட்ட வர்த்தகங்கள் மற்றும் தனிநபர்களுக்கான சலுகைகள் குறித்து வங்கிசாரா நிதி நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல். இது செயற்பாட்டில் உள்ள, செயற்பாட்டில் இல்லாத கடன் வசதிகளையும், ஏனைய வசதிகளையும் நோக்கிய பலவித சலுகைகளை கொண்டுள்ளது.

**நிர்வாக நடவடிக்கைகள்**

- 2021 பெப்ரவரி முதல் தடுப்பூசி போடத் தொடங்கல்.

- கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு நிலையம், கொவிட்-19 சுகாதார சேவைகள், கல்வி, பொருளாதார மீட்சி, வறுமை ஒழிப்பு ஆகியவற்றுக்கான ஜனாதிபதி செயலணிகள், சுகாதார ஆபத்துகளையும் பொருளாதார இலகுபடுத்தல் மூலோபாயங்களையும் முகாமைத்துவம் செய்வதற்கான உயர்மட்ட ஒருங்கிணைப்புப் பேரவை ஆகியவற்றைத் தாபித்தல்.

- தொற்றுநோய்களுக்கான தேசிய நிறுவகத்தையும், ஏனைய பல பெரிய வைத்தியசாலைகளையும் கொவிட்-19 இற்கான சிகிச்சை நிலையங்களாக மாற்றுதலும், நாடு முழுவதிலும் 34 தனிமைப்படுத்தல் நிலையங்களைத் தாபித்தலும்.

- 2021 மே மாதமளவில் 25,000 இற்கும் அதிகமான PCR பரிசோதனைகளை நாளாந்தம் அதிகரித்தல்.

- இலக்கு வைக்கப்பட்ட பயனாளர்களுக்கு நேரடியாக உணவுகளையும் மருந்துகளையும் விநியோகித்தல்.

- 645,179 ஓய்வூதியதாரர்களுக்கு பிரதேசச் செயலகங்களூடாகவும், தபால் சேவையூடாகவும் ஓய்வூதியக் கொடுப்பனவு.

- நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ‘சௌபாக்யா வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தை’’ நடைமுறைப்படுத்துதல்.

- கமத்தொழிலை ஊக்குவிக்குமுகமாக, குறைந்த வருமானம் பெறும் பயனாளர்களுக்கு உரம், விதைகள், தோட்ட உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குதல்.

- வைத்தியசாலைக் கட்டில்கள், தொற்று நீக்கும் கூடங்கள், தொற்றுநீக்கிகள் போன்ற அவசியமான உபகரணங்களைத் தயாரிப்பதில் அவற்றைக் கண்டுபிடிப்பவர்களுக்கும் உள்ளூரில் தயாரிப்பவர்களுக்கும் ஊக்கமளித்தல்.

- உள்ளூர் மற்றும் ஏற்றுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, எல்லா விவசாயச் செயற்பாடுகளுக்கும் ஊரடங்குச் சட்டம் போன்ற கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.

- SAARC கொவிட்-19 அவசரகால நிதியத்திற்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பங்களிப்புச் செய்தல்.

# அத்தியாயம் 2

## அரசிறை அபிவிருத்திகள்

### மேனோக்கு

பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் வாய்ந்த துறைகளில் முதலீடு செய்வதற்காக தனியார் துறையை, முக்கியமாக தொழில் முயற்சி நிறுவனங்களை ஊக்குவிக்கும் அதேவேளையில் நாட்டின் மொத்தக் கேள்வியை அதிகரிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் அரசிறை மற்றும் நிதிக் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இதற்காக ஏற்கனவே தாபிக்கப்பட்ட எளிமையானதும் வெளிப்படையானதுமான வரி முறைமையும் இடவசதி நாணயக் கொள்கை நிலைப்பாடும் உதவியளித்துள்ளது. இருப்பினும், கொவிட் - 19 தொற்றுநோயின் நீடித்த விளைவு மற்றும் முன்னொருபோதுமில்லாத அளவில் உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஆகியவை அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. அத்தகைய சவால்களுக்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது நன்கொடைகள் உட்பட அரசாங்க வருமானம், 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டு வருமானமாகிய ரூபா.1,961 பில்லியனில் ஏறக்குறைய 25 சதவீதமாகிய ரூபா.482.3 பில்லியனினை அடையப்பெற்றது.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்க வருவாய் திரட்டல் முயற்சிகள் ரூபா.481.7 பில்லியனுடன் வெற்றிகரமாக உள்ளது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் வருமானத் திரட்டல் ரூபா.476.7 பில்லியன் ஆகும். பெறுமதி சேர் வரி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு, செஸ் மற்றும் மதுபானங்கள் மீதான மது வரித் தீர்வை ஆகியவற்றிலிருந்தான அதிக வருவாயுடன் வரி வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.408.5 பில்லியனில் இருந்து 4.6 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா 427.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. இருப்பினும், மத்திய வங்கி இலாப பரிமாற்றங்களிலிருந்து வருவாயில் வீழ்ச்சி பதிவாகியது. வரி அல்லாத வருமானம் ரூபா.24 பில்லியனில் இருந்து 20.2 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா.15 பில்லியனாகக் காணப்பட்டது.

2021 முதல் நான்கு மாதங்களில் வருமான வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் ரூபா.55.2 பில்லியனாக இருந்ததோடு 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.81.4 பில்லியனை விட இது 32.1 சதவீத வீழ்ச்சியாகும். 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 பரவுவதைத் தணிக்க நடமாடல் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் காரணமாக நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரிகளின் வருவாய் 18.7 சதவீதம் குறைந்து ரூபா.47.0 பில்லியனகளைக் கொண்டிருந்தது 2021 ஆம் ஆண்டில் பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிர்ப்பினைப் பிரதிபலிக்கும் வகையில், மூலதன பெறுகைகளின் வரியிலிருந்து வருவாய் 227.2 சதவீதம் கணிசமாக அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.191 மில்லியன் தொகையைப் பதிவு செய்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ் வருவாய் ரூபா.59 மில்லியன் ஆகும்.

உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரிகளின் வருவாய் 2021 முதல் நான்கு மாதங்களில் 19.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா.145.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானம் ரூபா.48.2 பில்லியனில் இருந்து 31.2 சதவீதம் அதிகரித்து ரூபா.62.4 பில்லியனாகவும் உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான உற்பத்தி வரியிலிருந்து வசூலிக்கப்பட்ட வருவாய் 15.6 சதவீதம் அதிகரித்து ரூபா.82.7 பில்லியனினையும் 2021 முதல் நான்கு மாதங்களில் பதிவு செய்தது.

இதற்கிடையில் அரசாங்கமானது சுங்க இறக்குமதித் தீர்வைகளை ஒழுங்குபடுத்துவதற்காக 2021 வரவுசெலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 0, 10, 15 ஆகிய சதவீதங்களில் மூன்றடுக்கு சுங்க இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியது.

இறக்குமதி அடிப்படையிலான வரிகளான இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி, சுங்க இறக்குமதித் தீர்வை, செஸ் மற்றும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் 5.6 சதவீதம் அதிகரித்து ரூபா.200.7 பில்லியனாக இருந்தது. இருப்பினும், விசேட வியாபாரப் பண்ட அறவீடு மூலம் வசூலிக்கப்பட்ட வருவாய் 14.9 சதவீதம் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.20.5 பில்லியனாகவும் இறக்குமதிகள் தொடர்பான உற்பத்தித் தீர்வை 49.0 சதவீதம் குறைந்து ரூபா. 28.6 பில்லியனினை அடையப் பெற்றது. இது இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக மோட்டார் வாகனங்களின் வருவாய் குறைவதற்கு காரணமாக இருந்தது.

**அட்டவணை 2.1 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான வரவு செலவுத்திட்ட சுருக்கம்**

ரூபா. மில்லியன்

| விடயம் | 2020 | 2021 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | 478,696 | 482,289 |
| வருமானம் | 476,733 | 481,722 |
| வரி வருமானம் | 408,484 | 427,261 |
| வரி அல்லாத வருமானம் | 68,248 | 54,461 |
| மானியங்கள் | 1,963 | 567 |
| **செலவினம்** | 930,871 | 1,002,832 |
| மீண்டெழும் | 820,685 | 890,085 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 336,216 | 366,240 |
| ஏனையவை | 484,469 | 523,844 |
| அரசாங்க முதலீடுகள் | 118,928 | 114,227 |
| ஏனையவை | -8,742 | -1,480 |
| **வருமானப் பற்றாக்குறை (-)/மிகை (+)** | -343,952 | -408,362 |
| **மொத்த வரவு செலவுத்திட்ட மிகை (+)/பற்றாக்குறை(-)** | -452,175 | -520,543 |
| **நிதியீட்டம்** | 452,175 | 520,543 |
| வெளிநாட்டு நிதியீட்டம் | 26,299 | 16,994 |
| கடன் பெறுகை | 118,439 | 127,077 |
| மீள் கொடுப்பனவு | -92,139 | -110,083 |
| உள்நாட்டு நிதியீட்டம் | 425,876 | 503,549 |
| கடன் பெறுகை | 1,030,188 | 1,397,680 |
| மீள் கொடுப்பனவு | -604,312 | -894,131 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**அட்டவணை 2.2 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானமும் செலவினமும்**

ரூபா.பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட (வருடாந்த) | தற்காலிகமான (சன – ஏப்பிரல்) | அடைவு (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **1,951** | **482** | **24.7** |
| வரி வருமானம் | 1,724 | 427 | 24.8 |
| வரியல்லா வருமானம் | 227 | 54 | 24.0 |
| **மொத்த செலவினம்** | **3,526** | **1,003** | **28.4** |
| மீண்டெழும் செலவினம் | 2,466 | 890 | 36.1 |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள் | 1,060 | 113 | 10.6 |

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2021 முதல் நான்கு மாதங்களில் மொத்த அரசாங்க செலவினம், முக்கியமாக மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.930.9 பில்லியன் தொகையில் இருந்து 7.7 சதவீதம் அதிகரித்து ரூபா.1,002.8 பில்லியனாக இருந்தது. மீண்டெழும் செலவினம் 2020

ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 820.7 பில்லியனாக இருந்து 2021 முதல் நான்கு மாதங்களில் 8.5 சதவீதம் அதிகரித்து ரூபா.890.1 பில்லியனினைக் கொண்டிருந்தது. முக்கியமாக கொவிட் - 19 உடன் தொடர்புடைய தூண்டப்பட்ட நேரடி செலவினங்களாகிய பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீடிக்கப்பட்ட நிவாரணங்கள் மற்றும் வாழ்வாதார உதவி உள்ளிட்டவை மற்றும் கொவிட் - 19 தணிப்பு நடவடிக்கைகள், தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசிகள் மீதான இறக்குமதி அதிகரிப்பு மற்றும் வட்டி கொடுப்பனவு, சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான செலவுகள் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். 2021 முதல் நான்கு மாதங்களில் வட்டி கொடுப்பனவுக்கான செலவு 8.9 சதவீதம் அதிகரித்து ரூபா.366.2 பில்லியனைக் கொண்டிருந்தது. வெளிநாட்டுக் கடன்கள், சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான வட்டி கொடுப்பனவுகள் குறைக்கப்பட்ட போதிலும், 8.0 சதவீதம் அதிகரித்து ரூபா.274.0 பில்லியன் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு 9.3 சதவீதம் அதிகரித்து ரூபா.87.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. மேலும், மூலதன செலவு மற்றும் தேறிய கடன் 2.3 சதவீதத்தினால் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.112.7 பில்லியனாகவும் 2020 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் ரூபா.110.2 பில்லியனாகவும் இருந்தது.

### அரசாங்க வருமானம்

2021 முதல் நான்கு மாதங்களில் மொத்த அரசாங்க வருமானம், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 476.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா.481.7 பில்லியனாக இருந்தமைக்கு, முக்கியமாக வரி வருவாயின் உயர்வு காரணமாகும்.

**அட்டவணை 2.3 : 2021 சனவரி – ஏப்பிரல் வரையில் வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையான மெய் வருமானம்**

ரூபா. பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட வருடாந்த | தற்காலிகமான (சனவரி – ஏப்பிரல்) |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 371.0 | 55.2 |
| பெறுமதிசேர் வரி உள்நாட்டு | 200.0 | 62.4 |
| தேச கட்டுமான வரி உள்நாட்டு | – | 0.2 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பிற | 4.5 | 18.5 |
| **உப மொத்தம்** | **575.5** | **136.4** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதி தீர்வைகள் | 180.0 | 31.6 |
| பெறுமதிசேர் வரி இறக்குமதிகள் | 110.0 | 39.4 |
| தேச கட்டுமான வரி உள்நாட்டு | – | 0.0 |
| துறைமுக விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 170.0 | 53.8 |
| இறக்குமதி/ஏற்றுமதி செஸ் | 70.0 | 26.8 |
| விடே வியாபார பண்ட அறவீடு | 110.0 | 20.5 |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | – | 0.0 |
| உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் | 315.0 | 58.8 |
| சிகரட்ஸ் | 130.0 | 27.6 |
| பெற்றோலியம் | 85.0 | 20.7 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற | 100.0 | 10.6 |
| ஏனைய | 2.0 | 0.0 |
| **உப மொத்தம்** | **957.0** | **231.0** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| மதுபானம்/புகையிலை | 160.0 | 52.4 |
| **உப மொத்தம்** | **160.0** | **52.4** |
| **ஏனையவை** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 20.0 | 4.3 |
| உரிமப் பத்திர வரி மற்றும் எனையவை | 11.5 | 3.1 |
| **உப மொத்தம்** | **31.5** | **7.4** |
| **மொத்த வரி வருமானம்** | **1,724.0** | **427.3** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

பெறுமதிசேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு, பிஏஎல், செஸ் மற்றும் மது வரி ஆகியவற்றில் இருந்து திரட்டப்பட்ட வருமானம் முறையே 32.4 சதவீதம், 44.8 சதவீதம், 110.9 சதவீதம், மற்றும் 46.5 சதவீதம், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.408.5 பில்லியனினை விட 4.6 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.427.3 பில்லியனாக இருந்தது. வருடாந்த மதிப்பிடப்பட்ட வருவாய் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 1,951 பில்லியன் 24.7 சதவீதமாக இருந்தது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி அல்லாத வருமானம் 20.2 சதவீதம் குறைந்து ரூபா.54.5 பில்லியன் ஆக இருந்தமைக்கு அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களில் இருந்து இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் அதிகரிப்புக்கு மத்தியில் வாடகை, விற்பனை மற்றும் கட்டணங்கள் மற்றும் வட்டி ஆகியவற்றின் வருவாய் குறைந்தமை காரணமாகும். இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.2.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா.7.0 பில்லியன் வரை 2021 முதல் நான்கு மாதங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது.


**அட்டவணை 2.4 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா. மில்லியன்

| விடயம் | 2020 | 2021 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **408,485** | **427,260** | **4.6** |
| வருமான வரி | 81,372 | 55,245 | -32.1 |
| உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி | 121,164 | 145,316 | 19.9 |
| பெறுமதி சேர் வரி | 48,199 | 62,435 | 29.5 |
| உற்பத்தி வரி | 71,534 | 82,690 | 15.6 |
| தேச கட்டுமான வரி | 1,432 | 191 | -86.7 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 190,122 | 200,710 | 5.6 |
| சுங்கத் தீர்வை | 31,267 | 31,644 | 1.2 |
| பெறுமதிசேர் வரி | 28,740 | 39,407 | 37.1 |
| தேச கட்டுமான வரி | 101 | 5 | -95.0 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 37,165 | 53,814 | 44.8 |
| விசேட வியாபார பண்ட அறவீடு | 24,092 | 20,500 | -14.9 |
| உற்பத்தி வரி | 56,065 | 28,574 | -49.0 |
| செஸ் அறவீடு | 12,692 | 26,766 | 110.9 |
| உரிமப் பத்திர வரிகள் மற்றும் ஏனையவை | 15,827 | 25,989 | 64.2 |
| **வரி அல்லாத வருமானம்** | **68,248** | **54,461** | **-20.2** |
| **மொத்த வருமானம்** | **476,733** | **481,722** | **1.0** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**வரைபு 2.1 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரச வருமானத்தின் பங்குகள்**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## வரி வருமானம்

மொத்த வருவாயில் 88.7 சதவீதமாக இருக்கும் வரி வருவாய், 4.6 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.427.3 பில்லியனாக இருந்தது. இவ் வருமானம் 2020 இதே காலகட்டத்தில் ரூபா. 408.5 பில்லியனாகும். இருப்பினும், வருமான வரியிலிருந்து வருவாய் 2021 முதல் நான்கு மாதங்களில் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.81.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது 32.1 சதவீதம் குறைந்து ரூபா.55.2 பில்லியனாகக் காணப்பட்டது. இது முக்கியமாக, 2020 மார்ச் மாதத்தில் பரவிய தொற்றுநோயின் தாக்கத்தினால், நிறுவன துறையிலிருந்து கிடைத்த வருவாயின் வீழ்ச்சி இதற்கு வழி வகுத்தது. இதற்கிடையில் அரசாங்க வரி வருமானத்தில் நேரடியல்லாத வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாயின் பங்களிப்பு 87.1 சதவீதமாகவும், நேரடி வரிகளின் வருவாய் 2021 முதல் நான்கு மாதங்களில் 13.7 சதவீதம் அதிகரித்து ரூபா.372.0 பில்லியனாக இருந்ததோடு இவ் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 327.1 பில்லியனினைக் கொண்டிருந்தது.

## வருமான வரி

வருமான வரி வருவாய் 32.1 சதவீதம் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.55.2 பில்லியனாகவும் 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா.81.4 பில்லியனாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரிகளின் வருவாய் 18.7 சதவீதம் குறைந்து 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா. 47.0 பில்லியனினைப் பதிவு செய்தது. 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 தொற்றுநோய் பரவுவதைத் தணிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவுக்கு இது காரணமாகும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிர்ப்பு காரணமாக, மூலதன பெறுகைகளின் வரியிலிருந்து வருவாய் 227.2 சதவீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.191 மில்லியன் தொகையைக் கொண்டிருந்தது. இவ் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.59 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா.5.6 பில்லியனாக இருந்த உழைக்கும் போது செலுத்தும் வரி வருவாய் 2021 முதல் நான்கு மாதங்களில் 20.9 சதவீதம் குறைந்து ரூபா.4.4 பில்லியனாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலில் இருந்தான வருமானம் மீதான பிடித்துவைத்தல் வரி 2020 ஜனவரி 1, முதல் நீக்கப்பட்டது. தொழிலில் இருந்தான வருமானம் மீதான வரிக்குப் பதிலாக, முற்பண தனிநபர் வருமான வரி 2020 ஏப்ரல் 1, முதல் வதிவோர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலும், ஆனால் வதிவோர்கள் அல்லது மற்றும் பிரஜைகள் அல்லாதவர்களுக்கு கட்டாய அடிப்படையிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதேபோல், வதிவோருக்காக அவர்களின் கோரிக்கையின் பேரில் மட்டுமே கழிக்கப்படும் விருப்பு வரியாக வட்டி மீதான முற்பண வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டதற்கிணங்க, வட்டி மீதான வரி 33.6 சதவீதம் குறைந்து 2021, முதல் நான்கு மாதங்களில் ரூபா.3.3 பில்லியனினைக் கொண்டிருந்தது.

**அட்டவணை 2.5 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் வருமான வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுறை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2020 | 2021 (தற்காலிகமானது) | மாற்றம் % |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத உழைக்கும் போது செலுத்தும் வரி | 57,788 | 46,967 | -18.7 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 5,556 | 4,396 | -20.9 |
| வட்டி வருமானம் மீதான வரி | 4,924 | 3,268 | -33.6 |
| பொரளாதார சேவைக் கட்டணம் | 13,044 | 423 | -96.8 |
| மூலதன ஆதாய வரி | 59 | 191 | 227.2 |
| மொத்தம் | 81,372 | 55,245 | -32.1 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### பெறுமதி சேர் வரி

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமானம், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ரூபா.76.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 32.4 சதவீதம் அதிகரித்து, ரூபா.101.8 பில்லியனாகக் காணப்பட்டதோடு வருடாந்த மதிப்பீட்டில் 32.9 சதவீதத்தை அடைந்திருந்தது. உள்நாட்டு நடவடிக்கைகளின் பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா.62.4 பில்லியன் வரை 29.5 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, இறக்குமதியிலிருந்து பெறுமதி சேர் வரி வருமானம் 37.1 சதவீதம் அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா.39.4 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியமை இதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

**அட்டவணை 2.6 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் பெறுமதி சேர் வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2020 | 2021 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **77,130** | **101,842** | **32.0** |
| உள்நாட்டு | 48,237 | 62,435 | 29.4 |
| இறக்குமதி | 28,893 | 39,407 | 36.4 |
| மீளளிப்புக்கள் | 191 | – | |
| **தேறிய வருமானம்** | **76,938** | **101,842** | **32.4** |
| **மொத்த வருமான மீளளிப்பு சதவீதம் %** | **0.2** | **-** | |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### உற்பத்தித் தீர்வை

மதுபானம் மற்றும் பிற உற்பத்தித் தீர்வை விதிக்கத்தக்க பொருட்களின் வருவாய் அதிகரித்த போதிலும் முக்கியமாக மோட்டார் வாகனங்கள், சிகரெட்டுகள் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் வருமானம் குறைந்து வருவதால், உற்பத்தித் தீர்வையிலிருந்து கிடைக்கும் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.127.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 12.8 சதவீதம் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.111.3 பில்லியனினைப் பதிவு செய்தது. உற்பத்தித் தீர்வை வருமானம் வரி வருவாயில் 26.0 சதவீதமும், மொத்த வருவாயில் 23.1 சதவீதமும் 2021 முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்டு, ஆண்டு மதிப்பீட்டில் 23.4 சதவீதத்தை எட்டியுள்ளது.

**அட்டவணை 2.7 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை**

ரூபா. மில்லியன

| வரி அடிப்படை | 2020 | 2021 (தற்காலிகமானது) | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 35,778 | 52,412 | 46.5 |
| சிகரெட்டு | 33,867 | 27,602 | -18.5 |
| மோட்டார் வாகனங்கள் | 33,551 | 7,921 | -76.4 |
| பெற்றோலியம் | 22,514 | 20,653 | -8.3 |
| ஏனையவை | 1,880 | 2,665 | 41.7 |
| **மொத்தம்** | **127,591** | **111,253** | **-12.8** |


மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

முக்கியமாக பண்டிகைக் காலங்களில் நடமாடல் கட்டுப்பாடுகளை தளர்த்தியதன் காரணமாக, 2021 முதல் நான்கு மாதங்களில் மதுபானத்தின் வருவாய், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா. 35.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது 46.5 சதவீதம் அதிகரித்து ரூபா. 52.4 பில்லியனினைக் கொண்டிருந்தது. அதன்படி, வன் மதுபானத்தின் வருவாய் 78.8 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.36.4 பில்லியன் தொகையையும் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.20.3 பில்லியனினையும் அடையப்பெற்றது. இதேபோல், மாவூறல் (மால்ட்) மதுபானங்களிலிருந்து வருவாய் சேகரிப்பு 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.7.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 முதல் நான்கு மாதங்களில் 117.1 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா.15.2 பில்லியனினைப் பதிவு செய்தது. இருப்பினும், கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் புகைபிடித்தலுக்கு இடையிலான சுகாதாரம் சார்ந்த தொடர்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் விற்பனையின் வீழ்ச்சி காரணமாக சிகரெட்டுகளின் வருவாய் 18.5 சதவீதம் குறைந்து 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா.27.6 பில்லியனினைக் கொண்டிருந்தது. எனினும் இவ் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.33.9 பில்லியன் ஆகும்.

2020, மார்ச் முதல் அத்தியாவசியமற்ற இறக்குமதியைக் குறைக்க அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளினால் உருவான மோட்டார் வாகன இறக்குமதிக் குறைப்பின் காரணமாக மோட்டார் வாகனங்களின் மீதான உற்பத்தி வரி 76.4 சதவீதம் கணிசமாகக் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில், ரூபா.7.9 பில்லியன் தொகையைக் கொண்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ் வருமானம் ரூபா.33.6 பில்லியன் ஆகும்.

2020 ஆம் ஆண்டின் குறித்த காலகட்டத்தில் ரூபா.22.5 பில்லியனாகக் காணப்பட்ட பெற்றோலிய பொருட்களின் வருவாய், குறிப்பாக 2021 மார்ச் இல் டீசல் இறக்குமதிகளைக் குறைத்ததன் காரணமாக 2021 முதல் நான்கு மாதங்களில 8.3 சதவீதம் குறைந்து ரூபா. 20.7 பில்லியனாக இருந்தது. இருப்பினும், பிற உற்பத்தி வரி விதிக்கத்தக்க பொருட்களின் வருவாய் 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா. 2.7 பில்லியன் வரை முன்னேற்றமடைந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.1.9 பில்லியனாக இருந்தது.

வரைபு 2.2 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### ஏனைய வரிகள்

முக்கியமாக இறக்குமதிகள் அதிகரித்ததன் காரணமாக, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு, சுங்க இறக்குமதித் தீர்வை மற்றும் செஸ் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அதிகரித்தது. அதேசமயம், விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு மற்றும் தொலைத்தொடர்பு வரி ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குள் சுருங்கியது.

கொவிட்-19 தொற்றுநோயின் முதல் இரண்டு அலைகளைத் தொடர்ந்து இயல்பு நிலைக்கு திரும்பும் பொருளாதார நடவடிக்கைகளின் பயனாக துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு ஊடாக திரட்டப்பட்ட வருமானம் 2021 முதல் நான்கு மாதங்களில், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவாகிய ரூபா.37.2 பில்லியனினை விட 44.8 சதவீதம் அதிகரித்து ரூபா. 53.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. இது 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டு மதிப்பீடாகிய ரூபா. 170 பில்லியனில் 31.7 சதவிகித அடைவு ஆகும். 2021 பெப்பிரவரி மற்றும் ஏப்பிரல் மாதங்களில் பால் மா, திரவ பெற்றோலிய வாயு, கொக்கோ விதைகள் போன்ற வியாபாரப் பண்டங்கள் தொடர்பாக துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டு விகிதங்களில் குறிப்பிடத்தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கிடையில், சுங்க இறக்குமதித் தீர்வை வருவாயிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 1.2 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா 31.6 பில்லியனினைப் பதிவு செய்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ் வருவாய் ரூபா.31.3 பில்லியனாக இருந்தது. இருப்பினும், அத்தியாவசிய பொருட்கள் மீதான விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டு விகிதங்கள் குறைக்கப்பட்டதால் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 14.9 சதவீதம் குறைந்து ரூபா.20.5 பில்லியனினைப் பதிவு செய்ததுடன் தொலைத்தொடர்பு அறவீட்டு வருமானம் 2021 முதல் நான்கு மாதங்களில் 0.4 சதவீதம் குறைந்து ரூபா.4.3 பில்லியனினைக் கொண்டிருந்தது

2021, முதல் நான்கு மாதங்களில் செஸ் அறவீடு மூலம் அடையப்பெற்ற வருவாய் 110.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து ரூபா. 26.8 பில்லியனினைப் பதிவு செய்த அதேநேரம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ் வருவாய் ரூபா.12.7 பில்லியனாக இருந்தது. இந்த அதிகரிப்பு 2021 வரவுசெலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி சுங்க இறக்குமதித் தீர்வைக்கு இணையாக செஸ் வரி விகிதங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களின் காரணமாக ஏற்பட்டுள்ளது. இறக்குமதி மீதான செஸ் வரியிலிருந்து வசூலிக்கப்பட்ட வருவாய் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 12.2 பில்லியன்களாக இருந்து 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில், 113.9 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா.26.1 பில்லியனினைக் கொண்டிருந்தது.. இதேபோல், 2021 முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதிகள் மீதான செஸ் வரி வருமானம் 39.6 சதவீதம் அதிகரித்து ரூபா. 0.7

பில்லியனினைக் கொண்டிருந்தது. இவ் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.0.5 பில்லியனினைப் பதிவ செய்திருந்தது.

#### வரி அல்லாத வருமானம்

தொற்றுநோயின் நீடித்த தாக்கத்தின் காரணமாக வரி அல்லாத வருமானம் 20.2 சதவீதம் கணிசமாகக் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.54.5 பில்லியன் தொகையைக் கொண்டிருந்தது. வரி அல்லாத வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.68.2 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2021 முதல் நான்கு மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியதன் பயனாக அரசுடைமைத் தொழில்முயற்சிகளில் இருந்து இலாபம் மற்றும் பங்கிலாபங்களின் பெறுகைகள் 146.0 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா.7.0 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இவ் வருமானம் ரூபா.2.9 பில்லியன் ஆகும். சமூக பாதுகாப்பு பங்களிப்பிலிருந்து வருவாய் 27.6 சதவீதம் அதிகரித்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.11.3 பில்லியனினைக் கொண்டிருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா.20.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது விற்பனைகள் மற்றும் கட்டணங்களின் வருவாய் 2021 முதல் நான்கு மாதங்களில் 40.2 சதவீதம் குறைந்து ரூபா. 12.5 பில்லியனாக இருந்தது. 2021 முதல் நான்கு மாதங்களில் வாடகை வருமானத்திலிருந்து வருவாயும் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 8.6 பில்லியனில் இருந்து 83.4 சதவீதம் குறைந்து ரூபா.1.4 பில்லியன் தொகையைக் கொண்டிருந்தது. இதற்கிடையில், வட்டி வருமானமும் ரூபா.1.3 பில்லியன் வரை குறைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வரி அல்லாத வருமானம் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 24.0 சதவீதத்தை அடைந்துள்ளது.

**அட்டவணை 2.8 : அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு**

| விடயம் | ரூபா. பில்லியன் | | | காரணம் |
|---|---|---|---|---|
| | 2020 (சனவரி | 2021 ஆண்டுக்கான மதிப்பீடு. | 2021 (சனவரி –ஏப்பிரல் | |
| வருமான வரி | 81.4 | 371.0 | 55.2 | வருமான வரிகளின் வருவாய் சேகரிப்பு 32.1 சதவீதம் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.55.2 பில்லியனாகவும் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 14.9 சதவீதமாகும். 2020 மார்ச்சு நடுப்பகுதியில் தோன்றிய கொவிட் - 19 தொற்றுநோயின் விளைவாக பொருளாதார செயற்பாடுகள் மந்தநிலையை அடைந்தமை இதற்குக் காரணமாகும். நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரிகளின் வருவாய் மீளாய்வு காலப்பகுதியில் 18.7 சதவீதத்தினால் ரூபா.47.0 பில்லியன் வரை குறைவடைந்தது. இருப்பினும், 2021 முதல் நான்கு மாதங்களில் மூலதன பெறுகைகள் வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம், வருமான வரி வருமானத்திற்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. |
| பெறுமதிசேர் வரி வருமானம் | 76.9 | 310.0 | 101.8 | 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமானம், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 32.4 சதவீதம் அதிகரித்து, ரூபா.101.8 பில்லியனாகக் காணப்பட்டதோடு வருடாந்த மதிப்பீட்டில் 32.9 சதவீதத்தை அடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டில் மீண்டும் ஏற்பட்ட வழமை நிலைமையின் கீழ் சில்லறை வர்த்தகம் உட்பட உள்நாட்டு செயற்பாடுகளின் அதிகரிப்புடன் இணைந்து, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இறக்குமதிகள் 20.0 சதவீதத்தினால் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் மற்றும் இறக்குமதி சார்ந்த செயற்பாடுகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானம் முறையே 29.5 சதவீதத்தினால் ரூபா.62.4 பில்லியன் வரையும் மற்றும் 37.1 சதவீதத்தினால் ரூபா.39.4 பில்லியன் வரையும் அதிகரித்தது. |
| உற்பத்தி வரி | 127.6 | 475.0 | 111.3 | 2021, முதல் நான்கு மாதங்களில் உற்பத்தித் தீர்வையிலிருந்து கிடைக்கும் வருமானம் 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது 12.8 சதவீதம் குறைந்து ரூபா.111.3 பில்லியனினைப் பதிவு செய்தது. இது 2021 ஆண்டுக்குரிய மதிப்பீட்டில் 23.4 சதவீதமாகும். 2020 மார்ச்சில் இருந்து பயணிகள் மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் இதற்கான முக்கிய காரணமாகும். சிகரெட் விற்பனைகளின் வீழ்ச்சி காரணமாக சிகரெட்டுகளில் இருந்து உற்பத்தித் தீர்வை வருமானம் ரூபா.27.6 பில்லியன் வரை 18.5 சதவீதத்தினால் குறைவடைந்தது. பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தித் தீர்வை வருமானமும் அத்தகைய பொருட்களின் நுகர்வுக் குறைப்பின் பிரதிபலிப்பாக டீசல் இறக்குமதி குறைக்கப்பட்டமையால் ரூபா.20.7 பில்லியனாக 8.3 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. முக்கியமாக பண்டிகைக் காலங்களில் விற்பனைகள் மேம்பட்டமையால் மதுவரி வருமானம் 46.5 சதவீதம் அதிகரித்து ரூபா. 52.4 பில்லியனினைக் கொண்டிருந்தது. பிற பொருட்களின் உற்பத்தி வரி வருமானம் மீளாய்வு காலப் பகுதியில் ரூபா. 2.7 பில்லியன் வரை 41.7 சதவீதத்தினால் அதிகரித்து மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான பெறுமதிகளுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்கச் செய்தது. |

| விடயம் | ரூபா. பில்லியன் 2020 (சனவரி | 2021 ஆண்டுக்கான மதிப்பீடு. | 2021 (சனவரி –ஏப்பிரல் | காரணம் |
|---|---|---|---|---|
| இறக்குமதித் தீர்வை | 31.3 | 180.0 | 31.6 | 2021, முதல் நான்கு மாதங்களில் இறக்குமதித் தீர்வை வருமானம் வருடாந்த மதிப்பீட்டில் 17.6 சதவீத அடைவுடன் 1.2 சதவீதம் சற்று அதிகரித்தது. இறக்குமதிகளின் அதிகரிப்பும் சுங்க இறக்குமதித் தீர்வைக்கு ஏற்புடைய சில பொருட்களின் இறக்குமதிக்கான தொடர்ந்தேர்ச்சியான கட்டுப்பாடும் இதற்குக் காரணமாகும். |
| துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 37.2 | 170.0 | 53.8 | துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிற்கு ஏற்புடைய பொருட்களின், முக்கியமாக சில முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்தமையால் 2021, முதல் நான்கு மாதங்களில் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பான வருமான சேகரிப்பு, ரூபா.53.8 பில்லியன் வரை 44.8 சதவீதத்தினால் அதிகரித்து, வருடாந்த மதிப்பீட்டில் 31.7 சதவீதத்தினை அடையப்பெற்றது. |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 24.1 | 110.0 | 20.5 | 2020 ஆம் ஆண்டின் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது விசேட வியாபாரப் பண்ட அறவீடு 2021, முதல் நான்கு மாதங்களில் ரூபா.20.5 பில்லியன் வரை 14.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது 2021 இற்கான வருடாந்த மதிப்பீட்டில் 18.6 சதவீதமாகிய அதேவேளை, இத்தகைய செயலாற்றுகைக்கான காரணம், முக்கியமாக உள்நாட்டு கேள்வியையும் வழங்கலையும் பேண்தகு மட்டத்தில் சமப்படுத்துவதற்காக, தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் வரி விகிதங்கள் குறைக்கப்பட்டமை ஆகும். |
| ஏனைய வரிகள | 30.1 | 108.0 | 53.0 | கடந்த ஆண்டின் குறித்த காலப்பகுதியின் ரூபா.30.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது பிற வரிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2021 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா.53.0 பில்லியன் வரை 76.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து, 2021 ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடில் 49.1 சதவீதத்தினை அடைந்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2021, முதல் நான்கு மாதங்களில் செஸ் அறவீடு மூலம் அடையப்பெற்ற வருவாய் 110.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து ரூபா.26.8 பில்லியனினைப் பதிவுசெய்தமை ஆகும். அத்துடன் இவ் அதிகரிப்பு, 2021 வரவுசெலவு திட்டத்தின்படி வரி விகித மாற்றங்களின் தாக்கங்களுடன் கொவிட்-19 கட்டுப்பாடு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கான தற்காலிக வகுப்பீடு செய்யப்படாத ஒன்லைன் முறையிலான கட்டணங்களின் சேகரிப்பினைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2021 இன் முதல் காலாண்டில் சர்வதேச உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் அழைப்புக்களின் கால அளவின் வீழ்ச்சி காரணமாக தொலைதொடர்பு அறவீடு 0.4 சதவீதத்தினால் சற்று குறைவடைந்தது. |
| வரி அல்லாத வருமானம் | 68.2 | 227.0 | 54.5 | 2020 ஆம் ஆண்டில் பரவிய கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக பொருளாதார செயற்பாடுகள் மந்த நிலையை அடைந்தமையால் வாடகை, வட்டி வருமானம், மத்திய வங்கி இலாப மாற்றல்கள் மற்றும் கட்டணங்கள் வீழ்ச்சியுற்றதால் வரி அல்லாத வருமானம், 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா.68.2 பில்லியனுடன் ஒப்பிடும் போது 20.2 சதவீதம் குறைந்து 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.54.5 பில்லியன் தொகையைக் கொண்டிருந்தது. இருப்பினும், 2021 முதல் நான்கு மாதங்களில் அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களில் இருந்து இலாபம் மற்றும் பங்கிலாபங்களின் வரி அல்லாத வருமானம் ரூபா.7 பில்லியனினை அடைந்த அதேவேளை, சமூக பாதுகாப்புப் பங்களிப்புக்கள் ரூபா.11.3 பில்லியனினை அடைந்திருந்தது. இது 2020 மீளாய்வு காலப்பகுதியை விட 146 மற்றும் 27.6 சதவீத அதிகரிப்பு ஆகும். மேலும், பிற வரி அல்லாத வருமானம் ரூபா.5.9 பில்லியனினைப் பதிவு செய்ததுடன் 2020 ஜனவரி முதல் ஏப்பிரல் வரை சேகரிக்கப்பட்ட வருமானத்தினை விட நான்கு மடங்கு அதிகரிப்பு ஆகும். |
| **மொத்தம்** | **476.7** | **1,951.0** | **481.7** | |

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது

**கட்டம் 2.1: பிரதான அரசிறை நடவடிக்கைகள்: 2021 ஜனவரி – ஜூன் 2021**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வருமான வரி – 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்** | |
| **2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்** | |
| **வருமான வரி விலக்களிப்புக்கள்** | |
| 01.04.2021 | - கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட இலங்கை ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியத்திற்கு (SLREIT) விற்கப்பட்ட, பரிமாற்றம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட காணிகள் அல்லது கட்டடங்கள் தேறல் மூலம் நபரொருவரினால் பெறப்பட்ட ஆதாயங்கள்.<br><br>- ஏதேனுமொரு இலங்கை ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியத்தின் ஏதேனுமொரு அலகு உரிமையாளரினால் முதலீடு அல்லது வியாபாரமொன்றின் மூலதனச் சொத்தொன்றின் தேறல் மூலம் ஈட்டப்பட்ட தொகைகள் அல்லது அலகுகளின் தேறல் மூலமான ஆதாயங்கள் மற்றும் பங்கிலாபங்கள்.<br><br>- ஏதேனுமொரு நலன்புரி அமைப்பினால் பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி (அங்கத்தவர்களின் சேமிப்பினை ஊக்குவிக்கின்ற நல நிதியம் உள்ளடங்கலாக).<br><br>- பல்தேசிய கம்பனியொன்றினால் ஏதேனும் உள்நாட்டு வங்கியொன்றில் மதிப்பீட்டாண்டொன்றுக்காக அதன் இறக்குமதிச் செலவினத்தினை மேற்கொள்ளும் வகையில் வெளிநாட்டு நாணயத்தில் வைப்புச்செய்யப்பட்டு திறக்கப்பட்டு, பேணப்படுகையில், அத்தகைய வைப்பு மூலமாக பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி.<br><br>- இலங்கை அரசாங்க திறைசேரி உத்தரவாதங்களை அடிப்படையாகக் கொண்டு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் சமுர்த்தி சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளினால் ஈட்டப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி அல்லது தள்ளுபடிகள்.<br><br>- 2021 ஏப்ரல் 01ஆம் திகதியன்று அல்லது அல்லது அதன் பின்னர் இலங்கை சர்வதேச இறையாண்மை முறிகள் மீது ஐ.அ.டொ.100 மில்லியனை விஞ்சாத திரட்டிய முதலீடு ஒன்றினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை சர்வதேச அரசிறையாண்மை முறிகள் மீது மேற்கொண்ட வணிகர் அல்லது வர்த்தக வங்கியொன்றினால் ஈட்டப்பட்ட அல்லது உழைக்கப்பட்ட மற்றும் தேறல் மூலம் கிடைக்கப்பெறுகின்ற ஆதாயங்கள்.<br><br>- தங்கம், இரத்தினக் கற்கள் அல்லது ஆபரணங்களை பட்டை தீட்டி மெருகூட்டி அவற்றினை ஏற்றுமதிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ள வியாபாரமொன்று, அவ்வாறு, இறக்குமதி செய்யப்பட்ட தங்கம், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களை பட்டை தீட்டி, மெருகூட்டி மீள ஏற்றுமதிசெய்வதன் மூலம் ஈட்டிய அல்லது உழைத்த இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள், அத்தகைய இலாபங்கள் அல்லது ஆதாயங்கள் வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்டு, அவை உள்நாட்டு வங்கிக் கணக்கொன்றுக்கு அனுப்பப்படுகையில்.<br><br>- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கருத்தாக்கத்தின் கீழ் தரப்படுத்தப்பட்ட மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனுமொரு தொழிற்கல்வித் திட்டத்திலிருந்து ஏதேனுமொரு தொழிற்கல்வி நிறுவனத்தினால் குறித்த அத்தகைய பெறப்பட்ட அல்லது ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் பெறுமெனில், அத்தகைய நிறுவனம் தமது மாணவர் ஆட்சேர்ப்பினை முந்தைய ஆண்டின் மாணவர் ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் ஒப்பிடும்போது குறித்த மதிப்பீட்டு ஆண்டிற்காக இரட்டிப்பாக்கி, பேணுமெனில். மேற்குறித்த நோக்கத்திற்காக ஐந்து வருட கால விலக்களிப்புக்கள் காணப்படுகின்றன.<br><br>- இலங்கையில் வணிகத்தை மேற்கொள்ளும் வதியாதோர் கம்பனியொன்று இலங்கை நிரந்தர ஸ்தாபனத்தின் மூலம் இலாபங்களையும் வருமானத்தையும் ஈட்டி, அத்தகைய மொத்த இலாபத்தை குறைந்தபட்சம் தக்க வைத்து, இலங்கையில் அதன் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக மூன்று ஆண்டு காலம் முதலீடு செய்யுமெனில் அல்லது கொழும்பு பங்குச் சந்தையில் இருந்து ஏதேனும் பங்குகளை அல்லது ஏதேனும் திறைசேரி உண்டியல்களை பெறுவதற்காக அல்லது ஏதேனும் திறைசேரி முறிகளை, அல்லது இலங்கை சர்வதேச இறையாண்மை முறிகளைப் பெறுவதற்காக பயன்படுத்துமெனில், அத்தகைய வதிவல்லாக் கம்பனிக்கு பணவனுப்பல் வரி (பணவனுப்பல் இலாபத்தின் பேரில்14% சதவிகிதத்தில்) செலுத்த வேண்டியது அவசியமில்லை. அத்தகைய விலக்களிப்பானது அந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்புடமையாகும். |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வரி விடுமுறைகள்** | |
| 01.04.2021 | பின்வருகின்ற புதிய வியாபாரங்கள் மூலம் பெறப்படுகின்ற அல்லது ஈட்டப்படுகின்ற ஆதாயங்கள் மற்றும் இலாபங்களுக்காக (முதலீட்டு வருமானங்கள் நீங்கலாக) வரி விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக இந்த வியாபாரம் இரண்டு வருட காலத்திற்குக் முன்னெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>- கட்டுமானத் துறையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக இலங்கையில் நிறுவப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தனித் தளத்தில் மீள்சுழற்சிசெய்யப்பட்ட கட்டுமானப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பத்து ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குறுத்தப்பட்டு, தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சிக் கருத்தாக்கத்தின் கீழ் நியமமான ஏதேனும் நிறுவனமொன்றிலிருந்து தொழிற்கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் தனிநபர் ஒருவரினால் 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் வணிகமொன்றிற்காக ஐந்து ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>- இலங்கையில் வதிவோர் ஒருவரினால் படகுகள் அல்லது கப்பல்களைக் கட்டும் பணியினை ஆரம்பித்து அதன் மூலம் ஏதேனும் ஆதாயங்கள் அல்லது இலாபங்கள் பெறப்படுகையில் அல்லது ஈட்டப்படுகையில் அத்தகைய பணியினைப் பொறுப்பேற்கையில் ஏழு ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>- நூற்றுக்கும் குறையாத மெகா வோரட் சூரிய அல்லது காற்றலை மின் சக்தியினை உற்பத்திசெய்யும் ஆற்றல் கொண்ட ஏதேனுமொரு ‘‘புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருத்திட்டம்’’ தாபிக்கப்பட்டு, அத்தகைய சக்தி மூலம் தேசிய வலைப்பின்னலுக்கு மின்சக்தி வழங்கப்படுகையில் ஏழு ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.<br>- உள்நாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, வதிவோரொருவரினால் தகவல்தொடர்பாடல் கோபுரங்கள் நிர்மாணித்து அதனோடு தொடர்புபட்ட உபகரணங்களை நிறுவி அல்லது அத்தகைய கட்டுமானத்திற்கு தேவையான தொழில்நுட்ப சேவைகளை இலங்கையில் வழங்கும் எவரேனும் நபரொருவரினால் 2021 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அத்தகைய நிருமாணம் அல்லது பொருத்துகைக்காக ஐந்தாண்டுகள் வரி விலக்களிக்கப்படும். |
| **சலுகை ரீதியான வரி விகிதங்கள்** | |
| 01.04.2021 | - இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண விற்பனையின் போது தனிநபர்கள் மீது 14%, கம்பனிகளுக்கு 14% தள வீதத்திலும் அதிகூடிய வரி விகிதத்தின ஏற்புடைமையாக்கல்.<br>- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட எரிசக்தியினை தேசிய வலைப்பின்னலுக்கு வழங்குதன் பேரில் தனிநபர்களுக்காக அதிகபட்சம் 14 சதவீதத்திலும் கம்பனிகளுக்கு மட்டகமாக 14 சதவீதத்திலும் வரியினை ஏற்புடமையாக்கப்படல்.<br>- 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்ற மூன்று மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக (2022/2023 முதல் 2024/2025வரை) 2021 சனவரி 01 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆம் காலப் பகுதியின் போது கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் அதன் பங்குகளை பட்டியற்படுத்துகின்ற ஏதேனுமொரு கம்பனி மீது 14 சதவீத வரி விகிதமும் ஏற்புடமையாக்கப்படுகிறது. |
| **வரிப் பொறுப்புடமையினைக் குறைத்தல்** | |

<table>
<tr><th>பயன்வலுத் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td>01.04.2021</td><td>
<table>
<tr><th>வருமானம்</th><th></th><th>வரி குறைப்பு</th></tr>
<tr><td colspan="2">2021/2022 மதிப்பீட்டு ஆண்டிற்கான இலங்கை பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் உரிமம் வழங்கப்பட்டு கொழும்புப் பங்குச் சந்தையில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னரும் ஆனால் 2021 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் அதன் பங்குகளை பட்டியற்படுத்துகின்ற ஏதேனும் கம்பனியொன்றினால் (முதலீட்டுச் சபைக் கம்பனிகள் உள்ளடங்கலாக ஆனால் முதலீட்டுச் சொத்துக்களின் தேறலில் இருந்தான ஆதாயங்கள் நீங்கலாக) செலுத்தத்தக்க திரட்டிய வருமான வரி மீது.</td><td>50%</td></tr>
<tr><td colspan="3">பன்னாட்டு கம்பனியொன்றினால் பெறப்பட்ட பங்கிலாப வருமானத்துடன் தொடர்புடைய வரிப் பொறுப்புடைமை மீது.</td></tr>
<tr><td>(i)</td><td>2020/2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021/2022 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதிகள் குறைந்தபட்சம் 30 சதவீதத்தனால் அதிகரிக்குமெனில்,</td><td>25%</td></tr>
<tr><td>(ii)</td><td>2021/2022 உடன் ஒப்பிடுகையில் 2022/2023 நிதியாண்டில் ஏற்றுமதிகள் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில்.</td><td>50%</td></tr>
<tr><td>(iii)</td><td>2020/2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றமதிகள் 2023/2024 ஆம் ஆண்டில் மேலே(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அல்லது 2023/2024 ஆம் ஆண்டுக்காக அதே அளவில் பேணப்படுகையில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில்.</td><td>50%</td></tr>
<tr><td colspan="2">பண்ணைச் செயற்பாடொன்றின் மூலம் உற்பத்திசெய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் அதே உற்பத்தியாளரினால் தயாரிப்பு அல்லது பதப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின், அவற்றுடன் தொடர்புபற்ற வரிப் பொறுப்பின் மீது.</td><td>25%</td></tr>
</table>
</td></tr>
<tr><th colspan="2">மதிப்பிடத்தக்க வருமானத்தினை கணிப்பீடு செய்கையில் கழிப்பனவுகள்</th></tr>
<tr><td>01.04.2021</td><td>
- சந்தை ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் அல்லது விளம்பரப் பிரச்சாரங்கள், விளம்பரப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் பிரச்சாரங்கள், பிரதான ஊடகங்களில் அல்லது சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தல். உற்பத்தியினை அறிமுகப்படுத்தல் அல்லது பிரச்சாரம் மற்றும் செயலாக்கம், விற்பனைப் புள்ளியில் பொருட்களின் மேம்பாடு அல்லது அச்சிடல் செவினம் பேரில் ஏற்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்பாடல் செலவுகள், அவை மூலதன அல்லது வருவாய் இயல்பினைக் கொண்டிருந்தாலும் வியாபாரத்திலிருந்தான வருமானத்தினைக் கணிக்கும் போது கழிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறது.<br>
- தொழிற்பயிற்சிப் பாடநெறியொன்றினைப் பூர்த்திசெய்ததன் பின்னர் இளைஞர் மற்றும் யுவதிகளினால் ஆரம்பிக்கப்படுகின்ற வியாபார நடவடிக்கையொன்றுக்காக ஆரம்ப கட்ட மூலதனமாக வழங்கப்பட்ட ஏதேனும் கடன்கள், அத்தகைய நிதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நிதிச் செலவுகள், அத்தகைய நிதி நிறுவனங்களுக்கான விலக்களிப்புச் செலவாக கருதப்படும்.(இது 5 வருட வரி விடுமுறைக்காக தகுதிபெறுகின்றது)
</td></tr>
<tr><th colspan="2">புதிய தகைமைக் கொடுப்பனவுகள்</th></tr>
<tr><td>01.04.2021</td><td>
- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் உறுதிசெய்யப்பட்டு அறிவுறுத்தல்களுக்கு அமைய சமுர்த்திப் பயனாளிக் குடும்பமொன்றினைச் சேரந்த பெண் தனி நபரொருவருக்கு கடையொன்றினைத் தாபிப்பதற்காக வதியோர் ஆளொருவரினால் பணம் மூலம் அல்லது வேறுவிதமாக மேற்கெள்ளப்பட்ட பங்களிப்பு.<br>
- நிதி நிறுவனமொன்றினால் வேறேதேனும் நிதி நிறுவனமொன்றினைப் பற்றுகையில் அல்லது கூட்டிணைக்கையில் அத்தகைய செலவினம் இலங்கை மத்திய வங்கியினால் எல்லா விடயங்களையும் ஒவ்வொன்றாக ஒவ்வொரு விடய அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு ஏதேனும் அத்தகைய நிதி நிறுவனமொன்றின் எல்லா நிகழ்வுகளும் ஒவ்வொன்றாக
</td></tr>
</table>

<table>
<tr><th>பயன்வலுத் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td></td><td>- பரிசீலனைக்கு இலங்கை மத்திய வங்கியினால் உட்படுத்தி, உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்ட மொத்தமாக கழிக்கப்படக் கூடிய செலவினமானது, மூன்று வருட காலப்பகுதிக்காக சமதொகைகளாகப் பிரிக்கப்பட்டு, மதிப்பிடத்தக்க வருமானத்திலிருந்து மொத்தத் தகைமைக் கட்டணம் வரையில் கழிக்கப்படுதல் வேண்டும்.<br><br>- ஏதேனும் திரைப்படமொன்றின் உற்பத்திச் செலவினம் ரூபா ஐந்து மில்லியனை விஞ்சாதிருப்பின் (அத்தகைய திரைப்படத்தின் விளம்பரச் செலவு உள்ளடங்கலாக) தயாரிக்கப்படுமெனில் அல்லது சினிமாக் கொட்டகையொன்றினை புதிதாக நிருமாணித்தல், அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கல் என்பன ரூபா இருபத்து ஐந்து மில்லியனினை விஞ்சாதிருப்பின் அல்லது சினிமாக் கொட்டகையென்றின் புனரமைப்புச் செலவினம் ரூபா பத்து மில்லியனுக்கு மேற்படாதிருப்பின், கழிப்பனவானது ஆண்டின் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டு அடுத்து வரும் ஆண்டுக்காக முன்கொண்டு செல்லப்படமுடியும்.</td></tr>
<tr><td colspan="2">''குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பேற்புக்கள்'' எனக் கருதுதல்</td></tr>
<tr><td>01.04.2021</td><td>பின்வரும் வியாபாரங்கள் 14% விகிதத்திற்கு ஏற்புடமையான குறிப்பீடுசெய்யப்பட்ட பொறுப்பேற்புக்கள் என கருதப்படுகின்றன.<br><br>- குறிப்பீடுசெய்யப்பட்ட துறைமுக வளாகமொன்றினுள் உள்நாட்டு பங்கர் வழங்குநர்களுக்கு கப்பல் எரிபொருள் வழங்குவது உட்பட கப்பல் எரிபொருள் வழங்குவதற்காக வழங்கப்பட்ட பங்கரின் சேவைகள்<br><br>- 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ள ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டுள்ள கம்பனியொன்றினால் தயாரிக்கப்பட்ட பொருட்களை இலங்கையில் விற்பனை செய்கையில்,<br><br>(அ) 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ், இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனுமொரு கம்பனி அல்லது 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க. மூலோபாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரி விடுமுறையினை பெற்றுள்ள ஏதேனும் கம்பனியொன்று, அதன் கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் அத்தகைய ஒப்பந்தத்தின் எற்பாடுகளின் கீழ் வரித் தீர்வையற்ற முறையில் மூலப் பொருட்களை அல்லது வரித் தீர்வையற்ற பொருட்களை இறக்குமதிசெய்யப்பட கருத்திட்ட அமுலாக்கல் காலத்தில் அனுமதி பெற்றிருக்கையில்; அல்லது<br><br>(ஆ) ஏதேனும் அரசாங்க அதிகாரத்தின் கீழ் குறிப்பிட்ட சில பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தகுதிபெறுகின்ற எவரேனும் ஆளொருவர்,<br><br>2021 ஏப்ரல் 01 ஆம் திகதி ஆரம்பிக்கின்ற 3 வருட காலப்பகுதியினுள் இறக்குமதி மாற்றீடு என்ற வகையில் இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவில் இறக்குமதிசெய்கையில்.</td></tr>
<tr><td colspan="2">வரி ஊக்குவிப்பனவுகள் மற்றும் நடைமுறையிலுள்ள மாற்றங்கள்</td></tr>
<tr><td>01.04.2021</td><td>- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கின்ற மூன்றாண்டு காலப்பகுதிக்காக ரூபா 500 மில்லியன் வரையறையொன்றுடன் செலவினத்தின் 100% மேலதிக கழிப்பனவுகள் வழங்கப்படும். ஆயினும், குறித்த செலவினமானது 2021/2022 முதல் 2023/2024 வரையிலான மூன்று வருடங்களின் போது ஆகக் குறைந்தது 65% உள்நாட்டு பெறுமதிச் சேர்க்கையுடன் பொருட்கள் அல்லது சேவைக்கு குறித்த செலவினம் காரணமாக அமைதல் வேண்டும்.<br><br>- குத்தகைக் காணியொன்றில் கட்டிடமொன்றினை நிருமாணித்தல் அல்லது இது போன்ற பணிகளை மேம்படுத்தல் செயற்பாடானது மேம்பட்ட மூலதனக் கொடுப்பனவு நோக்கங்களுக்காக பரிசீலிக்கப்படும்.<br><br>- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஆறாவது அட்டவணையின் கீழ் ஐ.அ.டொ.3 மில்லியன் வரையிலான புதிய முதலீடுகள் தொடர்பில் அதிகரித்த மூலதன கொடுப்பனவுகளை கோருவதற்கான செல்லுபடியான காலம் அடுத்து வரும் மூன்று (3) ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளமை.<br><br>- 2021/2022 முதல் 2022/2023 வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினத்தின் மீது மேலதிக 100 சதவீத கழிப்பனவு வழங்கப்படுகிறது.</td></tr>
</table>

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **வதிவோர் தனிநபர்களுக்குரான வரி நிவாரணங்கள்** | |
| 01.04.2021 | - சூரிய கலத்தில் முதலீடு செய்யும் தனிநபர்களுக்கு அதிகபட்ச குறைப்பாக ஆண்டொன்றுக்கு ரூபா 600,00 அதிகபட்ச குறைப்பாக நிவாரணம் வழங்கப்படும். முதலீடானது வங்கிக் கடன் மூலம் நிதியளிப்புச் செய்யப்படமுடியும் என்பதோடு, இது போன்ற சந்தர்ப்பங்களில் நிவாரண நோக்கங்களுக்காக கடன் மீளத் திருப்பிச் செலுத்தலானது நிவாரண நோக்கங்களுக்காக பரிசீலிக்கப்படும். |
| **வரி நிருவாக ஏற்பாடுகளுக்கான மாற்றங்கள்** | |
| 01.04.2021 | - மூலதன ஈட்டு வரி வருமானத்தினைப் பெறுவதற்காக அனுமதித்தல்( மாதத்தின் அனைத்து மூலதன வருமான கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியது) தேறல் நிகழ்ந்த சம்பந்தப்பட்ட பஞ்சாங்க மாதத்தின் முடிவின் பின்னர் முப்பது நாட்களுள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.<br>- எவரேனும் நபரொருவர் வருமானத்திலிருந்தான வருவாயைப் பெற்றுக்கொள்வதற்கு தாக்கல் செய்வாராயின், அது சம்பந்தப்பட்ட மதிப்பீட்டிற்கான அவரது சுய மதிப்பீடாக கருதப்படுவதோடு, அதே நபர் அதே ஆண்டில் தாக்கல் செய்த மூலதன ஈட்டு வரி வருமானம் சுய மதிப்பீடுகளுக்கு வழிவகுக்காது.<br>- வரி தொடர்பான அனைத்து மூல ஆவணங்களிலும் அல்லது வரி செலுத்துவோரின் அடிப்படை ஆவணங்களிலும் வரி அடையாள எண்ணை (TIN) பயன்படுத்துவது கட்டாயமானதாக்கல்.<br>- இலங்கையிலுள்ள அல்லது வெளியிலுள்ள அனைத்துக் கம்பனிகளும் தமது வரிகளை இலத்திரனியல் கோவை முறையில் (e-filing) கனணி முறைமையில் அல்லது செல்லிட கருவிகளைப் பயன்படுத்தி சமர்ப்பிப்பினை கட்டாயமாக்கல். |
| **பெறுமதி சேர் வரி – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் மீதான திருத்தங்கள்** | |
| **2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரித் (திருத்தச்) சட்டம்** | |
| 01.01.2021 | 2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரித் (திருத்தச்) சட்டம்<br>- முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் தைக்கப்பட்ட ஒரு சில ஆடைகளை உள்நாட்டில் விற்பனை செய்வதன் பேரில் துண்டு அடிப்படையில் துண்டு ஒன்றுக்கு ரூபா 100 இலிருந்து துண்டு ஒன்றுக்கு ரூபா 25 இற்கு குறைப்பதற்காக. |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி – 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 05.04.2021 | 2021.04.05 ஆம் திகதிய **2222/2** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இலங்கைப் பொலீசுக்கு 2,000 முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்புடமையான தீர்வையினை விலக்களிப்பதற்காக. |
| 06.04.2021 | 2021.04.05 ஆம் திகதிய **2222/3** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ஆட்டோமொபைல் உற்பத்தி/பொருத்துதல் கைத்தொழில் மற்றும் ஆட்டோ மொபைல் கூறு உற்பத்தித் தொழிலுக்கான நியமமான இயக்க நடைமுறைகளை செயற்படுத்துவதனோடு இணைந்த வகையில் உள்நாட்டில் பொருத்தப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது புதிய தீர்வைக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக |
| 23.04.2021 | 22.04.21 ஆம் திகதிய **2224/24** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ஆட்டோமொபைல் வாகனங்கள் மீதான தீர்வை விகிதங்களைத் திருத்துவதற்காக |
| **மது வரி (கட்டளைச் சட்ட) தீர்வை – மதுவரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 01.01.2021 | **01/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு பூல்புறூப் ஒட்டுத் துண்டு மற்றும் ஒட்டுத் துண்டு முறைமை முகாமையினை செயற்படுத்துவதற்கான திகதியினை நீடிப்பதற்காக |
| 01.01.2021 | **02/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- FL/7, FL/8, FL/11, FL/12 மற்றும் FL/22ஆ என்பனவற்றின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உரிமக் கட்டணத்திற்கு விலக்களிப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 08.01.2021 | **03/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.07 ஆம் திகதிய 2209/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- இலங்கையில் நிறுவப்பட்ட உரிமம்பெற்ற எந்தவொரு தொழிற்சாலையிலிருந்தும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.25 என்ற விகிதத்தில் மதுவரித் தீர்வையினை விதிப்பதற்காக.<br>மதுவரி அறிவித்தல் இல. 993, (2016.12.20 ஆம் திகதிய 1998/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவத்தல்) இரத்துச்செய்யப்பட்டது) |
| 07.01.2021 | **04/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2020. 01.07 ஆம் திகதிய 2209/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- கள்ளுத் தவறணைகள் திறக்கப்பட்டு மூடப்படும் நேரத்தினைத் திருத்துவதற்காக 03/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலினைத் திருத்துவதற்காக<br>மதுவரி அறிவித்தல் இல. 11/2018 (13.06.2020 ஆம் திகதிய 2075/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) இரத்துச்செய்யப்பட்டது. |
| 07.01.2021 | **05/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 01.07 ஆம் திகதிய 2209/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- கள்ளு சில்லறை விற்பனை மற்றும் கொண்டுசெல்லலை 3 லீற்றர்களுக்கு வரையறுக்க வேண்டுமென்பதற்காக.<br>1985.08.14 ஆம் திகதிய மதுவரி அறிவித்தல் இல. 745 இரத்துச்செய்யப்பட்டது. |
| 11.01.2021 | **06/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 01.11 ஆம் திகதிய 2210/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- அங்கீகாரக் கட்டணத்தை 2021 ஆம் ஆண்டிற்காக (i) 3 நட்சத்திரங்கள் மற்றும் 4 நட்சத்திர வகை ஹோட்டல்கள் மற்றும் (ii) 5 நட்சத்திரங்கள் ஹோட்டல் மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர /பல்பொருள் ஹோட்டல்கள்: பல்பொருள் வில்லாக்கள் / பாரம்பரிய ஹோட்டல்களுக்கு மாத்திரமே விலக்களிக்க வேண்டுமென்பதற்காக. |
| 25.02.2021 | **07/2021** ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 02.25 ஆம் திகதிய 2216/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- பாதுகாப்புப் பண்புக் கூறுகள் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக. |
| **துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு – 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 05.01.2021 | 05.01.2021 ஆம் திகதிய **2209/17** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மருந்தாக்கல் உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள் மற்றும் முகக் கவச உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள் என்பனவற்றிற்கான துறைமுக, விமான நிலைய விலக்களிப்பினை வழங்குவதற்கான விதப்புரை வழங்கும் அதிகாரத்தினை சுகாதார அமைச்சின் செயலாளரிடமிருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் மருந்தாக்கல் ஒழுங்குவிதிக்கான இராஜாங்க அமைச்சுக்கு மாற்றுவதற்காக. |
| 23.02.2021 | 22.02.2021 ஆம் திகதிய **2216/3** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பால் மா இறக்குமதியின் பேரில் 2.5 சதவீத சலுகை விகிதமொன்றினை வழங்குவதற்காக. |
| 09.03.2021 | 09.03.2021 ஆம் திகதிய **2218/51** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- கருத்திட்ட அமுலாக்கலின் போது அல்லது கட்டுமானப் பணி காலத்தின் போதும் மற்றும் வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பிக்க முன்பும் ஐ.அ.டொ.50 மில்லியனுக்கு குறையாத பரந்தளவிலான மூலதனத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி நிறுவனமொன்றுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வையிலிருந்து விலக்களிப்பதற்காக. |
| 20.03.2021 | 19.03.2021 ஆம் திகதிய 2219/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- கருங்காரை உற்பத்திக்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் எண்ணெயிலிருந்து துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வையினை விலக்களிப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 20.04.2021 | 19.04.2021 ஆம் திகதிய 2224/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>திரவ நிலையிலுள்ள பெற்றோலிய எரி வாயு இறக்குமதியின் பேரில் சர்வதேச ரீதியாக திரவ வாயுவின் விலைகள் மெ.தொ ஒன்றிற்காக ஐ.அ.டொ.325 இனை அடையும் வரையில் மெ.தொ ஒன்றுக்கு 7.5 சதவீதம் அல்லது மெ.தொ.ஒன்றுக்கு ரூபா 2,000 என்பதில் எது குறைவாக இருக்கிறதோ அதற்கு சலுகை வீதமொன்றினை வழங்குவதற்காக. |
| 12.06.2021 | 2021.06.11 ஆம் திகதிய 2231/19 ஆம் இலக்க வர்த்மானி அறிவித்தல்<br><br>கொக்கோ விதைகள் (முழுமையான/உடைக்கப்பட்ட அல்லது பச்சையான) இறக்குமதி மீது 5 சதவீத வரிச் சலுகை விகிதத்தினை வழங்குவதற்காக. |
| **செஸ் அறவீடு – 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்** | |
| 13.01.2021 | 2021.01.12 ஆம் திகதிய **2210/09** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>- சுங்க உற்பத்தி இன் பொண்ட் திட்டத்தின் கீழ் அல்லது ஏற்றுமதி பதனிடல் திட்டத்திற்காக தற்காலிக இறக்குமதித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்து, இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்துகொண்டுள்ள ஏதேனுமொரு தொழில்முயற்சி நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் அல்லது பராமரிப்புச் செயற்பாட்டின் உருவாக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களை பயன்படுத்தி, ஏற்றுமதி நோக்கத்திற்காக பொருட்களின் உற்பத்திச் செயற்பாட்டின் மூலமாக உருவாக்கப்பட்ட துகள்கள் அல்லது கழிவுகளை ஏதேனும் தொழில்முயற்சி நிறுவனமொன்றினால் ஏற்றுமதி செய்கையில் அதன் மீதான செஸ் வரியினை விலக்களிப்பதற்காக. |
| 16.03.2021 | 2021.03.15 ஆம் திகதிய 2219/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>தரை ஓடுகள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் இறக்குமதி மீதான செஸ் வரியினைத் திருத்துவதற்காக. |
| 18.03.2021 | 2021.03.17 ஆம் திகதிய 2219/36 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- செயற்திட்ட செயற்படுத்தல் காலத்தில் அல்லது அந்த செயற்திட்டத்தின் கட்டுமான காலத்தில் ஆனால் வர்த்தக தொழிற்பாடுகளை தொடங்குவதற்கு முன்னர் 2019 மார்ச்சு 06 அன்று அல்லது அதற்குப்பிறகுள்ள ஒவ்வொரு நிலையிலும் 50 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேல் முதலீட்டுடன் எந்தவொரு நிறுவனத்தாலும் மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டத்தினாலும் இறக்குமதி செய்யப்படும் எந்தவொரு பொருட்களுக்கும் செஸ்தீர்வையினை விலக்களிக்களிப்பதற்காக. |
| **சுங்க இறக்குமதித் தீர்வை – 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 23.04.2021 | **1/2021** ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2020.11.17 ஆம் திகதிய 2224/25 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br><br>பொதுக் கணக்குகள் குழுவின் வழிகாட்டுதல்களுக்கு அமைய நடமாடும் பட்டறையாக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கான தேசிய இ.மு.துணைப் பிரிவுகளை உருவாக்கல். |
| 18.05.2021 | **2/2021** ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2020.05.17 ஆம் திகதிய 2228/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br><br>பெயரளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிப்பதற்காகவும் வருமானக் கசிவினை பாதுகாப்பதற்காகவும் முகக் கவசத்திற்கு தேசிய இ.மு.துணைப் பிரிவுகளை உருவாக்கல். |
| **சுங்கத் தீர்வை மீதான மேலதிக அறவீடு – சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** | |
| 02.02.2021 | 2021.02.01 ஆம் திகதிய 2213/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>தெரிவுசெய்யப்பட்ட எரி பொருள் எண்ணெய் இறக்குமதியின் பேரில் பூச்சிய சதவீதத்திற்கு மேலதிக அறவீட்டினை குறைப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **சுங்க இறக்குமதித் தீர்வை தளர்த்தீடு – சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** | |
| 01.01.2021 | - பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 7 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 18 வரையும் பெற்றோல் (ஒக்ரேன் 95) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 6 இலிருந்து சுங்கத் தீர்வை தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 16 வரையில் அதிகரிப்பதற்காகவும்.<br>- சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 இற்கு சுங்கத் தீர்வையினைத் தளர்த்துவதற்கும் ஒட்டோ டீசல் மீதான சுங்கத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 இற்கு அதிகரிப்பதற்கும். |
| 02.02.2021 | - பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 18 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 29 வரை அதிகரிப்பதற்கும் பெற்றோல் (ஒக்ரேன் 95) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 16 இலிருந்து சுங்கத் தீர்வை தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 8 வரையில் குறைப்பதற்காகவும்<br>- சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 என்ற சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை நீக்குவதற்கும் ஒடோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லிற்றருக்கு ரூபா 20 இலிருந்து லீற்றருக்கு ரூபா 14 இற்கு குறைப்பதற்காக. |
| 25.03.2021 | - பெற்றோல் (ஒக்ரேன் 92) சுங்க இறக்குமதி தீர்வையினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 29 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 45 வரை அதிகரிப்பதற்கும் பெற்றோல் (ஒக்ரேன் 95) மீதான இறக்குமதி தீர்வையினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 16 இலிருந்து சுங்கத் தீர்வை தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 24 வரையில் அதிகரிப்பதற்காகவும்.<br>- சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10 என்ற சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை வழங்குவதற்கும் ஒடோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லிற் க்கு ரூபா 14 இலிருந்து லீற்றருக்கு ரூபா 25 இற்கு அதிகரிப்பதற்காகவும். |
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு  2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 14.01.2021 | 2021.01.13ஆம் திகதிய 2210/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- சீனி, பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 19.01.2021 | 2021.01.18ஆம் திகதிய 2211/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- சீஸ், கொத்தமல்லி, மஞ்சல் மற்றும் உழுந்து மா இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 12.02.2021 | 2021.02.11 ஆம் திகதிய 2214/58 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- அனைத்து வகை கருவாடுகளுக்குமான தீர்வை விகிதங்களை அதே விலையில் பேணுவதற்கும் ஆறு மாதங்களக்கு சந்தையில் காய்கறிகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக உருளைக் கிழங்குக்கான தீர்வையினை ரூபா 15 இற்கு குறைப்பதற்குமாகவும். |
| 04.03.2021 | 2021.03.03ஆம் திகதிய 2217/23 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல<br>- தகரத்திலடைத்த மீன் உழுந்து, கௌபி, குரக்கன் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 14.04.2021 | 13.04.2021 2021.04.13ஆம் திகதிய 2223/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல<br>- சீனி, பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |
| 28.04.2021 | 2021.04.27ஆம் திகதிய 2225/1 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- மீன், மாசிக் கருவாடு பாசிப் பயறு, மங்குஸ்தான், கிவிப் பழம் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| 28.04.2021 | 2021.04.27ஆம் திகதிய 2225/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- தேங்காய் துருவல் (ஏனையவை) மீதான விசேட வியாபார பண்ட அறவீடாக கி.கி.க்கு ரூபா 300 இனை மூன்று மாதங்களுக்கு அமுல்படுத்துவதற்காகவும் பி.சி.சி லங்கா லிமிடெட்டுக்கு தீர்வைத் தளர்வினை வழங்குவதற்காகவும். |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 27.04.2021 | 2021.04.27ஆம் திகதிய 2225/13 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை கி.கிராமொன்றுக்கு ரூபா 50 இனால் அதிகரிப்பதற்காக. |
| 18.05.2021 | 2021.05.17ஆம் திகதிய 2228/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- 22 பண்டங்களின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக. |
| **ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்** | |
| 05.01. 2021 | 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.01.05ஆம் திகதிய 2209/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் இறக்குமதி டயர்களோடு சம்பந்தப்பட்ட பொருட் பட்டியலினைத் திருத்துவதற்காக. |
| 11 .02.2021 | 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.02.11ஆம் திகதிய 2214/56 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் இறக்குமதி மட்பாண்டப் பொருட்கள் மற்றும் சாரி புடவைகள் சம்பந்தப்பட்ட பொருட் பட்டியலினைத் திருத்துவதற்காக. |
| 07.04.2021 | 2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.06ஆம் திகதிய 2222/31 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- பாம் எண்ணெய் இறக்குமதியினை ஒழுங்குறுத்துவதற்காக. |
| 23.04.2021 | 2021 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.23ஆம் திகதிய 2224/43 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- நடமாடும் பட்டறைகளுக்காக ஐசிஎல் தேவைப்பாட்டினை விதிப்பதற்காக. |
| 23.04.2021 | 2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.23ஆம் திகதிய 2224/44 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- புதிய வகை நடமாடும் பட்டறைகளை இறக்குமதிசெய்வதனை தற்காலிகமாக இடைநிறுத்துதல். |
| 07.05.2021 | 2021 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.05.06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>- இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்காக. |
| **2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி** | |
| 05.01.2021 | 2021.01.05 ஆம் திகதிய 2209/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றம் என்ற விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தின் கீழ் சொகுசு வரியினைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல். |
| **2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பர அறவீடுகள்** | |
| 09.02.2021 | 2021.02.09 ஆம் திகதிய 2214/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் என்பனவற்றின் மீது தொலைக்காட்சி நாடக , திரைப்பட மற்றும் வர்த்தக அறவீட்டு வரிகள் மீள அமுல்படுத்துவதற்காக. கொவிட் - 19 நோய்த்தொற்றுடன் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக தொலைக் காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் என்பனவற்றின் உள்நாட்டுத் தயாரிப்புக்கள் பாதிக்கப்பட்டதன் காரணமாக அதற்கான தற்காலிக நடவடிக்கை என்ற வகையில் 2020.03.27 ஆம் திகதி முதல் வெளிநாட்டு நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் என்பன அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்காக. |

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 11.05.2021 | 2021.05.10 ஆம் திகதிய 2227/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- ஒரு மாதத்திற்கு வெளிநாட்டு வர்த்தக அறவீடுகளை ஒளி – ஒலிபரப்புச் செய்வதற்காக விடுவிப்புச் சான்றிதழினை பெறுவதற்கான ஏற்பாடொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக. |
| **2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **சர்வதேச தொலைத்தொடர்பாடல் இயக்குநர்கள் அறவீடு** | |
| 01.01.2021 | 2021.01.01 ஆம் திகதிய **2208/59** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- 2021.01.01 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் சர்வதேச தொலைத் தொடர்பாடல் இயக்குநர்கள் அறவீட்டினை அதே விகிதங்களில் தொடருவதற்காக. |
| **2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்** | |
| 05.01.2021 | 2021.01.05 ஆம் திகதிய **2209/22** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அர்ப்பணித்த மருந்தாக்கல் உற்பத்தி வலயத்தினை அம்பாந்தோட்டை அரபொக்க பகுதியில் தாபிப்பதற்காக. |
| 05.03.2021 | 2021.03.05ஆம் திகதிய 2217/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- (சிலோன் டயர் மனுபெக்சரிங் கம்பனி (பிரைவேட்ட) லிமிடெட் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்காக. |
| 23.03.2021 | 2021.03.23 ஆம் திகதிய 2220/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- "கொழும்பு சர்வதேச நிதி மைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்" தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்காக. |
| 19.04.2021 | 2021.04.19 ஆம் திகதிய 2224/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- அர்ப்பணிக்கப்பட்ட மருந்து உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைப்பாட்டினை அறிவிப்பதற்காக |
| 20.04.2021 | 2021.04.20 ஆம் திகதிய 2224/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அர்ப்பணிக்கப்பட்ட புடைவை உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைப்பாட்டினை அறிவிப்பதற்காக. |
| 24.05.2021 | 2021.05.24 ஆம் திகதிய 2229/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- "WELCOMHOTELS LANKA (PRIVATE) LIMITED" இன் கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை 2022.01.01 முதல் பதினெட்டு(18) மாதங்களுக்கு கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை மேலும் நீடிப்பதற்காக. |
| 24.05.2021 | 2021.05.24 ஆம் திகதிய 2229/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- "AVIC INTERNATIONAL HOTELS LANKA LIMITED" இன் கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை 2020.03.25 முதல், மேலும் பத்தொன்பது (19) மாதங்களுக்கு நீடிப்பதற்காக. |

### அரசாங்க செலவினம்

2020 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 930.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2021 இன் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்க செலவினம் 7.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,002.8 பில்லியனாகக் காணப்பட்டது. தற்பொழுது நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்று நோய் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணங்கள் மற்றும் வாழ்வாதார ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டமை மற்றும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள், தடுப்புமருந்து இறக்குமதி மீதான செலவினம், வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினமும் அதிகரித்ததனால், 2020 இல் ரூபா 820.7 பில்லியனாகக் காணப்பட்ட மீண்டெழும் செலவினம் 2021 இன் முதல் நான்கு மாதங்களின் போது 8.5 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 890.1 பில்லியனாகக் காணப்பட்டது. மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் 2020 இல் இதே காலப்பகுதியில் ரூபா 110.2 பில்லியனிலிருந்து 2021 முதல் நான்கு மாதங்களின் போது 2.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 112.7 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 2.9 : அரசாங்கத்தின் செயலாற்றுகை மற்றும் தேறிய செலவினம், சனவரி – ஏப்ரல் 2021**

ரூபா. மில்லியன்

| விடயம் | 2020 | 2021 (தற்காலிக) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **820,685** | **890,085** |
| சம்பளங்கள் | 253,810 | 274,044 |
| ஓய்வூதியம் | 79,878 | 87,345 |
| வட்டிக் கொடுப்பனவு | 336,216 | 366,240 |
| ஏனைய | 150,781 | 162,456 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்** | **110,186** | **112,748** |
| **மொத்தம்** | **930,871** | **1,002,832** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### வட்டிக் கொடுப்பனவுகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2021 இன் முதல் நான்கு மாதங்களின் போது, 2020 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 336.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 366.2 பில்லியனாக 8.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட கடனில் வெளிநாட்டு வெளிப்பாட்டைக் குறைப்பது தொடர்பான அரசாங்கக் கொள்கையின் பயனாக, வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல், 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 104.1 பில்லியன் 2021 இன் முதல் நான்கு மாதங்களில் 11.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்து ரூபா 92.4 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், உள்நாட்டு கடனுக்கான வட்டி செலுத்துதல் 2020 இதே காலகட்டத்தில் ரூபா 232.0 பில்லியனிலிருந்து 18.0 சதவீதம் அதிகரித்து 2021 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 273.8 பில்லியனாகக் காணப்பட்டது.

### சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகள் உள்ளடங்களாக அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம் 2021 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 274.0 பில்லியனாக 2020 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 253.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

இதற்கிடையில், ஓய்வூதியக் கொடுப்பனவானது 2021 இன் முதல் நான்கு மாதங்களில் 2020 இன் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 79.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 87.3 பில்லியனாக 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 இன் முதல் நான்கு மாதங்களில் புதிய ஓய்வூதியக்காரர்களின் உயர் அடிப்படை சம்பளத்தின் விளைவும், தாமதமான பணிக்கொடை கொடுப்பனவுகளும் இந்த உயர்வுக்கு பங்களித்தன.

### நலன்புரி செலவினங்கள்

2021 இன் முதல் நான்கு மாதங்களின் போது பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் மானியங்கள், சமுர்த்தி நிவாரணம், வயோதிபர் கொடுப்பனவு, மாற்றுத் திறனுடைய இராணுவ வீரர்களுக்கான உதவி, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உணவுப் பொதி, மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான விசேட மானியம் மீதான செலவினமாக ரூபா 172.1 பில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

2021 முதல் நான்கு மாதங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் சமுர்தி காசு மானியத்திற்கான செலவு ரூபா 17,271 மில்லியனாகக் காணப்பட்டது.இருப்பினும், 2020.06.10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி நாட்டில் குறைந்த வருமானம் கொண்ட சிறுநீரக நோயாளிகள் அனைவரையும் சேர்த்து 2020 செப்டம்பர் முதல் பயனாளிகளின் அதிகரிப்பு காரணமாக சிறுநீரக நோயாளிகளுக்கு மாதத்திற்கு வழங்கப்படும் ரூபா 5,000 நிதி ஒத்துழைப்பு ரூபா 554 மில்லியனிலிருந்து 40 சதவீதம் அதிகரித்து ரூபா 776 மில்லியனாக அதிகரித்துள்ளது.

கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பதற்கான மேலதிக செலவு காரணமாக, அரசாங்க மருத்துவமனைகளுக்கான மருந்துப் பொருட்களுக்கான அரச செலவினம் 46.0 சதவீதமாக அதிகரித்து 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 13,763 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 20,143 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கிடையில், அரசாங்கமும் கிட்டத்தட்ட ரூபா 2,000 மில்லியனை கர்ப்பினி தாய்மார்களுக்கான ஊட்டச்சத்துணவுக்காக செலவிட்டுள்ளது.

கல்வி குறித்த நலன்புரித்திட்டங்களான இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், பாடசாலை சிறுவர்களின் நலனுக்கான பருவச் சீட்டுக்கள் சம்பந்தப்பட்ட காலத்திற்கு ரூபா 2,888 மில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 2.10 : பிரதான நலன்புரி செலவினம்: 2021 சனவரி – ஏப்ரல்**

ரூபா. மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | 2021 (தற்காலிக) |
|---|---|
| **சமூக நலன்புரி** | |
| சமுர்த்தி நிவாரணம் | 17,271 |
| குறை வருமான அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு | 1,432 |
| வயோதிபர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 3,303 |
| சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 776 |
| "ரணவிரு மாபிய ரக்கவரண" கொடுப்பனவு | 724 |
| வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 41 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 0 |
| மரணம் மற்றும் அங்கவீனமுற்ற படையினருக்கான சேவை நட்டஈடு | 12,293 |
| **சுகாதார மற்றும் போசாக்கு** | |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 98 |
| கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்குணவு பொதி | 1,928 |
| பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் | 781 |
| பசும்பால் நிகழ்ச்சித்திட்டம் - பாடசாலை சிறுவர்கள் | 0 |
| பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார காப்புறுதி | 1,353 |
| முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு | 36 |
| அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ வழங்கல்கள் (ஆயுர்வேத) | 20,143 |
| **கல்வி** | |
| பாடசாலை பாடப்புத்தகங்கள் | 541 |
| பாடசாலை சீருடைகள் | 684 |
| கஷ்ட மற்றும் மிகக் கஷ்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாதணிகள் | 802 |
| புலமைப்பரிசில் - தரம் 5 மாணவர்கள் | 208 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைகள் | 600 |
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடி கணனி மற்றும் வைபை வசதிகளுக்கான வட்டி மானியம் | 1 |
| அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் | 50 |
| மாணவர்களுக்கான தம்ம பாடசாலை பாடப்புத்தகம் | 1 |
| தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள் | 1 |
| **மானியங்கள்** | |
| பசளை மற்றும் பயிர் மானியம் | 7140 |
| **ஏனைய மானியங்கள்** | |
| இ.போ.ச வருமானமீட்டாத பாதைகளுக்கான மானியம் மற்றும் பாடசாலை பருவச்சீட்டுகள் படைவீரர்களுக்கு பேரூந்து அனுமதிப்பத்திரங்கள் | 3,800 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

2020 மார்ச் ஆரம்ப பகுதியில் கொவிட் 19 வைரஸின் பரவலுடன் அரசாங்கம் மக்களுக்கான அத்தியவசிய சேவைகளை வழங்குவதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதற்கமைவாக, 2021 ஏப்ரல் மற்றும் மே மாதத்திலிருந்து ரூபா 5,000 கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட மற்றும் குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகை விலைகளில் அத்தியவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச்செயற்பாடுகள், கிரமமான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக முன்னெடுக்கப்பட்டன.

## துறைரீதியான செலவினம்

### பாடசாலைக் கல்வி

2021 இன் முதல் நான்கு மாதங்களின் போது, பாடசாலைக் கல்விக்காக மத்திய அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட

மொத்த செலவினம் ரூபா 82,035 மில்லியன் என்பதுடன் இதில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 80,925 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,110 மில்லியனும் செலவிடப்பட்டது. மொத்த மீண்டெழும் செலவினம் 9.8 சதவிகிதம் அதிகரித்துள்ளது, அதேசமயம் நலன்புரி செலவினம் 19.6 சதவிகிதம் குறைந்துள்ளது, ஏனெனில் பாடசாலை குழந்தைகளுக்கு சத்தான உணவு மற்றும் பால் குவலை போன்ற சில நலத்திட்டங்கள் கோவிட் காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டதால் திட்டமிட்டபடி செயற்படுத்த முடியவில்லை.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு இ-தக்ஸலாவ மற்றும் “குரு கெதர” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தொலைதூரக் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், 4092 கிராமப்புற பள்ளிகளுக்கு வழங்கப்படவுள்ள 5945 எண்ணிக்கையிலான தொலைக்காட்சிகளை வாங்குவதற்கும், உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த இணைய வசதிகளை வழங்குவதற்கும் அமைச்சு செயற்பட்டு வருகிறது.

**அட்டவணை 2.11 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரை பாடசாலைக் கல்வி தொடர்பான பிரதான செயற்பாட்டுச் செலவினம்**

ரூபா. மில்லியன்

| விபரம் | 2020 | 2021 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய பதவியனருக்கான வேதனாதிகள் | 60,080 | 69,059 |
| தேசிய | 13,867 | 14,224 |
| மாகாண | 46,213 | 54,835 |
| நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் | 5,432 | 4,369 |
| பரீட்சை மதிப்பீடு | 1,165 | 702 |
| **மூலதனச் செலவினம்** | | |
| பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 4,129 | 403 |
| விசேட கல்வி அபிவிருத்தி | 55 | 4 |
| ஆசிரிய அபிவிருத்தி | 327 | 98 |
| மாகாணக் கல்வி | 584 | 470 |

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

**உயர் கல்வி**

2021 இன் முதல் நான்கு மாதங்களின்போது, பல்கலைக்கழக கல்விமீதான மொத்த செலவினம் ரூபா 23,261 மில்லியனாகக் காணப்பட்டதுடன், 2020 இல் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 17 சதவீத அதிகரிப் பொன்றாகும். இதே காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் 7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 17,699 மில்லியனாகவும் மூலதனச் செலவினம் 64 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 5,562 மில்லியனாகவும் காணப்பட்டது. மூலதனச் செலவில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடக் கட்டடம் மற்றும் சப்ரகமுவ மற்றும் களனி பல்கலைக்கழகங்களின் தொழில்நுட்ப பீடக் கட்டடங்களை நிர்மாணிக்க ரூபா 904 மில்லியன் செலவிடப்பட்டது. மேலும், உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், STEM கல்வியில் சேருதல் அதிகரித்தல் மற்றும் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்திய உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு (Accelerating Higher Education Expansion and Development - AHEAD) கருத்திட்டத்தின் கீழ் ரூபா 1,595 மில்லியன் செலவிடப்பட்டது.

திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கான மொத்தச் செலவினம் ரூபா 2,537 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 242 மில்லியன் 2021 இன் முதல் நான்கு மாதங்களுக்கான மூலதன கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்டதாகும்.

**அட்டவணை 2.12 : உயர் கல்வியின் பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம் சனவரி – ஏப்ரல் 2021**

ரூபா. மில்லியன்

| விபரம் | 2020 | 2021 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகள் | 14,677 | 15,221 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைக் கொடுப்பனவு | 525 | 600 |
| **மூலதனச் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் அபிவிருத்தி | 1,157 | 1,531 |
| வயம்ப பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தினை தாபித்தல் | 100 | 50 |
| பல்கலைக் கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை தாபித்தல் | 250 | 250 |
| மடிக் கணணிக்கான கடன் வட்டி (பல்கலைக்கழக மாணவர்கள்) | 49 | 1 |
| உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினைத் துரிதப்படுத்தல் (உலக வங்கி) | 290 | 1,595 |
| கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி (இ.அ/குவைத்) | 325 | 574 |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ/ஆசிய அபிவிருத்தி வங்கி) | 80 | 904 |

மூலம் :தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

**அட்டவணை 2.13 : திறன் அபிவிருத்தி பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் 2021 சனவரி – ஏப்ரல்**

ரூபா. மில்லியன்

| விபரம் | 2020 | 2021 (தற்காலிகமானது) |
|---|---|---|
| திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 46 | 113 |
| கொழும்பு தொழிற்பயிற்சி நிலையம், கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியினைத் தாபித்தல் | 157 | 68 |
| அனமடுவ தொழிநுட்பக் கல்லூரிக்கான கட்டிட நிர்மாணம் | 37 | 9 |
| நிபுனதா சிசுதிரிய புலமைத்திட்டம் | - | 47 |

மூலம் :தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

### சுகாதாரம்

கொவிட் - 19 தொற்று நோயை நிர்வகிக்கும் நோக்கில், அத்தியாவசிய சுகாதார சேவைகளை குடிமகனுக்கு தொடர்ந்து வழங்குவதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அதன்படி, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மேற்கத்திய மற்றும் சுதேச மருத்துவம் உள்ளிட்ட சுகாதார மற்றும் மத்திய அரசாங்க மாகாண செலவுகள் 24.2 சதவீதம் அதிகரித்து ரூபா 91,296 மில்லியனாக அதிகரித்துள்ளன. மொத்த சுகாதார செலவினங்களில், மீண்டெழும் செலவினம் ரூபா 83,242 மில்லியன் மற்றும் மூலதனச் செலவு ரூபா 8,054 மில்லியனாகும்.

மீண்டெழும் செலவினங்களின் முக்கிய வகைகளில் ஒன்றான மருந்துப் பொருட்கள் 2020 ஆம் ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது கணிசமான அதிகரிப்பு காட்டியது. அதன்படி, தொடர்ச்சியான கூறுகளின் கீழ் செய்யப்பட்ட மொத்த செலவினங்களில், ரூபா 20,143 மில்லியன் மருந்துகள், அறுவை சிகிச்சை பொருட்கள் மற்றும் ஆய்வக பொருட்களுக்கு செலவிடப்பட்டது.

**அட்டவணை 2.14 : சுகாதாரத் துறையில் பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் சனவரி – ஏப்ரல் 2021**

ரூபா. மில்லியன்

| விபரம் | 2020 | 2021 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **68,421** | **83,242** |
| சேவை வழங்கல் செலவினம் | 38,501 | 44,352 |
| அதில் மருத்துவ அலுவலர் மற்றும் துணை அலுவலர் சம்பளங்கள் | 31,915 | 34,693 |
| மருந்துப் பொருள் வழங்கல் | 13,763 | 20,143 |
| மாகாண சுகாதாரம் | 16,158 | 18,747 |
| **அரச முதலீட்டுச் செலவினம்** | **5,059** | **8,054** |
| மருத்துவ உபகரணம் | 1,283 | 1,282 |
| சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் - ஆ.அ. வங்கி | - | 824 |
| இலங்கை கொவிட் 19 அவசர பொறுப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைக் கருத்திட்டம் (உ.வ) | - | 804 |
| கராபிட்டிய, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் விஷேட சிறுவர் மருத்துவ பராமரிப்புக் கட்டிடத் தொகுதியினைத் தாபித்தல். | 36 | 185 |
| தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகளை தரமுயர்த்தல் | - | 175 |
| நிரல் அமைச்சு வைத்தியசாலைகளின் கீழ் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தல் | 67 | 109 |
| பொலநறுவையில் தேசிய சிறுநீரக வைத்தியசாலை நிர்மாணம் (இ.அ.சீனா) | 110 | 98 |
| உயர் சக்தி கதிரியக்கத்துடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கான உயர் தர கதிரியக்க சிகிச்சை ஏற்பாடு | 88 | 69 |
| பொலநறுவையில் தேசிய சிறுநீரக வைத்தியசாலை நிர்மாணம் (இ.அ.சீனா) | 139 | 10 |
| தாதியர் பீடம்/ விடுதி நிர்மாணம் | 177 | 5 |
| ஏனைய மூலதன முதலீடுகள் | 2,012 | 4,493 |
| மாகாண சுகாதார முதலீடு | 1,147 | 1,377 |

மூலம் :தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

### நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம்

2021 முதல் நான்கு மாதங்களின் போது நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவம் மீதான மொத்த முதலீடு ரூபா 8,807 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 1,400 மில்லியன் மகாவலி பிரதேசத்திலுள்ள நிர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்காக செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 7,407 மில்லியன் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன முறைமைகளின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது.

### விவசாயம்

பெருந்தோட்டம், கால்நடை, மீன்பிடி மற்றும் காணி அபிவிருத்தி உபதுறைகள் உள்ளடங்களான விவசாய துறை மீதான மொத்தச் செலவினம் 2021 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 16,991 மில்லியனாகக் காணப்பட்டது. அவற்றுள் ரூபா 6,655 மில்லியன் உரங்கள் மற்றும் ஒழுங்குமுறை இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாட்டை உற்பத்தி செய்வதற்கும் வழங்குவதற்கும், ரூபா 4,272 மில்லியன் பயிர் விவசாயத்திற்காகவும் செலவிடப்பட்டது. ரூபா 2,386 மில்லியன் பெருந்தோட்டத் துறை வளர்ச்சிக்கும் ரூபா 928 மில்லியன் மீன்பிடி அபிவிருத்திக்கும் ரூபா 2,536 மில்லியன் காணி அபிவிருத்திக்கும் எஞ்சியது கால்நடை அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் பயனாளிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

### நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு

பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான துப்பரவேற்பாட்டு சேவைகளை பெற்றுக் கொள்வதனை உறுதி செய்யும் நோக்கத்துடன் அரசாங்கம் 2021 சனவரி - ஏப்ரல் காலப்பகுதியில் நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத் துறையில் முதலீட்டினை தொடர்ந்து மேற்கொண்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான துப்புரவு சேவைகளுக்கான அணுகலை உறுதி

செய்வதற்காக அரசாங்கம் தொடர்ந்து செலவிடுவதுடன், 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா 4,705 மில்லியனை செலவிட்டுள்ளது. ''அனைவருக்கும் நீர்'' என்ற தேசிய திட்டத்தின் கீழ் 248 திட்டங்கள் உள்ளன, அவை உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், புதிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் ஒட்டுமொத்த மக்களால் பாதுகாப்பான நீரைப் பெறுவதை உறுதி செய்வதற்காக நடந்துகொண்டிருக்கும் திட்டங்களை விரைவுபடுத்துதல் என்பனவாகும்.

**அட்டவணை 2.15 : நீர் வழங்கல், கழிவு நீரகற்றல் கருத்திட்ட செலவினம் : சனவரி – ஏப்ரல் 2021**

ரூபா மில்லியன்

| கருத்திட்டம் | 2020 (தற்காலிகமானது) |
|---|---|
| சிறுநீரக நோய் பாதிப்புக்குட்பட்ட பிரதேசங்களில் நீர் பரவல் நோய்களை தடுத்தல் | 67 |
| நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (இ.அ/உ.வ) | 964 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் 1 (இ.அ/ஆ.அ.வ) | 626 |
| அம்பதலே நீர்வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டம் (இ.அ/பிரான்ஸ்) | 254 |
| அநுராதபுர வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - 1 (இ.அ/ஜெய்க்கா) | 111 |
| கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம் (இ.அ/சீனா) | 774 |
| அனைவருக்கும் நீர் - அகில இலங்கை நீர் வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| ''பிரஜா ஜல அபிமான்'' நீர் வழங்கல் கருத்திட்டம் | 131 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

### நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள்

பாதைகள் மற்றும் பாலங்களுக்கான செலவு 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4 சதவீதத்தினால் ரூபா 38,796 மில்லியனாக அதிகரித்தது. இந்த தொகையில் ரூபா 22,527 மில்லியன் தேசிய மற்றும் கிராமிய வீதி அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது. அதில் ரூபா 12,055 மில்லியன் 6,000 கிலோ மீற்றருக்கும் அதிகமான கிராமப்புற மற்றும் மாகாண வீதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு (i- Road) செலவிடப்பட்டது. அதேவேளை, குறிப்பாக கிராமப்புறத் துறையில் இணைப்புகளை மேம்படுத்துவதற்கும் நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசலை நிவர்த்தி செய்வதற்கும் இலக்காகக் கொண்ட பிரதான சாலைகளை அணுக 100,000 கிலோ மீற்றர் மாற்று வீதிகளை உருவாக்க ரூபா 7,371 மில்லியன் செலவிடப்பட்டது.

அதிவேகப் பாதை அபிவிருத்திக்கான செலவு ரூபா 522 மில்லியனாகும். சாலைகள் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கான செலவு ரூபா 1,437 மில்லியன், பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் தொடர்பான செலவு ரூபா 118 மில்லியனாகும்.

புதிய களனி பாலத்தின் கட்டுமானம் 2021 ஆம் ஆண்டில் நிறைவடையும் தருவாயில் உள்ளது. கடவத்தையிலிருந்து மீரிகம வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் அதன் நிர்மானப் பணிகளின் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. புதிய களனி பாலம், துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் புதிய களனி பாலம் முதல் அதுருகிரிய வரையிலான உயரமான நெடுஞ்சாலை ஆகியவை சேர்ந்து கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கின்றன. மேலும், வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு கருத்திட்டங்களை செயற்படுத்த உள்ளூர் வங்கிகளிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெற்ற கடனுக்கான வட்டி மற்றும் மூலதன திருப்பிச் செலுத்துதலாக ரூபா 11,339 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.16 : பாதைகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம் சனவரி – ஏப்ரல் 2021

ரூபா. மில்லியன்

| | கருத்திட்டம்ஃநிகழ்ச்சித்திட்டம் | 2020 | 2021 (தற்காலிக) |
|---|---|---|---|
| 1 | **அதிவேக பாதை அபிவிருத்தி** | **8,173** | **520** |
| | வெளிச்சுற்று நெடுஞ்சாலை கருத்திட்டம் - கட்டம் III | 13 | - |
| | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் | 107 | 444 |
| | தெற்கு அதிவேகப் பாதை விரிவாக்கல் (பெரும்பாலும் பூர்தியடைந்துள்ளது) | 5,817 | - |
| | கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேகப் பாதை | 9 | 23 |
| | புதிய களனி பாலத்திலிருந்து உயர்த்தப்பட்ட அத்துருகிரியவிற்கான அதிவேகப் பாதை | 19 | 31 |
| | துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட அதிவேகப்பாதை கருத்திட்டம் | 2,208 | 22 |
| 2 | **நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி** | **9,607** | **22,527** |
| | பாதைகள் பராமரிப்பு | 928 | 1,503 |
| | முன்னுரிமை பாதை கருத்திட்டங்கள்- III | 1,013 | - |
| | கொழும்பு மாவட்ட பாதை அபிவிருத்தி கருத்திட்டம் | 128 | 664 |
| | தெற்கு பாதை இணைப்புக் கருத்திட்டம் | 460 | 267 |
| | ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (I பாதை) | 5,186 | 12,055 |
| | பிரதான பாதைகள் மற்றும் அதிவேகப் பாதைகள் அடைவுக்கான மாற்றுப் பாதைகள் 100,000 கி.மீ. அபிவிருத்தி | - | 7,371 |
| | ஏனையவை | 1,768 | 667 |
| 3 | **பாதைகள் விரிவாக்கல் மற்றும் மேம்பாடு** | **795** | **1,437** |
| 4 | **பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்** | **3,329** | **118** |
| | ஐ. இ. உருக்குப் பாலம் கருத்திட்டம் | 11 | - |
| | தேசிய அதிவேகப் பாதைகளில் சேதமடைந்த பலவீனமான பாலங்களின் மீள்கட்டமைப்பு | 271 | 52 |
| | பிரதான பால நிர்மாண கருத்திட்டம் | 54 | - |
| | பழைய பாலங்களின் தொகுதிகளைக் கொண்டு கிராமிய பாலங்கள் நிர்மாணம் | 29 | 16 |
| | இரண்டாவது புதிய களனி பால நிர்மாணக் கருத்திட்டம் | 2,894 | 32 |
| | ஏனையவை (3 மேம்பாலங்கள் உள்ளடங்களாக) | 70 | 18 |
| 5 | **இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீதி புனரமைப்பு** | **485** | **38** |
| 6 | **மகநெகும கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | **74** | **16** |
| 7 | **வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மாற்றல்கள்** | **2,465** | **2,590** |
| 8 | **காணி மற்றும் காணி மேம்பாடு (முன்னுரிமை கருத்திட்டங்கள் நீங்களாக ஏனைய கருத்திட்டங்கள்** | **79** | **391** |
| 9 | **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அர்ப்பணிப்புகளுக்கு இடைவெளி நிதியளிப்பு** | **12,137** | **11,339** |
| 10 | **ஏனைய** | **-** | **-** |
| | மொத்தம் | **37,144** | **38,796** |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

### போக்குவரத்து

போக்குவரத்து துறைக்கு மத்திய அரசு செய்த மொத்த செலவு 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 13,585 மில்லியனாகும். அதில் ரூபா 9,676 மில்லியன் மீன்டெழும் செலவினங்களுக்காகவும், ரூபா 3,909 மில்லியன் மூலதன செலவினங்களுமாகவும் இருந்தது. கொழும்பு புறநகர் புகையிரதக் கருத்திட்டம், புகையிரதப் பாதை மறுசீரமைப்புக் கருத்திட்டம் மற்றும் மகோவிலிருந்து ஓமந்தை வரை சமிக்சைகளை நிறுவுதல் மற்றும் ரயில்வே பெட்டிகளின் பெரிய மற்றும் சிறியளவிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கு ரூபா 1,453 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து துறையின் மொத்த செலவினங்களில் இலங்கை மத்திய போக்குவரத்து சபையினால் படைவீரர்களுக்கான பேரூந்து அனுமதிப்பத்திரம், வருமானமீட்டாத பாதைகள், பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான பருவச் சீட்டுக்கள் என்பவற்றுக்காக ரூபா 3,800 மில்லியன் செலவிடப்பட்டது.

2021 இன் மீளாய்வு காலப்பகுதியில் வாகனங்களுக்கான புதிய இலக்கத் தகடுகளின் பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடுதல் என்பவற்றுக்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் ரூபா 407 மில்லியன் செலவிடப்பட்டது.

### வீடமைப்பு அபிவிருத்தி

அரசாங்கத்தின் செலவினங்களின் மற்றுமொரு பிரதான முக்கிய துறையாக வீடமைப்பு வசதி காணப்படுகின்றது. ''ஒபட்ட கெயக் - ரட்டட்ட ஹெட்டக்'' என்ற தலைப்பின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டதுடன் 2021 இலிருந்து மானியங்களின் ஊடாக குறைநிரப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முதல் நான்கு மாத காலப்பகுதியில் வீடமைப்பு தேவைகளுக்கான வசதிகளுக்கு திரட்டிய உண்மையான செலவினம் ரூபா 2,436 மில்லியன் என்பதுடன், உண்மையான செலவினத்தில் கிராமிய, நகர, சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ''விருசுமித்துரு'' நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலான குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,510 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொற்று நிலைமைக்கு மத்தியில், ஆண்டுக்குள் 34,876 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான தனது நோக்கத்தை அடைவதற்கான பாதையில் அரசாங்கம் உள்ளது.

### நகர அபிவிருத்தி

தொற்று நிலைமைக்கு மத்தியில், அரசாங்கம் தனது நோக்கத்தை அடைவதற்கான பாதையில் உள்ளது. நகர்ப்புற வசதிகளை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த அரசு செலவினம் ரூபா 4,868 மில்லியனாகும். நகர அபிவிருத்தித் துறையில் மொத்த செலவினங்களில் கொழும்பு நகர மீளுருவாக்கற் திட்டம், மூலோபாய நகரங்களின் அபிவிருத்தி (கண்டி மற்றும் காலி, யாழ்ப்பாணம்), வெராஸ் கங்கா வெள்ள நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் ஒன்பது மாகாணங்களில் நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு ரூபா 3,133 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.17 : பெரியளவிலான நகர அபிவிருத்தி கருத்திட்டச் செலவினம் சனவரி - ஏப்ரல் 2021

ரூபா. மில்லியன்

| கருத்திட்டத்தின் பெயர் | 2021 (தற்காலிகமானது) |
|---|---|
| மெற்ரோ கொழும்பு நகர அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ/உ.வ) | 142 |
| பேலியாகொடவில் மெனிங் சந்தையினை இடமாற்றல் | 6 |
| துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 6 |
| ஒன்பது மாகாணங்களில் நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (சுகிதபுரவர நிகழ்ச்சித்திட்டம்) | 233 |
| பேரை வாவி புனரமைப்பு மற்றும் மீள் அபிவிருத்தி கருத்திட்டம் | 30 |
| ஹோமாகம பிராந்தியத்தில் வீதி கட்டமைப்பு மேம்பாடு (ரெக் சிட்டி) | 45 |
| வேரஸ் கங்கை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 492 |
| பேரை வாவியின் நீர் தரத்தினை மீள்ஒழுங்குபடுத்தல் | 6 |
| மெற்றோ கொழும்பு நகர அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ - உலக வங்கி) | 359 |
| உபாய நகரங்கள் அபிவிருத்தி – கண்டி மற்றும் காலி (இ.அ - உலக வங்கி) | 626 |
| உபாய நகரங்கள் அபிவிருத்தி – யாழ்ப்பாணம் (இ.அ - உலக வங்கி) | 331 |
| உபாய நகரங்கள் அபிவிருத்தி – அநுராதபுரம் (இ.அ - ஏஎப்டி) | 2 |
| கொழும்பு நகர மீள் உருவாக்கல் கருத்திட்டம் (URP) - இ.அ - ஏஐஐபி | 1,092 |
| நகர கருத்திட்ட தயார்படுத்தல் வசதி - (இ.அ –ஆ.அ.வ) | 115 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

### பொதுத் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதத்தில் ரூபா.457.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் வருமானம் மற்றும் பிற பெறுகைகள் உள்ளிட்ட பொதுத் திறைசேரிக்கான காசு உட்பாய்ச்சல் 2021 முதல் நான்கு மாதங்களில் ரூபா.459.1 பில்லியனாகவும் மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா.550.8 பில்லியனில் 83.4 சதவீதமாகவும் காணப்பட்டது. மீண்டுவரும் மற்றும் பொது முதலீடு உள்ளிட்ட காசு வெளிப்பாய்ச்சல்கள் ரூபா.1,022.7 பில்லியனாக காணப்பட்டதோடு, இது ரூபா.1,077.9 பில்லியன் மதிப்பீட்டில் 94.9 சதவீத சாதனை அடைவாகும். 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காசுப்பாய்ச்சல் 13 சதவீதம் அதிகரித்துள்ளது. இது 2020 இல் இதே காலகட்டத்தில் ரூபா.897.9 பில்லியன் ஆகும்.

மொத்த காசுப் பற்றாக்குறை 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா.440.2 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் இறுதியில் 563.6 பில்லியனினைப் பதிவு செய்துள்ளது. இவ் அதிகரிப்பிற்கு 2020 ஏப்ரல் முடிவில் காணப்பட்ட ரூபா.304.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்ரல் மாத இறுதியில் காணப்பட்ட ரூ. 620.5 பில்லியன் வரையான எதிர்மறையான பணம் மற்றும் வங்கி நிலுவைகளை மூடியதன் விளைவாக வருவாயின் ஓரளவு அதிகரிப்புக்கு மத்தியில் முக்கியமாக தொழில்பாட்டு மற்றும் அரசாங்க முதலீட்டு செலவினங்களை முறையே 8.8 சதவிகிதம் மற்றும் 55.9 சதவிகிதம் அதிகரித்தமையே காரணமாகும்.

**அட்டவணை 2.18 : 2021 சனவரி – ஏப்பிரல் வரையான அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள்**

ரூபா. பில்லியன்

| | 2020 | 2021 | |
|---|---|---|---|
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -274.3 | -488.2 | -488.2 |
| வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்டபாய்ச்சல் | 457.7 | 550.8 | 459.1 |
| மீண்டெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -800.2 | -892.0 | -870.4 |
| மூலதன கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் * | -97.7 | -185.9 | -152.3 |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | -440.2 | -527.1 | -563.6 |
| மொத்த பெறுகை * | 629.9 | 733.4 | 732.5 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | -270.0 | -299.1 | -310.7 |
| தேறிய பெறுகை | 359.9 | 434.3 | 421.8 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச முறிகளின் தேறிய பெறுகைகள் | 51.4 | - | - |
| சீராக்கல் கணக்கு மீதி (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புக்கள் முதலியன) | -1.2 | - | 9.5 |
| முடிவுறுத்தல் காசு மீதி | -304.4 | -581.0 | -620.5 |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

* 2021 ஏப்பிரல் 30 வரையில் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் கணக்கிடப்பட்ட செயற்திட்ட/ நிகழ்ச்சித் திட்ட கடன்கள் உள்ளடங்களாக

### அரசாங்கப் படுகடன் முகாமைத்துவம்


2021 ஆம் ஆண்டுக்காகப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் வரம்பு ரூபா.2,997 பில்லியன் ஆகும். அதில் ரூபா.732.5 பில்லியன் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பயன்படுத்தப்பட்டது. காசுப்பாய்ச்சல் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் பயன்பாடு முறையே ரூபா.608.3 பில்லியன் மற்றும் ரூபா.124.0 பில்லியன் ஆகும். திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் தற்காலிக முற்பணங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றைக் கொண்ட உள்நாட்டு கடன்பெறுகை, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த கடன்களில் 83.1 சதவீதமாகும். இதுபோன்று, மொத்த உள்நாட்டு கடன்களில் 67 சதவிகிதம் திறைசேரி முறிகளால் திரட்டப்பட்டது, 23 சதவிகிதம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் மீதமுள்ள 10 சதவிகிதம் இலங்கை மத்திய வங்கியின் தற்காலிக முற்பணம் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றினாலாகும்.. மேலும், 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய கால நிதி வசதி மூலம் கிடைத்த வருமானம் வெளிநாட்டு நாணய படுகடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கு நிதியளிக்க பயன்படுத்தப்பட்டது. 2021 ஏப்ரல் மாத இறுதியில் தேறிய கடன் ரூபா.421.8 பில்லியனினைக் கொண்டிருந்தது.

**அட்டவணை 2.19 : 2021 சனவரி – ஏப்பிரல் வரையில் மொத்த உள்நாட்டுக் கடன்பெறுகை**

| சாதனம் | ரூபா. பில்லியன் |
|---|---|
| திறைசேரி முறிகள் | 404.5 |
| திறைசேரி உண்டியல் (தேறிய) | 142.3 |
| தற்காலிக முற்பணங்கள் - இலங்கை மத்திய வங்கி | 45.1 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 16.4 |
| **மொத்தம்** | **608.3** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

வரைபு 2.3 : 2021 சனவரி - ஏப்பிரல் வரையான மொத்த உள்நாட்டு பெறுகைகள்




மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

### கடன்களை வெளிப்படுத்துதல்

2021 ஏப்ரல் மாத இறுதியில் வழங்கப்பட்டதும் செல்லுபடியானதுமான திறைசேரி உத்தரவாதங்களின் பெறுமதி ரூபா.1434.7 பில்லியன் ஆகும். அவை அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொருந்தக்கூடிய வரம்பிற்குள் உள்ளன. 2021 ஏப்ரல் இறுதியில் பொதுத் திறைசேரயால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பட்டியல் அட்டவணை 20 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

### திறைசேரி உத்தரவாதங்கள் மீதான தொடர்ச்சியான

**அட்டவணை 2.20 : பொது திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் விபர பட்டியல் – 30.04.2021**

| தொ. இல | வங்கிஃ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா. மில்லியன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மக்கள் வங்கி | இலங்கை மின்சார சபை | 26,505.53 | 307,631.69 |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 181,427.00 | |
| | | இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் லிமிட்டட் | 14,372.74 | |
| | | லங்கா கோல் கம்பனி பிறைவேட் லிமிடெட் | 11,000.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 6,413.39 | |
| | | தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் | 40.00 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 942.95 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 52,316.24 | |
| | | அரச அச்சு கூட்டுத்தாபனம் | 1,350.00 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 9,922.84 | |
| | | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் | 100.00 | |
| | | லங்கா சதோச லிமிடெட் | 3,241.00 | |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா. மில்லியன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2 | இலங்கை வங்கி | வரையறுக்கப்பட்ட கட்டிட பொருள் கூட்டுத்தாபனம் | 500.00 | 388,450.17 |
| | | இலங்கை மின்சார சபை | 5,000.00 | |
| | | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | 350.00 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 179,883.00 | |
| | | வரையறுக்கப்பட்ட எல்கடுவ ப்லான்டேஷன் | 30.00 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 835.00 | |
| | | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 140.00 | |
| | | வரையறுக்கப்பட்ட வியாபார முகாரமத்துவ தேசிய பாடசாலை லிமிட்டட் | 8,600.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 54,636.20 | |
| | | நோர்த் சீ லிமிடெட் | 39.02 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 1,000.00 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 124,151.95 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 7,495.13 | |
| | | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 1,000.00 | |
| | | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 200.00 | |
| | | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,400.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,189.88 | |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | இலங்கை மின்சார சபை | 7,500.00 | 162,540.40 |
| | | ஜென்ரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 35,702.13 | |
| | | லக்தனவி லிமிடெட் | 2,992.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 30,710.61 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 79,365.66 | |
| | | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 3,500.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,770.00 | |
| 4 | வர்த்தக வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 968.36 | 5,724.29 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 4,755.93 | |
| 5 | டீ எப் சீ சீ வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 6,026.24 | 11,922.75 |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 5,896.51 | |
| 6 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புச் சபை | லக்தனவி லிமிடெட் | 2,992.00 | 2,992.00 |
| 7 | சீனா எக்சிம் வங்கி | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 17,719.47 | 17,719.47 |
| 8 | ஹட்டன் நெஷனல் வங்கி | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 4,000.00 | 37,593.35 |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 13,460.20 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 20,133.15 | |
| 9 | ஹொங்கொங் என்ட் ஷங்காய் பேங்கின் கொ லிமிடெட் | விமான நிலைய, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 8,821.85 | 41,527.63 |
| | | வெஸ்ட் கோஸ்ட் (பிரைவேட்) லிமிடெட் | 32,705.78 | |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா. மில்லியன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 10 | இன்டஸ்ரியல் என்ட் கொமர்ஷியல் பெங் ஒப் சைனா லிமிடெட் | இலங்கை மின்சார சபை | 8,389.02 | 8,389.02 |
| 11 | யப்பான் இன்டநெஷனல் கோபரேஷன் ஏஜன்சி (JICA) | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 136,786.32 | 136,786.32 |
| 12 | தேசிய அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 21,380.43 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 6,299.21 | 27,679.63 |
| 13 | எக்சிம் பேங்க் ஒப் இந்தியா | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 51,306.63 | 51,306.63 |
| 14 | சீனா அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 12,485.22 | 12,485.22 |
| 15 | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை மின்சார சபை | 92,939.55 | 92,939.55 |
| 16 | சம்பத் வங்கி பிஎல்சி | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 14,500.00 | 14,500.00 |
| 17 | யுனி கிரடிட் பேங் ஒஸ்ரியா ஏஜி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 12,273.16 | 12,273.16 |
| 18 | ஐஎன்ஜி வங்கி என்வீ நெதர்லாந்து | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 20,120.19 | 20,120.19 |
| 19 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 2,398.44 | |
| 20 | சீனா நெஷனல் கெமிகல் இன்ஜினியரிங் இல14. கடமொன் கொ. லிமி. | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 8,749.31 | 8,749.31 |
| 21 | டீபி டரஸ்டிஸ் ஹொங்கொங் லிமிடெட் | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 34,977.25 | 34,977.25 |
| 22 | இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட் | நோர்த் சீ லிமிடெட் | 60.00 | 60.00 |
| 23 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 35,976.60 | 35,976.60 |
| **மொத்தம்** | | | **1,434,743.08** | **1,434,743.08** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

# அத்தியாயம் 3

## அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகை

### மேன்நோக்கு

இலங்கையில் வழங்கல் சங்கிலி, பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி, வங்கி, மின்சாரம், நீர், துறைமுகம் விமான நிலையம் மற்றும் மருந்துக்கள் போன்ற துறைகளில் அரசுடமைத் தொழில் முயற்சிகள் முக்கிய வகிபாகத்தினை தொடர்ந்தும் வகித்துள்ளதோடு, கொவிட்-19 நோய்த் தொற்று நிலமையினை எதிர்கொள்கையில் அவற்றின் செயலாற்றுகை இன்றியமையாதவையாகும். அதன்படி, மருந்துக்களை தொடர்ந்து வழங்கல் செய்தல், மருந்து உற்பத்தியினை உறுதிசெய்தல் மற்றும் 2021 ஆம் ஆண்டில் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தல் அவ்வாறே, தடுப்பூசிகளை நாட்டினுள் உற்பத்தி செய்வதற்கான திட்டமிடல் தொடர்பில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பன நேரடிப் பங்களிப்பினை வழங்கியுள்ளதோடு, அத்தியவசிய நுகர்வுப் பண்டங்கள் தொடர்ந்தும் வழங்கல் செய்யப்படுவதனை உறுதிசெய்து, தங்குதடையின்றி வழங்கல் சங்கிலியிளை உறுதிசெய்து, லங்கா சதோச மற்றும் துறைமுக அதிகார சபையினால் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன. இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி உள்ளடங்கலாக அரச வங்கி வலையமைப்பு மூலம் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்காக தண்ட வட்டிகளின்றிய கடன் சலுகைக் கால வரையறைகளை வழங்குவதன் மூலம் கடன் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது பிரதான 52 அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்கள் ரூபா 13.4 பில்லியனினை நட்டமாகப் பதிவுசெய்துள்ளன. பிரதான 52அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்களில் 33 தொழில்முயற்சிகள் ரூபா 69.4 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமொன்றாகப் பதிவாக்கியுள்ளதோடு, ஏனைய 19 தொழில் முயற்சிகளினால் ரூபா 82.8 பில்லியனினை தேறிய நட்டமொன்றாக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது பதிவுசெய்திருந்தன. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது 19 அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் அறவீடு மற்றும் பங்கிலாபம் என்ற வகையில் ரூபா 6.84 பில்லியனினை பணவனுப்பல் செய்வதன் மூலம் அரசாங்கத்தின் வரியல்லா வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளன.

### பிரதான 10 அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு

#### இலங்கை வங்கி

ரூபா 3.0 திரிலியன் சொத்துத் தளத்துடன் இலங்கையின் முதலாவது வங்கியாகப் பரிணமித்து, 2020 ஆம் நிதியாண்டின் இறுதியின் போது ரூபா 2,983 பில்லியனாக காணப்பட்ட இலங்கை வங்கியின் சொத்துத் தளம், 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியின் போது ரூபா 3,113 பில்லியன் வரையில் 4.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2,475 பில்லியனாகக் காணப்பட்ட இலங்கை வங்கியின் வைப்புத் தளமானது, 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 2,528 பில்லியன் வரையில் 2.1 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் 4.8 சதவீதமாக காணப்பட்ட தேறிய அடையாளப்படுத்தப்படாத ஐயக் கடன் விகிதம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் 4.4 சதவீதம் வரையில் மிதமான வளர்ச்சியொன்றினை பதிவாக்கியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் மொத்த நிதியாண்டின் போது பதிவாக்கிய ரூபா 23.5 பில்லியன் வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக ரூபா 19.6 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாக பதிவுசெய்துள்ளது.

#### மக்கள் வங்கி

2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2,230 பில்லியனாக காணப்பட்ட மக்கள் வங்கியின் சொத்துத் தளம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 2,420 பில்லியன் வரையில் 8.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,835 பில்லியனாக காணப்பட்ட வைப்புத் தளம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 2,031 பில்லிய வரையில் அதிகரித்துக் காணப்பட்டது. அவ்வாறே. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,723 பில்லியனாக காணப்பட்ட கடன் பட்டியல் பெறுமதியானது 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 1.904 பில்லியன் வரையில் 10.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் 3.2 சதவீதமாகக் காணப்பட்ட அடையாளப்படுத்தப்படாத ஐயக் கடன் விகிதம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் 3.0 சதவீதத்திற்கு சற்று வீழ்ச்சியடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலப்பகுதியினுள் பதிவாக்கிக் காணப்பட்ட ரூபா 6.8 பில்லியனாகக் காணப்பட்ட வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையான முதல் நான்கு மாதங்களின் போது மக்கள் வங்கியின் வரிக்கு முன்னைய இலாபமானது, ரூபா 8.0 பில்லியன் என பதிவாக்கியிருந்தது.

#### தேசிய சேமிப்பு வங்கி

2020 ஆம் நிதியாண்டின் இறுதியளவில் ரூபா 1,364 பில்லியனாக காணப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புத் தளமானது, 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 1,451 பில்லியன் வரையில் 6.3 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,237 பில்லியனாக

காணப்பட்ட வங்கியின் வைப்பானது 6.7 சதவீத வளர்ச்சியுடன் 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 1,320 பில்லியனாக காணப்பட்டது. அவ்வாறே, 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட ரூபா 517 பில்லியனாக காணப்பட்ட கடன் பட்டியல் 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 502 பில்லியன் வரையில் சற்று விழ்ச்சியடைந்து காணப்பட்டது. அவ்வாறே, 2020 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தினுள் பதிவாக் காணப்பட்ட ரூபா 3.9 பில்லியனாகக் காணப்பட்ட வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதி வரையான காலப் பகுதியினுள் தேசிய சேமிப்பு வங்கியின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 10.6 பில்லியன் என பதிவாக்கியது.

### இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

2020 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தினுள் ரூபா 13.0 பில்லியன் என பதிவாக்கிய மொத்த வருமானம் ரூபா 19.1 பில்லியன் வரையில் 47 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களினுள் பதிவாக்கிய வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 7.5 பில்லியனாகும். 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது காணப்பட்ட சாதகமான சந்தை சூழ்நிலைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் இறுதியளவில் நிறுவனத்தின் சொத்துத் தளம் ரூபா 243 பில்லியன் வரையில் அதிகரித்திருநதது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதன் நிருவாகத்தின் கீழுள்ள நிறுவனமான கெண்வில் ஹோல்டிங் (தனியார்) நிறுவனத்தினால் நடை முறைப்படுத்தப்படுகின்ற கிராண்ட் ஹயாத் ஹோட்டல் கருத்திட்டத்திற்காக ரூபா 2 பில்லியன் மூலதனப் பங்குத் தொகுதியில் முதலீடொன்றில் 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### இலங்கை மின்சார சபை

மின்சாரத்திற்கான கேள்வி 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது 4,949 கிகாவோர்ட் மணித்தியாலம் வரையில் 23 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டதோடு, இது 2020 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தின் போது பதிவாக்கிய 4,026 கிகாவோர்ட் மணித்தியாலத்தோடு ஒப்பிடுகையில் அதிகரித்துக் காணப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு குறிப்பாக, இக்காலப் பகுதியில் நடமாட்டத் தடை மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, கைத்தொழில், பொதுச் சேவைகள் மற்றும் ஹோட்டல் துறைக்கான கேள்விகள் அதிகரித்தமையே இதற்கு பிரதான காரணமாக அமைந்தன.அதன் விளைவாக 2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 67,213 மில்லியனாக காணப்பட்ட மின்சார விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 80,529 மில்லியனுக்கு 20 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும், இக்காலப் பகுதியினுள் ரூபா 25,994 மில்லியனாக காணப்பட்ட தொழிற்பாட்டு நட்டத்தினை ரூபா 7,515 மில்லியன் வரையில் குறைத்துக் கொள்வதற்கு இலங்கை மின்சார சபையினால் முடிந்துள்ளது. இதேவேளை, 2020 ஆம் ஆண்டின் இதே மீளாய்வுக் காலத்தின் போது நீர்:அனல் (எரிபொருள்): அனல்(நிலக்கரி): பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்.சி.ஆர்.இ) கலவையானது 19:34:40:7 இலிருந்து 18:29:44:9 வரையில் உற்பத்திக் கலவையில் மேற்கொள்ளப்பட்ட சாதகமான மாற்றங்கள் காரணமாக 2020 ஆம் ஆண்டில் குறித்த காலப் பகுதியில் அறிக்கையிடப்பட்ட கிலோவோற் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 23.74 ஆக காணப்பட்ட விற்பனைக் காலத்தினுள் அலகொன்றிற்கான செலவினம் அறிக்கையிடப்பட்ட காலப் பகுதிக்காக கிலோவோற் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 18.29 வரையில் குறைவடைந்து காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் கருத்திட்டக் கடன் உள்ளடங்கலாக செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 371,299 மில்லியனாக காணப்பட்டதோடு, தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாடு காரணமாக அரச வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைத் தொகையானது ரூபா 107,219 மில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் சுயாதீன மின்னுற்பத்தியார்களுக்கும் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் செலுத்தப்பட வேண்டியிருந்த மொத்தத் தொகையான ரூபா 133,365 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 126,869 மில்லியன் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது பெற்றோலிய உற்பத்திகக்கான மொத்தக் கேள்வியானது மெட்ரிக் தொன் 2 மில்லியன் வரையில் 7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் மெட்ரிக் தொன் 1.78 மில்லியனாக காணப்பட்ட 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக பெற்றோலியம் மற்றும் பெற்றோலியத்துடன் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்ட அளவினை கடந்த வருடத்தின் அதே காலப்பகுதியின் மெட்ரிக் தொன் 1.48 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 20 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போதான பிரண்டி மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றிற்கான சர்வதேச சந்தையில் நிலவிய விலையானது ஐ.அ.டொ.66 வரையில் 29 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களினுள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்தப் பெற்றோலிய உற்பத்தி இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொ.894 மில்லியனாக காணப்பட்டது. இதனை 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ஐ.அ.டொ. 699 மில்லியன் பெற்றோலிய உற்பத்தி இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் இது 28 சதவீத அதிகரிப்பாகும்.

இச்சந்தர்ப்பத்தில் நிலையான விலையொன்று தொடர்ந்தும் பேணப்பட்டதன் காரணமாக இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றுகை மீது பாதகமான தாக்கமானது, 2021 ஆம் ஆண்டின் முதல் 4 மாதக் காலப் பகுதியினுள் பதிவாக்கிய ரூபா 8.2 பில்லியன் மொத்த நட்டத்தினை 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதிக்காக பதிவாக்கிய ரூபா 8.4 பில்லியனாக காணப்பட்ட மொத்த நட்டத்துடன் ஒப்பிடுகையில் தெளிவாகின்றது. இந்நிலமை காரணமாக 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 45.3 பில்லியனினை தேறிய நட்டமொன்றாகப் பதிவு செய்துள்ளது. இதேவேளை, பிரதானமாக இலங்கையில் மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் விமான சேவை போன்ற பல்வேறுபட்ட அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற வேண்டியுள்ள நிலுவைத் தொகையானது ரூபா 149,602 மில்லியனாகும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரட்டிய வருமானம் 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதியில் எதிர்மறையான ரூபா 382 பில்லியன் என பதிவாக்கியிருந்தது. இதன் விளைவாக இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தினால் அரச வர்த்தக வங்கிகள் இரண்டிற்கும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 529 பில்லியன் கடன் தொகையானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியளவில் ரூபா 670 பில்லியன் வரையில் அதிகரித்திருந்தது. மேற்குறித்த நிலைமைகள் மற்றும் ஏனைய காரணிகளைக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தினால் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிதி நிலமைகளை பலப்படுத்துவதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, வெளிநாட்டு சந்தைகளிலிருந்து ஐ.அ.டொ. 1.0 பில்லியன் பெறுமதியான நீண்ட கால மீள் நிதியளிப்பு வசதியொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறே, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புதிய வியாபார மாதிரி ஒன்றுடன் கப்பல்களுக்கு எண்ணெய் விற்பனை செய்வதற்கான வியாபாரத்தினையும் மீள ஆரம்பிப்பதற்கும், அரச, தனியார் கூட்டுப் பங்கேற்புடன் 100,000 பீப்பாய் மசகு எண்ணெய்யினை சுத்திகரிப்பதற்கான கொள்ளளவினைக் கொண்ட புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றினை நிருமாணிப்பதற்கா சாத்தியப்பாட்டு ஆய்வினையும் மேற்கொண்டு வருகின்றது.

### இலங்கை துறைமுக அதிகார சபை

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது துறைமுக வளாகத்தில அரசாங்கத்தினால் தீவிர உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை துறைமுக அதிகார சபையினால் கிழக்கு கொள்கலன் கையாளல் மையம் மற்றும் மேற்கு கொள்கலன் கையாளல் மையம் என்பனவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தனியார்த் துறையினரின் ஒத்துழைப்புடன் ஆரம்பிப்பதற்கு தேவை யான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர் வருகின்ற ஐந்து வருடங்களில் கிழக்கு மற்றும் மேற்கு கொள்கலன் கையாளல் மையங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை ஒரே காலத்தில் செயற்படுத்தல், சர்வதேச ரீதியாக கடல் வர்த்தகத்தினுள் வளர்ந்து வருகின்ற கேள்விக்கு நிரம்பலினை அதிகரிப்பதற்காக 2025 ஆம் ஆண்டு முதல் குறித்த கொள்கலன் கையாளல் மையங்களை பூரண தொழிற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிபலனாக எரிபொருள் வழங்கல், சேமித்தல் மற்றும் சேமிப்பிற்கான வசதிகளை வழங்கல், கப்பல் கட்டல் மற்றும் பழுதுபார்த்தல், காப்புறுதி, வங்கியிடல் மற்றும் ஏனைய சேவைகள் என்பனவற்றினை மேலதிக கைத்தொழிலாக அறிமுகப்படுத்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல். பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்ப்பதற்கும் மற்றும் உற்பத்தித் திறனினை அதிகரிக்கச் செய்வதற்கும் உதவுகின்ற நேரடி மற்றும் நேரடியல்லாத வேலை வாயப்பினை அதிகரித்தல் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் என்பனவற்றின் மூலம் நிதி மற்றும் சமூக ரீதியாக நடுத்தரக் கால பிரதிபலன்களை விளைவாக வழங்கவுள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது, 1,303 சரக்கு, ஏனைய கப்பலகள் மற்றும் படகுகள் துறைமுக அதிகார சபையினால் பரிபலிக்கப்படுகின்ற கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி போன்ற துறைமுகங்களுக்கு வருகை தந்துள்ளதோடு, முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் இதனை ஒப்பீடு செய்கையில் இது முன்னைய வருடத்தினை விடவும் 35 சதவீத வளர்ச்சியொன்றினைப் பிரதிபலித்தது. அதற்கமைய, இலங்கை துறைமுக அதிகார சபையினால் இருபது அடிக்கு சமமான கொள்கலன் (TEUs) அலகுகள் 700,000 கையாளப்பட்டுள்ளதோடு இது 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது 35 சதவீத அதிகரிப்பாகும்.

கப்பல் செயற்பாடுகள், கொள்கலன் கையாளல், வோர்ப் வழிநடாத்துதல், துறைமுக வசதிகளை வழங்குதல் மற்றும் சேவைகளை வழிநடாத்துதல் மூலம் துறைமுக அதிகார சபையானது வருமானம் ஈட்டுகிறது. 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஈட்டப்பட்ட ரூபா 17,024 மில்லியன் வருமானம், முன்னைய ஆண்டின் மீளாய்வுக் காலத்துடன் ஒப்பிடுகையில் 23 சதவீத வளர்ச்சியை பிரதிபலிப்பதோடு, அறிக்கையிடப்பட்ட ரூபா 10,549 மில்லியன் மொத்த செலவினமும் 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின்

முதல் நான்கு மாதங்களுக்காக இலங்கை துறைமுக அதிகார சபை ரூபா 4,993 மில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாக பதிவாக்கியுள்ளதோடு, முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 4,675 மில்லியன் வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பு நோக்குகையில் 7 சதவீத வளர்ச்சியினைப் பதிவாக்கியுள்ளது. 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் நிறுவனத்தின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன் முறையே ரூபா 55,096 மில்லியன் மற்றும் ரூபா 8,795 மில்லியன் எனக் காணப்பட்டது.

### தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2025 ஆம் ஆண்டிற்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் இலக்குகளை நிறைவேற்றுவதிலும்,''அனைவருக்கும் நீர்'' என்ற அரசாங்கத்தின் இலக்கினை அடைவதற்காகவும் 2020 ஆம் ஆண்டில் குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் பரப்பெல்லையானது, முறையே 51.9 சதவீதம் மற்றும் 92.0 சதவீதம் எனக் காணப்பட்டதோடு, 2021 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களின் இறுதியில் இது முறையே 53.7 சதவீதம் மற்றும் 93.8 சதவீதம் என அதிகரிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் முடிந்துள்ளது.

இக் கால கட்டத்தில் வலைப்பின்னலுக்கு புதிதாக 21,000 இணைப்புகளைச் சேர்ப்பதன் மூலம் வெளிநாட்டு நிதியளிப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான 02 கருத்திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்திசெய்வதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு முடிந்துள்ளது இதன் மூலம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானம் 2020 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா 8,115 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 8,327 மில்லியன் வரையில் 3 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இதன் விளைவாக முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதிக்குரிய ரூபா 36 மில்லியனாக காணப்பட்ட தொழிற்பாட்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 117 மில்லியன் தொழிற்பாட்டு இலாபமொன்றினை அறிக்கையிடுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு முடிந்துள்ளது. ஆயினும், சபையினால் 2021 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுக்காக ரூபா 209 மில்லியன் நட்டமொன்றினைப் பதிவாக்கியுள்ளதோடு,முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இது ரூபா 143 மில்லியனினை நட்டமாகப் பதிவாக்கியிருந்து.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது நீர் உற்பத்தி மற்றும் நீர் விநியோகம் என்பன முறையே 3 சதவீதத்தினாலும் 7 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததோடு அதற்கமைய, இது முறையே 265 மில்லியன் கன மீற்றர் மற்றும் 200 மில்லியன் கன மீற்றர் எனக் காணப்பட்டது. மேலும், பெரும்பாக கொழும்பு கழிவு நீர் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக வருமானம் அல்லாத நீர் கையாளல் முன்னைய வருடத்தினை விடவும் சாதகமான போக்கொன்றினை பிரதிபலித்து குறைவடைந்து காணப்பட்டது.

### விமான நிலையம் மற்றும் விமான சேவை ஸ்ரீ லங்கா கம்பனி

கொவிட்-19 நோய்த்தொற்று தாக்கத்தினைத் தணிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிதி நிலமைகளுக்கு எதிராக கடும் தாக்கமொன்றினை ஏற்படுத்தியதோடு, அதன் விளைவாக 2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் போது தொழிற்பாட்டு நட்டம் ரூபா1,792 மில்லியனாக காணப்பட்டதோடு,குறித்த காலாண்டின் போது கையாளப்பட்ட விமானப் பயணிகளின் எண்ணிக்கையும் 119,742 ஆக மாத்திரம் காணப்பட்டது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் 2 ஆவது முனையம் ஸ்மார்ட் விமான நிலைய எண்ணக் கருவினைப் பயன்படுத்தி நிருமாணிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுவதோடு 3 வருட காலத்தினுள் நிருமாணச் செயற்பாடுகள் முடிவுற்றதன் பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சௌகரியமான சுற்றுலா அனுபவங்களை வழங்குவதற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவை ஸ்ரீ லங்கா நிறுவனம் வாய்ப்பொன்றினை ஏற்படுத்திக் கொடுக்கிறது. பல்-மாடி வாகனத் தரிப்பிடம், புதிய விமானநிலைய ஓய்வு அறை, நுழைவாயல் ஓய்வு அறை, வலைப்படுத்தப்பட்ட பல் மாதிரியிலான போக்குவரத்து முறைமை மற்றும் ஏனைய வசதிகள் என்பன விமானப் பயணிகளின் சௌகரியங்கள் மற்றும் மனத்திருப்தி என்பனவற்றினை அதிகரிப்பதற்கு காரணமாக அமையும். புதிய முனையத்தின் மொத்த நிலப் பரப்பு 180,900 மீற்றர் சதுர அடியாகும் என்பதோடு அது முனையத்துடன இணைகையில் 270,900 சதுர அடி வரையில் விரிவடைகின்றது. புதிய 96 உள்வருகை சோதனைக் கருமபீடங்களைத் தாபிப்பதன் மூலம் பயணிகள் உள்வருகை சோதனைக் கருமபீடங்களின் எண்ணிக்கையும் 149 வரையில் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கு மேதிகமாக 32 புதிய வெளிச் செல்லல் கடவுச்சீட்டுச் சோதனைக் கருமபீடங்கள் மற்றும் 56 புதிய உள் வரவு கடவுச்சீட்டு சோதனைக் கருமபீடங்கள், 16 இணைப்பு வாயில்கள், 10 பஸ் வண்டி வாயில்கள், 6 புதிய பயணப் பொதிபெறுகை நிலையங்கள், 7 புதிய பயணப் பொதிகள் செயல்முறைப்படுத்தல் மையங்கள், 7 அலங்கார பயணப்பொதி நிலையங்கள் மற்றும் புதிய 23-28 இடையிலான விமானத் தரிப்பிட மையங்கள் என்பனவும் புதிய முனையத்தில் ஏற்படுத்தப்பட உள்ளது.

### ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம்

2020 ஆம் ஆண்டில் கொவிட் - 19 நோய்த்தொற்றுத் தாக்கத்துடன் விமான சேவைகள் கைத்தொழிலில் தொழிற்பாட்டு சூழ்நிலை முற்றாக மாற்றமடைந்தது. தற்பொழுது வரையில் நோய்த்தொற்றின் தாக்கம் அதிகரித்தமை காரணமாக இலங்கைக்குள் வருகின்ற விமானப் பயணிகள் வருகை மீது மோசமான தாக்கத்தினை

எற்படுத்தியுள்ளது. பெரும்பாலான நாடுகள் நடமாட்டத் தடையினை அமுல்படுத்தியன் காரணமாக இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் துார கிழக்கு நாடுகள் போன்ற ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கான இலக்கு நாடுகளின் பிரதான சந்தைகளும் தாக்கத்திற்கு உட்பட்டன. இவ்வாறு 2020 ஆம் ஆண்டில் உலகம் பூராகவும் விதிக்கப்பட்ட நடமாட்டத் தடை போன்ற எல்லைத் தடைகள் காரணமாக விமான சேவையொன்றின் பாரம்பரிய வர்த்தகத்தினை மேற்கொள்ளும் பிரயாணிகளை நகர்த்தும் பணியானது வரையறுக்கப்பட்டதோடு, இது 2021 ஆம் ஆண்டிலும் இன்னும் தொடரப்படுகின்றது. இதன் காரணமாக விமானங்களில் சரக்குப் போக்குவரத்து பிரதான வருமானம் ஈட்டும் வழிமுறையாக காணப்பட்டது. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களின் போது ஸ்ரீ லங்கன் விமான சேவையினால் விசேட சரக்கு போக்குவரத்துக்கான அட்டவணையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அதற்காக அகன்ற கட்டமைப்பினைக் கொண்டுள்ள விமானமொன்று சரக்குகளைக் கொண்டு செல்வதற்கான சரக்கு விமானமாக மாற்றியமைக்கப்பட்டது. அடிப்படைப் பண்டங்களுக்கான கேள்வியினை மையப்படுத்தி ஆறு புதிய வான் வழிப் பாதைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, மேலும் புதிய விமானங்கள் மற்றும் வான் வழிப்பாதைகளைப் பயன்படுத்தி சரக்குப் போக்குவரத்தினை அதிகரிப்பதற்காக திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. நவீன உலகில் விமானப் பயணக் கைத்தொழிலானது மோசமான நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்துள்ளதோடு, குறித்த நெருக்கடியின் எதிர்மறையான தாக்கத்தினைத் தணிப்பதற்காக செலவின கட்டமைப்பினை உச்சப் படுத்தல், பிற்போடப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பண்ட வழங்குநர்களுடன் கலந்துரையாடல் போன்ற நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் திரவத் தன்மையினைப் பாதுகாப்பதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவை நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறு மேற்கொள்கையில் தொடர்ந்தும் புதிய வியாபார வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதிலும் ஸ்ரீலங்கன் விமான சேவைக் கம்பனியினால் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதோடு செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளும் நடை முறைப் படுத்தப்படுகின்றன.

இணக்கமான முக்கிய ஆரம்ப செலவில் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகளும் விமானக் குத்தகையினை நிரந்தரமாக ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொ. 27.5 மில்லியனினால் குறைப்பதற்கு காரணமாக அமைந்த விமானக் குத்தகை உடன்படிக்கைகளை மீளக் கட்டமைத்தல் மற்றும் கம்பனியின் திரவத்தன்மை மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற கொடுப்பனவினைப் பிற்போடல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

தன்னார்வ ஓய்வூதியத் திட்டம், கொடுப்பனவுகளை மீள் கட்டமைத்தல், 2.5 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம் வரையில் கட்டாய சம்பளக் குறைப்பு, சம்பள ஏற்றம் அல்லது ஆட்சேர்ப்புகளைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளின் மூலம் பதவியணி செலவினை இணக்கமான வகையில் தற்போதைய சூழ்நிலைகளிலும் தொடரப்படுகின்றன. அனைத்து கூட்டு ஒப்பந்தங்களும் 2021 ஆம் ஆண்டில் நிராகரிக்கப்பட்டன.

புதிய பங்கு மூலதனத்தினை உட்செலுத்துவதன் மூலம் அரசாங்கம் தொடர்ந்தும் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்திற்கு ஆதரவளித்தது. இது 2014 ஆம் ஆண்டின் இரண்டு தவணைகளில் ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முதலாவது மூலதன உட்பாய்ச்சலாக காணப்பட்டதோடு 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூபா 27.7 பில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூபா 18 பில்லியன் என வழங்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் 26 ஆம் திகதியன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்த ஐ.அ.டொ. 500 மில்லியன் மூலதனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுகின்றது.

மேலும், இக்காலப் பகுதியினுள் முதிர்ச்சியடைந்த குறுங்கால கடன்களுக்காக இரண்டு அரச வங்கிகளுக்கும் வழங்கப்பட்டிருந்த ஐ.அ.டொ. 205.4 மில்லியன் மற்றும் ரூபா 27.6 பில்லியன் பெறுமதிவாய்ந்த சலுகைக் கடிதங்களை மீள விநியோகிப்பதற்காக பொதுத் திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி உத்தரவாதங்களை வழங்கி செயற்பாட்டு மூலதன நடவடிக்கைகளுக்காக இரண்டு அரச வங்கிகளினாலும் ஐ.அ.டொ.75 மில்லியன் பெறுமதியான புதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் திகதியளவில் ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனத்தினால் ரூபா 372,015.25 மில்லியன் திரட்டிய நட்டமொன்றுடன், 2020-2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 45,162.76 மில்லியனினை நட்டமாகப் பதிவாக்கியுள்ளது. மேலும், ரூபா 221,254.34 மில்லியனிலான ஸ்ரீலங்கா விமான சேவைகள் நிறுவனத்தின் பொறுப்புக்கள் தற்போதுள்ள சொத்துக்களையும் மிகைத்துக் காணப்படுவதோடு,அறிக்கையிடப்படுகின்ற திகதிக்கு அந்நிறுவனத்தின் மொத்தப் பங்குகளின் பெறுமதி மறை ரூபா 289,546.99 மில்லியனாக காணப்படுகின்றது. ஸ்ரீ லங்கன் நிறுவனத்தின் தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியினை விடவும் குறைவானதாகும் என்பதோடு நிறுவனம் கடுமையாக மூலதன இழப்பிற்கு உட்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஸ்ரீ லங்கன் நிறுவனத்தின் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்படும் வரையில் நிதி ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தினால் அந்நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பினை தொடர்ந்து ''முன்கொண்டுசெல்லல்''என்ற வகையில் அதனை உறுதிப்படுத்தப்படுத்துகின்ற கடிதமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3.1 : பிரதான அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்களுக்கான மறுசீரமைப்புஃ பிரதான முன்னெடுப்புக்கள்

| தொழில்முயற்சி நிறுவனங்கள் | மறுசீரமைப்பு ஃ பிரதான முன்னெடுப்புக்கள் |
|---|---|
| | ▪ கடன் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் கண்காணிப்பு மற்றும் மீள அறவீடு என்பனவற்றை அதிகரித்தல்.<br>▪ இடர் முகாமைக் கட்டமைப்பினை வலுப்படுத்தல் |
| அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகை | ▪ நோய்த் தொற்று நிலமைகளின் கீழும் தமது வாடிக்கையாளர்களுக்கு மொபைல் அப்பினைப் பயன்படுத்துவதன் ஊடாக வாடிக்கையாளர் எதிர்பாரப்புக்களை பூர்த்திசெய்வதற்காக தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்திசெய்தல்.<br>▪ தற்போதைய வாடிக்கையாளர்களுக்கு உதவுவற்காக புதிய தயாரிப்புக்களை வடிவமைத்தல் மற்றும் புதிய வாடிக்கையாளர்களைக் கவருதல்.<br>▪ கொவிட்- 19 நோய்த்தொற்றின் 3 ஆவது அலைக்கு மத்தியில் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான மற்றும் தடையின்றிய வங்கிச் சேவையினை உறுதிசெய்தல்.<br>▪ நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு புதிய சலுகை நிதி ஏற்பாடுகளை ஏற்படுத்தல். |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுததாபனம் | ▪ பின்வருவனவற்றிற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br>- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்காக ஐ.அ.டொ 1.0 பில்லியன் நீண்ட கால மீள்நிதியளிப்பு வசதியொன்றினைப் பெற்றுக்கொள்ளல்.<br>- சப்புகஸ்கந்தையில் உத்தேச புதிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்காக காணியொன்றினைக் கையகப்படுத்தல். |
| இலங்கை துறைமுக அதிகார சபை | ▪ இலங்கை துறைமுக அதிகார சபை Adani Port and Special Economic Zone Ltd மற்றும் அவற்றின் உள்நாட்டுப் பங்குதாரரான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் பி எல்சி போன்ற நிறுவனங்களினால் 35 வருட காலம் வரையில் வெளியக கொல்களன் கையாளல் நிலையத்தினை நிருமாணித்தல், செயற்படுத்தல் மற்றும் கையளித்தல் (BOT) திட்டத்தின் கிழ் அரச மற்றும் தனியார் கூட்டுப் பங்கேற்பு என்ற வகையில் அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| | ▪ இலங்கை துறைமுக அதிகார சபையினால் கிழக்கு கொள்கலன் கையாளல் யைத்தினை கட்டம் கட்டமாக அபிவிருத்திசெய்தல் மற்றும் அதனை இலங்கை துறைமுக அதிகார சபையின் பூரண அதிகாரத்தின் கீழுள்ள கொள்கலன் கையாளல் மையம் என செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கொள்கலன் கையாளல் மையத்தின் சிவில் நடவடிக்கைகளஜக்காக கட்டமைப்புத் திட்டமொன்றும் பெறுகைக்கான ஆவணத் தயாரிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>▪ முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) கோரப்பட்டு தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் சுற்றுலா மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பிராந்திய துறைமுகமொன்றாக காலி துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் இலங்கை துறைமுக அதிகார சபை நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.<br>▪ துறைமுக அதிகார சபையினால் துறைமுக சமூக வலையமைப்பொன்றினை செயல்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமூக வலையமைப்பு என்பது துறைமுகப் பிரிவில் வணிகச் செயல்பாட்டினை நிறைவேற்றுவதற்கான இணைப்பினை வழங்குகின்ற சுயாதீனமான ஏக மென்பொருள் தீர்வுகளாக அமையப்பெறும் என்பதோடு மாத்திரமல்லாது செயல்முறையொன்றின் வணிகச் சுழற்சியை பூரணப்படுத்துதோடு தொடர்புடைய தள்ளல் அல்லது இழுத்தல் போன்ற பொதுவான பரிவர்த்தனைகளை மாத்திரமே பயன்படுத்துகின்ற புதிய தகவல் அமைப்பு பயன்பாடு ஒன்றினை இது உருவாக்கும். |
| இலங்கை சீனிக் கம்பனி லிமிடெட் | ▪ கைத்தொழிற்சாலையின் கொள்ளளவினை அதிகரித்தல் மற்றும் கரும்பு செய்கையினை அதிகரிப்பதன் மூலம் சீனி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத் தொழில்முயற்சித் திணைக்களம்

**அட்டவணை 3.2 பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் இலாபமீட்டும் தன்மை**

ரூபா. மில்லியன்

| | தொழில்முயற்சி நிறுவனங்கள் | 2019(a) | 2020(a) | 2021.04.30 (a) வரையில்) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 29,685 | 23,552 | 19,656 |
| 2 | மக்கள் வங்கி | 19,666 | 21,227 | 8,055 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 10,462 | 15,645 | 10,567 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 465 | 587 | 192 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 774 | 978 | 433 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 1,222 | 1,586 | -88 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 29,761 | 32,500 | 10,668 |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 19,865 | 23,663 | 7,460 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 3,009 | 9,015 | 3,029 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 253 | 265 | 86 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 627 | 1,257 | 138 |
| 12 | இலங்கை மின்சார சபை | -85,411 | -62,561 | -7,515 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | -11,836 | 2,371 | -45,304 |
| 14 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 16,155 | 20,327 | 4,993 |
| 15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | -1,111 | 663 | -209 |
| 16 | விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிடெட் | 15,223 | -3,748 | -1,792 |
| 17 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் (a) | -47,198 | -45,162 | -24,800 |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | 1,890 | -2,383 | -1,090 |
| 19 | அரசு பொறியியல் கூட்டுத்தபானம் | -976 | -997 | -369 |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 340 | 261 | 16 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் | -844 | -243 | 39 |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட்** | -619 | 417 | 80 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | -362 | 6 | 31 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | -330 | -150 | -41 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | -757 | -350 | -97 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி லிமிடெட் | 120 | 214 | 135 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி லிமிடெட் | 64 | 283 | 135 |
| 28 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி லிமிடெட் | -53 | 43 | 9 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் | 43 | 15 | 1 |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி லிமிடெட் | 1,982 | 69 | 406 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி லிமிடெட் | 21 | 66 | 39 |
| 32 | கஹுட்டகஹ கிர.ஃபைட் லங்கா லிமிடட் | 21 | 1 | 12 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,897 | 2,994 | 1,500 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,323 | 1,435 | 635 |
| 35 | அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 592 | 1,164 | 266 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 3 | 9 | 1 |
| 37 | அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் | 2,176 | 2,546 | 229 |
| 38 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | -94 | 174 | -41 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு லிமிடெட் | -571 | -213 | -132 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | -501 | -234 | -65 |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபானம் | -101 | -28 | 6 |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | 99 | -98 | -211 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 317 | 464 | 132 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | -27 | -120 | 43 |
| 45 | லங்கா சதொச நிறுவனம் லிமிடெட் | -2,982 | -1,381 | 355 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | -169 | 23 | -285 |
| 47 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் | -100 | -48 | -4 |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | -71 | -109 | -61 |
| 49 | லங்கா உரக் கம்பனி லிமிடெட் | 189 | 268 | 12 |
| 50 | கொழும்பு கொமாசல் /பெர்டிலைசர் கம்பனி லிமிடெட் | 306 | 241 | 43 |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ லிமிடெட் | -312 | -892 | -310 |
| 52 | லங்கா சீனிக் கம்பனி லிமிடெட் | -1,304 | 1,171 | -369 |
| **மொத்தம்** | | **3,821** | **46,783** | **-13,381** |

மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத் தொழில்முயற்சித் திணைக்களம்

a) தற்காலிகமானது

** இலாபம் 2021.03.31 ஆம் திகதியன்று (2021 சனவரி முதல் மார்ச் வரையில்)

**அட்டவணை 3.3 அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்களிலிருந்தான அறவீடு/ பங்கிலாபம்**

ரூபா மில்லியன்

| அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் | 2019 | 2020 | 2021.04.30 வரையில் |
|---|---|---|---|
| **அறவீடு** | **22,663** | **14,769** | **4,296** |
| தேசிய சேமிப்பு வங்கி | 2,000 | 1,000 | 1,500 |
| இலங்கை வங்கி | - | 1,250 | - |
| மக்கள் வங்கி | 2,200 | 2,500 | 500 |
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 8,950 | 5,000 | 2,000 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 169 | - | - |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 50 | - | - |
| தேசிய காப்புறு திநம்பிக்கை நிதியம் | 3,268 | 782 | - |
| புவிச்சரிதவியல 'ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 2,300 | - | - |
| தேசிய இரத்தினக்கல் ,ஆபரண அதிகாரசபை | 25 | - | - |
| இலங்கை முதலீட்டுச் சபை | 250 | 156 | 200 |
| பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | 53 | - | - |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 15 | - | - |
| மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 25 | - | - |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டு மையம் | 500 | - | - |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | 800 | - | - |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம | 200 | - | - |
| இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் | 650 | - | - |
| தேசிய போக்குவரத்து ஆணைக் குழு | 50 | - | - |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 200 | - | - |
| இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 29 | - | - |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 900 | - | - |
| தேசிய ஔடத ஒழுஙகுபடுத்தல் அதிகார சபை | 29 | 81 | 80 |
| தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் | - | - | 16 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | - | 4,000 | - |
| **பங்கிலாபம்** | **5,025** | **2, 855** | **2,542** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 30 |
| இலங்கை வங்கி | 346 | 347 | 173 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 158 |
| வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | 1 | 1 |
| இலங்கை காப்புறுதிக 'கூட்டுத்தபானம் லிமிடெட் | 1,720 | 695 | - |
| விமான நிலையங்கள்,விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிடெட் | 500 | - | - |
| இலங்கை கனிய மணல் கம்பனி லிமிடெட் | 130 | - | 300 |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி லிமிடெட் | 7 | - | 5 |
| லங்கா லேலாண்ட் கம்பனி லிமிடெட் | 13 | 2 | - |
| ரக்னா ஆரக்ஷ்கா லிமிடெட் | 37 | - | - |
| மாந்தை சோல்ட் கம்பனி லிமிடெட் | - | 2 | 1 |
| சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் | 15 | 304 | - |
| கொழும்பு கொமர்'ல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் | 10 | - | - |
| பரந்தன் இரசாயனக் கம்பனி லிமிடெட் | - | 10 | - |
| ஸ்ரீ லங்கா ரெலிகொம்ப பிஎல்சீ லிமிடெட் | 947 | 947 | 1,331 |
| டி லாரூ லங்கா லிமிடட் | 133 | - | 159 |
| லங்கா மின்சாரக் கம்பனி லிமிடெட் | 501 | - | 327 |
| இலங்கை கைத்தொழில் பெருந்தோட்டக் கம்பனி லிமிடெட் | 82 | 82 | - |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் | 23 | 77 | 24 |
| லங்கா லொஜிஸ்டிக் லிமிடெட் | - | - | 1 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் லிமிடெட் | 172 | 12 | 32 |
| ஏனையவை | 12 | - | - |
| **மொத்தம்** | **27,688** | **17,624** | **6,838** |

மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத் தொழில்முயற்சித் திணைக்களம்

# அத்தியாயம் 4

## வெளிநாட்டு நிதியளிப்பு

### மேன்நோக்கு

வெளிநாட்டு நிதியுதவிகளைத் திரட்டுவதற்காக 2020 ஆம் ஆண்டு முதல் பின்பற்றப்பட்ட புதுப்பிக்கப்பட்ட கொள்கைகளுக்கு அமைய,அரசாங்கம் கடன் அல்லாத நிதித் திட்டங்களை ஊக்குவித்து, கடன் குறைப்பைக் கட்டுப்படுத்துவதற்காக தொடர்நிலையிலுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களை மீள முன்னுரிமைப்படுத்தியுள்ளது. அதற்கமைய,2021 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களின் போது ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வள முகாமைமற்றும் அதிகரித்த போக்குவரத்து நெரிசல் பகுதிகளில் இரண்டு மேம்பாலங்களை அமைத்தல் என்பனவற்றிற்காக வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் பெற்றுள்ளது. இதற்கு மேலதிகமாக,கொடுப்பனவு மீதி ஒத்துழைப்பிற்காகவும்அரசாங்கம் வெளிநாட்டு நாணய நியதிகள் கடன் வசதி என்ற வகையில் ஐ.அ.டொ. 500 மில்லியனினையும் திரட்டியுள்ளது.

### வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புகள்

**கொடுப்பனவு மீதிக்கு ஒத்துழைப்பு** வழங்குவதற்காகசீன அபிவிருத்தி வங்கியினால் விரிவுபடுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய நியதிகள் கடன் வசதியின் கீழ் ஐ.அ.டொ.500.0 மில்லியனினை உள்ளடக்கியும்நீர்வள முகாமைக் கருத்திட்டத்திற்கு பயன்படுத்துவதற்காக உலக வங்கியினால் விரிவுபடுத்தப்பட்ட ஐ.அ.டொ.58.08மில்லியனினையும்,கொஹுவல மற்றும் கட்டம்பே பகுதிகளில் மேம்பால நிருமாணத்திற்காக ஹங்கேரி நாட்டின் எக்ஸிம் வங்கியினால் விரிவுபடுத்தப்பட்ட ஐ.அ.டொ.60.96 மில்லியனினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அரசாங்கம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது **பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக** வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் முகவர்களுடன் 4 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதன் மூலம் ஐ.அ.டொ. 633.8 மில்லியனினை வெளிநாட்டு **நாணய** நிதியளிப்பாகத் திரட்டுவதற்காக நடவடிக்கைகளை **எடுத்துள்ளது. இருந்தபோதும் 2021 இன் முதல் நான்கு மாதங்களுக்கான வெளிநாட்டு நிதியளிப்பு திரட்டலானது, கொவிட் 19 தொற்றுநோயால் பாரியளவில் பாதிக்கப்பட்டது.**

**அட்டவணை 4.1 : நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் – 2021 சனவரி 1 முதல் ஏப்பிரல் 30 வரையில்**

| அபிவிருத்தி பங்காளர் ஃ கடன் வழங்கும் முகவர் நிறுவனம் | சாதன வகை | உடன் படிக்கைத் திகதி | கருத்திட்டம்ஃ நிகழ்ச்சித் திட்டம்ஃ சாதனத்தின் பெயர் | உறுதியளிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நிதி நியதிகள் | | | | பிற நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | சாதன நாணயம் | ரூபா | ஐ.அ.டொ. | வட்டி | | | | | |
| | | | | | | | | வகை | வருடாந்த விகிதம் (%) | வரையறை (100 அடிப்படைப் புள்ளி) | பிற கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டுகள்) | முதிர்ச்சிஃ உடன்படிக்கை திகதியிலிருந்தான எஞ்சிய காலம் (ஆண்டுகள்) |
| **இருதரப்பு** | | | | | | | | | | | | | |
| சீனா அபிவிருத்தி வங்கி | கடன் | 4/12/2021 | வெளிநாட்டு நாணய நியதியிலான நிதியளிப்பு வசதி 2021 | ஐ.அ. டொ. | 500 | 99,955.00 | 500 | மாறக்கூடிய | ஐ.அ. டொலருக்கான LIBOR | 2.51 | ஆரம்பக் கட்டணம் 1.25% | 3 | 10 |
| **பல்தரப்பு** | | | | | | | | | | | | | |
| சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | கடன் | 4/22/2021 | இலங்கை ஒருங்கிணைந்த நீர்நிலைய மற்றும் நீர்வள முகாமைத்துவத் திட்டம் - சலுகைக் கடன் | எக்ஸ் டிஆர் | 31.4 | 8851.6 | 31.4 | நிலையான | பாவனையில் இல்லை | 1.25 | சேவைக் கட்டணம் 0.75% உறுதியளிப்புக் கட்டணம் 0.25% | 5 | 29 |
| | கடன் | 4/22/2021 | இலங்கை ஒழுங்கிணைந்த நீர்நில மற்றும் நீர்வள முகாமைத்துவத் திட்டம் - சலுகையல்லாக் கடன் | ஐ.அ. டொ. | 26.7 | 5,126.4 | 26.7 | மாறக்கூடிய | ஐ.அ. டொலருக்கான LIBOR | பாவனையில் இல்லை | ஆரம்ப - முடிவுக் கட்டணம் 0.25% | 5 | 29 |
| **ஏற்றுமதிக் கடன்** | | | | | | | | | | | | | |
| ஹங்கேரியின் எக்சிம் வங்கி | கடன் | 4/1/2021 | கொகுவெல மற்றும் கட்டம்பேயின் Flyover கட்டுமாணம் | யூரோ | 52 | 12,143.6 | 60.9 | வட்டியில்லாக் கடன் | | | பாவனையில் இல்லை | 10 | 37 |
| **மொத்தம்** | | | | | | **129,076.6** | **633.8** | | | | | | |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு : LIBOR = லண்டன் வங்கியிடை வழங்கு விகிதம், வெவ்வேறு நாணய அலகுகளில் உறுதியளிப்புச் செய்யப்பட்ட நிதிப் பெறுமதிகள் யாவும் ஒவ்வொரு உடன்படிக்கைத் திகதியின் போதும் நிலவிய நாணய மாற்று விகிதங்களுக்கு அமைவாக ஐ.அ.டொலர்களுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

### வெளிநாட்டு நிதியளிப்பு பகிர்வுகள் மற்றும் பயன்பாடு

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது பகிரப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதியளிப்புப் பகிர்வுகள் ஐ.அ.டொ.856.4 மில்லியனாக காணப்பட்டதோடு,அதில் ஐ.அ.டொ.855.8 மில்லியன் கடன் என்ற வகையிலும் மற்றும் ஐ.அ.டொ.0.6 மில்லியன் மானியங்கள் என்ற அமைப்பிலும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான கடன் பகிர்வுகள் சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகளிலிருந்து பெறப்பட்டுள்ளதோடு, அது பெரும்பாலும் 60 சதவீதத்தினைக் கொண்டுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து உலக வங்கி (16 சதவீதம்) ஆசிய அபிவிருத்தி வங்கி (13 சதவீதம்) மற்றும் யப்பான் (5 சதவீதம்) என நிதிப் பகிர்வுகளை மேற்கொண்டுள்ளன.

**அட்டவணை 4.2 :2021 சனவரி 1 முதல் ஏப்பிரல் 30 வரையில் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களின் பகிர்வுகள்**

| அபிவிருத்தி பங்காளர் | பகிர்வுகள்ழூ (ஐ.அ.டொலர் மில்லியன்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **590.9** | - | **590.9** |
| சீனா** | 514.9 | - | 514.9 |
| யப்பான் | 42.1 | - | 42.1 |
| பிரான்சு | 2.7 | - | 2.7 |
| இந்தியா | 13.0 | - | 13.0 |
| ஐக்கிய இராச்சியம் | 2.9 | - | 2.9 |
| நெதர்லாந்து | 3.0 | - | 3.0 |
| அவுஸ்திரியா | 4.4 | - | 4.4 |
| குவைத் | 6.0 | - | 6.0 |
| ஸ்பெயின் | 0.5 | - | 0.5 |
| கொரியா | 0.6 | - | 0.6 |
| சவுதி | 0.8 | - | 0.8 |
| **பல்தரப்பு** | **264.9** | **-** | **265.2** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 113.6 | - | 113.6 |
| உலக வங்கி | 134.4 | 0.6 | 135 |
| ஏஐஐபீ | 9.0 | - | 9.0 |
| ஐஎப்ஏடீ | 1.3 | - | 1.3 |
| ஒபெக் நிதியம் | 6.6 | - | 6.6 |
| **மொத்தம்** | **855.8** | **0.6** | **856.4** |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்


குறிப்பு : வித்தியாசமான நாணய அலகுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பகிர்வுகளை ஐ.அ.டொலரிற்கும் ரூபாவிற்கும் மாற்றியமைப்பதிற்காக 2021 ஏப்பிரல் 30 ஆம் திகதியில் காணப்பட்ட செலாவணி வீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

* தற்காலிகமானது

** சீன அபிவிருத்தி வங்கியினால் விரிவுபடுத்தப்பட்ட ஐ.அ.டொ.500 மில்லியன் வெளிநாட்டு நாணய நியதி நிதியளிப்பு வசதியினை உள்ளடக்குகிறது.

கொடுப்பனவு மீதி ஒத்துழைப்பிற்காக பெறப்பட்ட ஐ.அ.டொ.500 மில்லியன் கடன் தவிர்ந்த ஏனையவைகள், மொத்த நிதிப் பகிர்வுகளின் பெரும்பாலும் 13 சதவீத்திற்கு பொறுப்புக் கூறுகின்ற வீதிகள், மற்றும் பாலங்கள் துறையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்குப் பதிலானவையாக காணப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடுகள் துறைக்கு 5 சதவீதமும், சுகாதாரம் மற்றும் நலனோம்புத் துறைக்கு 5 சதவிதத்திலும் தரை வழிப் போக்குவரத்துத் துறைக்கு 3 சதவீதத்திலும், வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தித் துறைக்கு 3 சதவீதத்திலும், கல்வி மற்றும் பயிற்றுவிப்புக்கு 3 சதவீதத்திலும் மின் மற்றும் எரிசக்தி துறைக்கு 2 சதவீதத்திலும் நிதிப் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வரைபு 4.1 : 2021 சனவரி 01 முதல் ஏப்பிரல் 30 வரை துறை ரீதியான நிதிப் பகிர்வுகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**





மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியிளவில், அடுத்து வருகின்ற 3-5 ஆண்டுகளில் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட கிடைப்பனவாகவுள்ள கடன்களிலிருந்து வெளிநாட்டு நிதியளிப்பின் பகிரப்படாத மொத்த மீதி ஐ.அ.டொ.8,003.9 மில்லியனாக காணப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி பெரும்பான்மையான நிதிப் பகிர்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளதோடு எஞ்சிய பகுதியானது சீனா, உலக வங்கி மற்றும் யப்பான் என்பனவற்றினால் பகிரப்படவுள்ளன.


உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதியில் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையில் கிட்டத்தட்ட 20 சதவீதம் பயன்படுத்தப்படவுள்ளதோடு, நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டில் 19 சதவீதமும் தரைவழிப் போக்குவரத்துத் துறையில் 14 சதவீதமும் பயன்படுத்தப்படவுள்ளன.

**வரைபு 4.2 : 2021 ஏப்பிரல் 30 வரையான அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி (ஐ.அ.டொல. மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**வரைபு 4.3 :2021 ஏப்பிர்ல 30 வரையில் அபிவிருத்தித் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு துறை ரீதியாக உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி (ஐஅ.டொ. மில்லியன்)**





மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### வெளிநாட்டு படுகடன் இருப்பு மற்றும் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியிளவில், அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலுவை ஐ.அ.டொ.35.1பில்லியனாக காணப்பட்டது.2021 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கான மொத்த படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொ.981.0 மில்லியனாக காணப்பட்டதோடு, அதில் ஐ.அ.டொ.520.6 மில்லியன் முதல் மீள்கொடுப்பனவும் எஞ்சிய ஐ.அ.டொ.460.4 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வரைபு 4.4 : 2021 சனவரி முதல் ஏப்பிரல் வரையான படுகடன் சேவை கொடுப்பனவுகள் மற்றும் 2021 இன் எஞ்சிய காலத்திற்கான எதிர்வுகூறல் (ஐ.அ.டொ. மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்